ஜூன்
2009


# ஞானம் 109

கலை இலக்கியச் சஞ்சிகை

**பெண் விடுதலை நோக்கி...**
-சந்திரகாந்தா முருகானந்தன்

**ஈழத்தமிழ் மக்களுக்காய்...**
-கண்ணன்

**நான் கடவுள்** திரைப்பட விமர்சனம்





மலையக எழுத்தாளர்
கலாபூஷணம் அந்தனி ஜீவா

விலை: 50/=

www.gnanam.info

ஒளி – 10 சுடர் – 01

**பகிர்தலின் மூலம்
விரிவும்
ஆழமும்
பெறுவது
ஞானம்**

ஆசிரியர் :
**தி. ஞானசேகரன்**

இணை ஆசிரியர் :
**ஞானம் ஞானசேகரன்**

ஓவியர்கள் :
**கௌதமன்**

தலைமை அலுவலகம் :
**19/7, பேராதனை வீதி, கண்டி.**

தொடர்புகளுக்கு... :
**தி. ஞானசேகரன்
ஞானம் கிளை அலுவலகம்
3-B, 46ஆவது ஒழுங்கை,
கொழும்பு – 06.
தொலைபேசி : 011 –2586013
0777–306506
+61 02 80077270
தொலைநகல்: 2362862
E-mail : editor@gnanam.info
Web : www.gnanam.info**

**வெளிநாட்டு, உள்நாட்டு
வங்கித் தொடர்புகள்:
Swift Code :- HBLILKLX
T. Gnanasekaran
Hatton National Bank -
Wellawatte Branch
A/C No. 009010309024**

# இதழினுள்ளே ...


- ***கவிதைகள்***

| | |
|---|---|
| கண்ணன் | 06 |
| வன்னேரி ஐயா | 15 |
| எஸ். முத்துமீரான் | 27 |
| த. அருமைநாயகம் | 39 |
| ஜின்னாஹ் | 42 |

- ***கட்டுரைகள்***

| | |
|---|---|
| ப. ஆப்டீன் | 03 |
| கலாநிதி முல்லைமணி | 10 |
| பூ. சோதிநாதன் | 15 |
| சந்திரகாந்தா முருகானந்தன் | 16 |
| சிற்பி | 21 |
| அன்புமணி | 23 |
| அந்தனி ஜீவா | 31 |

- ***சிறுகதைகள்***

| | |
|---|---|
| மு. ஜெயசீலன் | 07 |
| சிவனுமனோஹரன் | 13 |
| கா. தவபாலன் | 18 |
| யாழ்நிலா | 19 |
| வேல் அமுதன் (குறுங்கதை) | 26 |
| சிவா சண்முகம் (குறுங்கதை) | 26 |

- ***நேர்காணல்***

| | |
|---|---|
| தெளிவத்தை ஜோசப் | 28 |

- ***சினிமா விமர்சனம்*** 35

- ***சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்***

| | |
|---|---|
| குறிஞ்சிநாடன் | 37 |

- ***பத்தி எழுத்து***

| | |
|---|---|
| மானாமக்கீன் | 24 |
| துரைமனோகரன் | 33 |
| கே. விஜயன் | 40 |

- ***நூல் மதிப்புரை***

| | |
|---|---|
| குறிஞ்சிநாடன் | 43 |

- ***வாசகர் பேசுகிறார்*** 45


ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல் வேண்டும். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு. – ***ஆசிரியர்***

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.

# நல்லிணக்கப் பாதையில் அரசு பயணிக்குமா?

கடந்த மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டதென அரசாங்கம் அறிவித்துள்ளது. பெரும்பான்மை மக்கள் வெற்றிக் களிப்பில் தொடர்ந்தும் இருந்து வருகின்றனர். இது தொடர்பான கொண்டாட்டங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. இந்த வெற்றிக் களிப்பில் சிறுபான்மையினரின் அபிலாசைகளைப் பெரும்பான்மையினர் மறந்துவிடக்கூடாது.


சிறுபான்மை மக்களுடைய அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டு வந்தமையே இந்த யுத்தம் தோன்றுவதற்கும், மூன்று தசாப்தங்களாக இழுபட்டு வந்தமைக்கும் மூலகாரணம் என்பதை யாவரும் நன்கு அறிவர். சிறுபான்மை மக்களின் உரிமைகள் மறுக்கப்படும்வரை நாட்டில் பிரச்சனைகள் தீர்ந்துவிடப் போவதில்லை.

ஏற்கனவே கூறப்பட்டது போல சிறுபான்மை மக்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். மேலும் காலம் தாழ்த்துவதால் பிரச்சனைகள் குறைவதற்குப் பதிலாக மேலும் சிக்கலடைய வாய்ப்புண்டு.

இந்த யுத்தத்தினால் சொல்லொணாத் துன்பங்களையும் இறப்புக்களையும் அவலங்களையும் எதிர்கொண்ட சமூகமாக தமிழ்ச் சமூகம் உள்ளது. யுத்தம் நடைபெற்றுவந்த காலப் பகுதியில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணையின்றி பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் அப்பாவி இளைஞர்கள், யுவதிகள், கல்விமான்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் அடங்கியுள்ளனர். இவர்கள் அனைவரையும் விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

போர்ச்சூழலில் அகப்பட்டுப் பாதிக்கப்பட்ட லட்சோபலட்சம் மக்கள் தற்காலிக முகாம்களில் தற்போது உயிர்வாழப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மக்களுக்கு உடனடியான மனிதாபிமான நிவாரணம் சென்றடைவதை உறுதிப்படுத்துவதும் துரிதமாகப் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதும் உடனடித் தேவையாகும்.

நீண்டகால யுத்தம் முடிவுக்கு வந்துவிட்ட நிலையில், இனி நாட்டின் அபிவிருத்தி பற்றிச் சிந்திக்க வேண்டியதும் அரசின் நிலைப்பாடாகும். அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால் சகல இன மக்களினதும் துன்பங்கள் துயரங்கள் அபிலாசைகள் ஆகியவற்றிற்குப் பரிகாரம் காணும் இறுதியான அரசியல் தீர்வு காணப்படுதல் மிகமுக்கியமானதாகும். சகல சமூகங்களையும் அரவணைத்து நல்லிணக்கப் பாதையில் அரசு பயணிப்பது இன்றைய காலகட்டத்தின் உடனடித் தேவையாகும்.



# பன்முகக் கலை ஆளுமைகளைக் கொண்டவர் மலையக எழுத்தாளர் அந்தனி ஜீவா

- ப. ஆப்டீன்

மலையகக் கலை இலக்கிய வரலாற்றை உன்னிப்பாக ஆராய்ந்து பார்க்கும் பொழுது, காலத்துக்குக் காலம் கலை இலக்கிய வளர்ச்சிக்காகவே தமது வாழ்க்கையை அர்ப்பணித்த, அர்ப்பணிக்கும் பெருந்தகைகளை நாம் புறம்பாகவே பட்டியல் போட்டுக் காட்டலாம்.

அந்த வரிசையில், நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக, வாழ்க்கையை விலை கொடுக்கும் அந்தனி ஜீவா குறிப்பிடத்தக்கவர்.

தனது 65வது வயதை எட்டிப்பிடித்த கலாபூஷணம் அந்தனி ஜீவா ஒரு பிறவிக் கலைஞர்.

பாடசாலை நாட்களிலேயே இலக்கியத்துறையில் பிரவேசித்து, 'மாணவன்', 'தமிழருவி', 'திருமகன்', 'கலைமலர்', 'மாணவமலர்', 'மாணவர் முரசு' போன்ற சிறு சஞ்சிகைகள் பத்திரிகைகளில் எழுதத் தொடங்கி, தமது எழுத்துப் பணியை ஆரம்பித்தவர்.

அந்தப் பணியும், பயிற்சியும், நீண்ட தசாப்த கால அனுபவமும் அவரை ஒரு தேர்ந்த எழுத்துச் சிற்பியாக நம் கண்முன்னே நிறுத்தியிருக்கிறது.

எந்தக் கோணங்களிலிருந்து அவதானித்தாலும் மலையகக் கலை இலக்கிய வளர்ச்சியையே தமது மூச்சாகக் கொண்டு உழைத்து வந்துள்ளார்கள்.

அந்தனி ஜீவா இலங்கையில் மட்டுமல்ல தமிழ்நாட்டிலும், தமிழ் பேசும் உலக நாடுகளிலும் மலையகத்தின் மேம்பாட்டுக்காக, தகவல்கள் நிறைந்த கட்டுரையாக்கங்கள் மூலம் தமது இலக்கியச் சுவடுகளைப் பதிவு செய்துள்ளார்.

தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் 'முகம்' என்னும் சிறு சஞ்சிகையில் இவரது வர்ணப்புகைப்படத்தை அட்டையில் முகப்போவியமாகப் பதித்து சிறப்புக்கட்டுரையும் எழுதியுள்ளார் அச் சஞ்சிகையின் சிறப்பாசிரியர் முனைவர் இளமாறன் அவர்கள். அதேபோல 'இனிய நந்தவனம்' என்னும் மக்கள் மேம்பாட்டு மாத இதழ் பிப்ரவரி 2006இல் வர்ண முகப்போவியமாக இவரது புகைப்படத்தைப் பிரசுரித்ததோடு நேர்காணல் கட்டுரையும் பிரசுரித்தது.

இலங்கையில் 44 ஆண்டுகளாக வெளியாகிக் கொண்டிருக்கும் 'மல்லிகை' மாதச் சஞ்சிகையும் பெப்ரவரி 2004ம் ஆண்டு அட்டைப்பட ஓவியமாக இவரது புகைப்படத்தை பிரசுரித்துள்ளது. 'கலை இலக்கிய பன்முகச் செயற்பாட்டாளர் அந்தனி ஜீவா' என்ற தலைப்பில் மறைந்த முற்போக்கு எழுத்தாளர் நா. சோமகாந்தன் மல்லிகையில் தமது சிறப்புக்கட்டுரையை பதிவு செய்துள்ளார்.

அந்தனி ஜீவாவின் கட்டுரை ஆக்கங்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளில் வெளியாகும் தமிழ்ப் பத்திரிகை சஞ்சிகைகளிலும் இடம்பெற்றுள்ளன.

எனது கலை இலக்கியச் செயற்பாடுகள் எனக்களிப்பது ஊதியமல்ல, உயிர்...' என்று கூறும் அந்தனி ஜீவா, தம்மை அர்ப்பணித்துக் கொண்டு நறுமணம் வீசிக் கொண்டிருக்கும் மலையக ஊதுவர்த்தி...! என்று கூறுவது மிகையல்ல.

இவருக்கு எத்தனை புனைபெயர்கள் என்று ஞாபகமில்லை.

'கண்டியூர் கண்ணன்' 'மாத்தளை கௌதமன்' 'கவிதா' என்று பல பெயர்கள் இருந்தாலும் அந்தனி ஜீவா என்னும் பெயரே இலக்கிய உலகில் முத்திரை பதித்து, நிலைத்து பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

சொல்லப் போனால் இவரது ஆளுமையும் ஆற்றலும் ஆழமாக ஊடுருவிச் சென்று, நூற்றாண்டு பழமை வாய்ந்த மலையகக் கலை இலக்கியம் புத்துயிர் பெற்றிருக்கிறது என்பதுதான் உண்மை.

அன்று தொடக்கம் இன்றுவரைக்கும் தமிழ் இலக்கியத்திற்கு, குறிப்பாக மலையகத் தமிழ் இலக்கியத்திற்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் அயராது உழைத்தவர்களையும், ஊழியம் செய்பவர்களையும் மனதிற் கொண்டு மீண்டும் மீண்டும் அறிமுகம் செய்து இலக்கிய வரலாற்றில் பதிவு செய்வது அந்தனி ஜீவா அவர்களுக்கு கைவந்த கலை.

அதுவும் மலையக மக்களின் விழிப்புணர்ச்சிக்காக இலக்கியம் படைத்தவர்களை வளரும் இளைய தலைமுறையினருக்கு அறிமுகம் செய்து வருவது குறிப்பிடத்தக்கதொரு இலக்கியப் பணியாகும்.

'மலையக மாணிக்கங்கள்' என்னும் தனது நூலில் உழைக்கும் வர்க்கத்தின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்த பன்னிருவர் பற்றிய தகவல்கள், புதியவர்களுக்கு புதிய தகவல்கள் என்பதில் சந்தேகமில்லை.

அதே நேரத்தில் 'புதிய வார்ப்புகள்' என்ற தொகுதி இளைய தலைமுறையினரைப் பற்றிய தகவல்கள் நிறைந்த நூலாகும்.

இவ்வாறு 'பெண் பிரமாக்கள்' 'மலையகம் வளர்த்த கவிதை' 'குறிஞ்சி மலர்கள்' 'அம்மா' என்று விரிகிறது நூற்பட்டியல்.

அண்மைக்காலமாக அந்தனி ஜீவா அவர்களின் மேடைப் பேச்சுகளிலும், எழுத்துக்களிலும் நிறைய நிறைய தகவல்கள் அடங்கியிருப்பதை ஊன்றிக் கவனிக்கலாம். உண்மையில் கலை இலக்கியத் தகவல் பெட்டகமாகத் திகழ்ந்தாலும் எல்லாரையும் கவரும் ஒரு புதிய வீச்சும் தென்படுகிறது. பல தசாப்தகால அனுபவ முதிர்வின் வெளிப்பாடே அதுவெனலாம்!

இனி, மலையக எழுத்தாளர் அந்தனி ஜீவா ஒரு சிறந்த தொகுப்பாசிரியர் மட்டுமல்ல, ஒரு நல்ல படைப்பாளியாகவும் இனங்காணப்பட்டுள்ளார். மறைந்த மூத்த முற்போக்கு எழுத்தாளர் செ. யோகநாதன் தொகுத்த இந்த நூற்றாண்டின் சிறந்த சிறுகதைகள்' என்ற ஈழத்துச் சிறுகதைத் தொகுப்பில் இவரது சிறுகதையும் இடம்பெற்றிருக்கிறது.

செ. யோகநாதன், அந்தனி ஜீவா முதற்சந்திப்பு சுவாரஸ்யமானது.

செ.யோ. அவர்களே 'கலகக்காரனான ஒரு கலைஞன்' என்ற தலைப்பில் அந்தனி ஜீவா பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார் :–

"பல ஆண்டுகளின் முன்னே தமிழகத்தில் இலக்கியக் கருத்தரங்கொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. கருத்தரங்கில் பேசியவர்களது உரை முடிந்ததும், பங்கு பற்றியோரின் அபிப்பிராயங்கள் கேட்கப்பட்டன. அப்போது இளைஞர் ஒருவர் மேடைக்குச் சென்றார். தமிழ் இலக்கிய மறு மலர்ச்சிக்கு, இலங்கை மலையகம் செய்துள்ள, செய்கின்ற பங்களிப்பை விரிவாகவும், தெளிவாகவும், கொஞ்சம் ஆக்ரோஷமாகவும் பேசினார். நடேசய்யர் என்ற அர்ப்பணிப்பான மனிதரின் அரசியல், பத்திரிகைப் பங்களிப்பைப் பற்றிக் கூறிவிட்டு, "இவை யாவற்றையும் தெரிந்து கொள்ளாமல், தமிழ்ப் பண்பாட்டு, எழுத்துப் பங்களிப்புக்களைப் பற்றி நீங்கள் எப்படி அதிகாரபூர்வமாகப் பேசமுடியும்? என்று கேட்டார். எல்லாரது மன வெளியிலும் அந்தக் கேள்வி ஒரு சுட்டு விரலாக வியாபித்து நின்றது. இதை அங்கு நிலவிய பிசிறற்ற மௌனம் சத்தமிட்டுக் கூறியது. நான் திகைத்துப் போய்விட்டேன், கூட்டத்திலிருந்து ஒருவர் எழுந்து, "நீங்கள் யார்?" என்று கேட்டார்.

"என் பேர் அந்தனி ஜீவா. நான் இலங்கையிலிருந்து வந்த எழுத்தாளர்." என்றார் இளைஞர்.

ஏற்கனவே அந்தனி ஜீவாவைப் பற்றி நான் அறிந்திருந்தாலும் முதன் முதலில் அப்போது தான் நான் நேரில் சந்தித்துப் பேசினேன். அந்த நட்பு மேலும் மேலும் நெருக்கமான தோழமையாகப் பரிணமித்தது.

அந்தனி ஜீவா அவர்களின் பரந்த பத்திரிகைத் துறை பங்களிப்பு பற்றி விரிவாகக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. சஞ்சிகைகளிலும், வாராந்த பத்திரிகைகளின் இலக்கிய மஞ்சரிகளிலும் அவரின் கட்டுரையாக்கங்கள் பிரசுரமாகிக் கொண்டிருக்கின்றன.

அந்தனி ஜீவா நாடகத்துறைக்கு ஆற்றியுள்ள பங்களிப்பு விரிவாகவும் தனியாகவும் ஆய்வு செய்ய வேண்டிய தொன்றாகும்.

பல தசாப்தங்களுக்கு முன்பே மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு எழுதி மேடையேற்றப்பட்ட 'அக்கினிப்பூக்கள்' நாடகம், இன்றும் நாடளாவிய ரீதியில் பாராட்டப்படும் ஒரு சிறந்த நாடகமாகும்.

பல தடவைகள் மேடையை அலங்கரித்த இந்நாடகம் பின்னர் ஞானம் பதிப்பகத்தினால் நூலாகவும் வெளியிடப் பட்டுள்ளது. இந்நூல் 1999ம் ஆண்டு சாகித்திய விருதைப் பெற்றுக் கொண்டது.

'அக்கினிப் பூக்கள்' நாடகத்தை விட அந்தனி ஜீவாவுக்கு ஈழத்துத் தமிழ் நாடகத் துறையில் பெயரும் புகழும் ஈட்டித் தந்தது 'முள்ளில் ரோஜா' என்னும் நாடகமாகும். இந்நாடகம் பன்னிரண்டு நாட்களுக்கு மேல் தொடர்ச்சியாக மேடையேற்றப்பட்டது.

1978ம் ஆண்டு 'அலைகள்' நாடகம் இலங்கை கலாசாரப் பேரவையின் நாடக விழாவில் பரிசு பெற்றது.

மலையகத்தில் வீதி நாடகங்களை முதன் முதலில் அறிமுகப்படுத்தி வைத்தவர் அந்தனி ஜீவா.

'வெளிச்சம்' 'சாத்தான் வேதம்' ஓதுகிறது போன்ற வீதி நாடகங்கள் இன்றும் ஞாபகத்தில் நிழலாடுகின்றன. பிற்காலத்தில் ஒரு சிறந்த நாடக நெறியாளராகவும் வளர்ச்சி பெற்றுள்ளார்.

இவ்வாறாக அந்தனி ஜீவாவின் நாடகத்துறை ஆளுமைகளை இன்னும் விரிவாக ஆராய போதிய ஆதாரங்கள் மலையகத்தில் பொதிந்து கிடக்கின்றன! அவற்றையெல்லாம் வெளிக்கொணர்வது நாடக ஆய்வாளர்களின் கடமையாகும்.

அந்தனி ஜீவா அவர்களுக்கு சிங்கள மொழியில் ஆற்றல் இருந்ததன் காரணமாக, சிங்கள கலை இலக்கிய வாதிகளுடன் தொடர்பும் மரியாதையும் ஏற்பட்டன!

இன, சாதி, மத, மொழி பிரதேச வேறுபாடுகள் அந்தனி ஜீவாவை நெருங்க மறுத்தன.

ஒரு காலத்தில் சமசமாஜக் கட்சியின் 'ஜனசக்தி' பத்திரிகையின் ஆசிரிய பீடத்தை அலங்கரித்தார். தவிர 'தேசபக்தன்' குன்றின் குரல், கொழுந்து என்று பல சஞ்சிகை பத்திரிகைகளின் ஆசிரியப் பொறுப்புக்களைச் சுமந்து ஆக்கபூர்வமான இலக்கியக் கருத்துக்களை ஆழப்பதித்துள்ளார்.

அண்மைக்காலமாக இவர் தினக்குரல் ஞாயிறு இதழில் 'பார்வையின் பதிவுகள்' தொடரிலும் வீரகேசரியில் புதன் தோறும் பூக்கும் 'சூரியகாந்தி'யிலும் எழுதிவரும் பத்திகள் இலக்கியவாதிகளின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளன.

மூத்த தலைமுறை கலைஞர்கள் எழுத்தாளர்களை மட்டுமல்ல இளைய தலைமுறையினரையும் இணைத்து உள்ளடக்கங்களைக் கனதியாக அமைக்கிறார்.

மலையகப் பிரதேசத்தின் இலக்கிய வளர்ச்சியைப் பின்னணியாகக் கொண்டிருந்தாலும் இவரது ஆக்கங்கள் இலங்கையை முழுமையாகப் பிரதிபலித்துக் காட்டுவது இவரது எழுத்துக்களில் காணப்படும் ஒரு சிறப்பம்சமாகும்.

நாடளாவிய ரீதியில் ஆங்காங்கே நடைபெறும் இலக்கியக் கூட்டங்கள், இலக்கியச் சந்திப்புகளில் சமூகமளித்து, எழுத்தாளர்கள் கலைஞர்களைச் சந்தித்து உரையாடுவது இவரது இலட்சியம். மலையகப் பகுதிகளில் இளைஞர்களுக்கு

இலக்கியம் தொடர்பான பயிற்சிப்பட்டறைகள் நடாத்துவதற்கு இவர் பின்னணியாகச் செயற்படுவது கண்கூடு.

அடிக்கடி தமிழ்நாட்டிற்கு பயணிக்கும் அந்தனி ஜீவா அங்கு பல தமிழ் எழுத்தாளர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ளார்.

ஈழத்து எழுத்தாளர்களையும் அவர்களின் படைப்புகளையும் தமிழ்நாட்டிற்கு அறிமுகம் செய்வதில் அவர் பின் நிற்பதில்லை.

இறுதியாக அந்தனி ஜீவா அவர்களின் நூல் வெளியீட்டுத் திட்டம் சம்பந்தமாகச் சொல்லப்போனால், வசதியின்மை காரணமாக தமது ஆக்கங்கள் நூல் வடிவம் பெறுமா என்று தவிக்கும் இருபத்து நான்கு படைப்பாளிகளின் நூல்களை மலையக வெளியீட்டகம் ஊடாக வெளியிட்டிருப்பது அவரின் மலையக இலக்கியச் சாதனைகளுக்கு சான்று பகரும் ஆதாரங்களாக அமைந்துள்ளன. தவிர அந்தனி ஜீவா சுயமாக எழுதி வெளியிட்ட நூல்களின் வரிசைக்கிரமம் பின்வருமாறு சுட்டிக்காட்டலாம்.

1. ஈழத்தில் தமிழ் நாடகம்.
2. அன்னை இந்திரா காந்தி.
3. நடேசய்யர்.
4. மலையகமும் இலக்கியமும்.
5. மலையகத் தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு.
6. மலையகம் வளர்த்த தமிழ்.
7. கண்டி மாவட்டத் தமிழர்களின் வரலாற்றுப் பதிவுகள்.
8. திருந்திய அசோகன்.
9. நெஞ்சில் பதிந்த ஐரோப்பிய பயணம்.
10. மலையகத் தொழிற்சங்க வரலாறு.

போன்றவை நினைவில் நிற்கும்.

ஓர் இந்திய வம்சாவழித் தோன்றலின் பன்முகப்பட்ட ஆளுமைகளை ஓரளவு மேலெழுந்த வாரியாக, சில குறிப்புகளினூடாக தொட்டுக்காட்டும் முயற்சி இது.

அந்தனி ஜீவா அவர்களுக்கு பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

மிக விரைவில் அவர் தமது சுயவரலாற்றை நூல் வடிவில் இலக்கிய உலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.


## இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் நடத்தும்
## புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் நூற்றாண்டு விழா
## சர்வதேச மரபுக் கவிதைப் போட்டி - 2009

**கவிதைப் போட்டிக்கான போட்டி விதிகள் :**

**1. இன, மத, மொழி, நாடுசார் நல்லிணக்கத்தைப் பிரதிபலிப்பவையாகக் கவிதைகள் அமைந்திருத்தல் வேண்டும், 2. கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 80 வரிகளுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும், 3. கவிதைகள் எவ்விதப் பாவினத்திலும் அமையலாம், 4. ஏற்கனவே நூல்களிலோ ஊடகங்களிலோ வெளிவராதவையாக கவிதைகள் அமைந்திருத்தல் வேண்டும், 5. கவிதை தமது சொந்தப் படைப்பு என்பதைத் தனியான கடிதம் மூலம் போட்டியில் பங்கு பெறுபவர் உறுதிப்படுத்தல் வேண்டும், 6. கவிதைப் பிரதியில் பெயர், முகவரி என்பன குறிப்பிடப்படலாகா, 7. இஸ்லாமிய இலக்கிய ஆய்வக உறுப்பினர்கள் எவரும் போட்டியில் கலந்து கொள்ள முடியாது, 8. கவிதைகளை அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் திகதி 15.06.2009, 9. இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தினால் நியமிக்கப்படும் நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகும், 10. போட்டி முடிவுகளும் பரிசுக் கவிதைகளும் தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும், 11. பரிசளிப்பு விழா பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | : | 25,000 ரூபாய்ப் பணப்பரிசும் விருதும் சான்றிதழும் |
| இரண்டாம் பரிசு | : | 12,500 ரூபாய்ப் பணப்பரிசும் விருதும் சான்றிதழும் |
| மூன்றாம் பரிசு | : | 7,500 ரூபாய்ப் பணப்பரிசும் விருதும் சான்றிதழும் |

**இவற்றுடன் தெரிவு செய்யப்படும் பத்துச் சிறந்த கவிதைகளுக்கு சான்றிதழும் தலா 1000 ரூபாய்ப் பரிசும் வழங்கப்படும்.**

**கவிதைகளை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :**

**Dr. Thassim Ahamed**
National Co ordinator
Sri Lanka Islamic Literary Research Forum
09, Saounder’s Court, Colombo - 02.

# ஈழத் தமிழ் மக்களுக்காய்...

ஐந்து கரத்துடனே அருள் வடிவம் காட்டி நிற்கும் எந்தை
விநாயகனே ஏரம்ப கணபதியே
உந்தன் அடியினையே உறுதியாய் பற்றியிங்கே
எங்கள் தமிழினத்தைக் காத்திடவே இறைஞ்சுகின்றோம்.

கலியுக வரதா கருணைமிகு கதிர்வேலா
அரிய தமிழ்க் கடவுள் என்றே அவனியது போற்றுதுன்னை
தெரியலையோ உனக்கு அங்கே சிதைந்தழியும் தமிழ்க் கோலம்
இனியும் என்னே புன்முறுவல் எமைக் காக்க வாராயோ!

அன்பு செய்ய யாரும் இல்லை ஆதரவாய் அயலும் இல்லை
அன்றாடம் அபலை மக்கள் அழிந்தாலும் கவலை இல்லை
வேதனையைப் போக்கிடவே வெளியுலகும் நினைக்கவில்லை
சோதனைகள் போதுமையா சுடர் காட்டி எமைக் காப்பாய்!

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடவே
பாற்கடலை ஈந்தளித்த பராபரனே ஈஸ்வரனே
பாலுமின்றி நீருமின்றி பரிதவித்தே பாலகர்கள்
ஓலமிடல் உன் காதில் ஒலிக்கலையோ நீ செவிடா!

மன்னவனின் கொடுங்கோலால் மனம் வெதும்பி அன்றங்கே
மாமதுரை தனை எரித்த மாமகளே கண்ணகியே
இன்று உந்தன் கண் முன்னே இக்கொடுமை நடக்குதங்கே
இதை நீயும் காணாயோ எமைக் காக்க வாராயோ!

பாலூட்ட அன்னையில்லை படுத்திருக்க மடியும் இல்லை
தேரோடும் வீதியெல்லாம் செங்குருதி ஓடுதங்கே
தாம் வாழ்ந்த மண்ணில் மக்கள் தலை சிதறிப் போதல் கண்டும்
நீங்காதோ நின் திரையும் நீ இரங்கமாட்டாயோ!

வனவிலங்கின் வாழ்வுரிமை வரைந்திடுவார் சட்டமதில்
இனம் ஒன்றே அழியுதங்கே இதை யாரும் காணாரோ
மனம்குமுறி அழுகின்றோம் மன்றாடி வேண்டுகின்றோம்
பெருங்கருணை வடிவான பெருமான் கண் பாராயோ !

காருண்யம் தனைச் சொன்ன கருணைவடி வானவரின்
பேர்கொண்டு அரசாளும் பெரியவர்கள் மனம் தன்னில்
நீ சென்று உரைக்காயோ நிம்மதியாய் எம் மக்கள்
வாழ்வொன்று தனைக் காண வடிவேலா அருளாயோ !

மழலைச் சிரிப்புடனே மடிதவழும் குழந்தையுடன்
முதுமை நிலை கண்ட முதியவரும் பெண்களுமே
குருதிக் கடலினிலே குற்றுயிராய்க் கிடப்பதென்னே
இதனை நீ காணாயோ நின் விழியும் குருடாச்சோ !

நித்தம் அங்கே சாகின்றார் நெடுந் துயரில் மாய்கின்றார்
கற்றவரோ மற்றவரோ கதை பேசி ரசிக்கின்றார்
உற்றவராய் யாரும் இல்லை உன் கருணை தான் கதியே
சித்தமது இரங்கி அவர் சீரழிவைப் போக்காயோ !

உண்ண உணவும் இல்லை உறவாட யாரும் இல்லை
கண்ணீர் விட்டு அழ கண்ணிலே நீரும் இல்லை
செந்நீரே கண்ணீராய் சிந்துமவர் பெரும்துயரம்
இல்லாமல் போகட்டும் இறைவா நீ ஆணையிடு !

ஆயிரமாயிரமாய் ஏதிலிகள் ஆகிவிட்டார்
அன்றாடம் உயிர் காக்க அலைந்துழன்று தவிக்கின்றார்
நாம் செய்த பாவமோ நம்மினத்தின் தலை விதியோ
ஏனென்று நாமறியோம் இறைவா நீ தானறிவாய்!

சின்னஞ் சிறிசுகளும் சிதைந்து மண்ணில் கிடக்கின்றார்
சீர்நிறை நம் சோதரிகள் சீரழிந்து துடிக்கின்றார்
பஞ்சமுடன் நோயும் பலவுயிரை காவுதங்கே
நெஞ்சமது வேகுதிங்கே நீயிரங்க மாட்டாயே!

நெஞ்சினிலே ஊனமுற்றோர் நிகழ்த்திவரும் வன்செயலால்
செந்தமிழின் தேச மக்கள் தினம் தினமும் ஊனமுற்றே
வஞ்சகத்தால் வளமிழந்து வாழ்விழந்து போதல் கண்டு
நெஞ்சமது எரியுதிங்கே நீ தணிக்க மாட்டாயோ!

அன்றாடம் எம் காதில் வந்துவிழும் சேதியெல்லாம்
அடிக்குதெங்கள் இதயமதை ஆயிரமாம் சுத்தியலாய்
ஒன்றாக நாம் கூடி உன் பாதம் பணிந்து விட்டோம்
உலகாளும் இறைவா நீ உன் கருணை காட்டிவிடு!

தாயாக வந்தவனே தான்தோன்றி ஈஸ்வரனே
சேயான நாங்களெல்லாம் செய் பாவம் பெறுத்தருளு
தாளாமல் மனம்வெதும்பி நாம் செய்யும் பிரார்த்தனைகள்
பாழாகிப் போகாமல் பரிவுடன் நீ ஏற்றருள்வாய்!

ஆண்டவனே அவர்கள் படும் அல்லல்கள் நீக்கி விடு
ஆதரவாய் ஒரு குரலை அவர்களுக்காய் ஒலிக்கவிடு
தேம்பியழும் குழந்தைமுகம் புன்னகையைப் பூக்கவிடு
தேசமெல்லாம் கூடியவர் சீர் காக்க உணர்த்திவிடு!

இறைவா நீ ஆணையிடு இறைவா நீ ஆணையிடு
எம்மினத்தின் துயர் துடைக்க இறைவா நீ ஆணையிடு
இறைவா நீ ஆணையிடு இறைவா நீ ஆணையிடு
எம்மினத்தின் துயர் துடைக்க இறைவா நீ ஆணையிடு!

– **கண்ணன்,** *தென்கலிபோர்னியா*

# கவ்வாத்துக் களம்

**மு.ஜெயசீலன்**

*கலாபூஷணம் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2008ல் ஆறுதல் பரிசு பெற்ற சிறுகதை*

பனிமூட்டங்கள் மெதுமெதுவாக மலைகளைத் தாண்டிக்கொண்டிருந்தன. இளங்காலைத் தென்றல் இதமாய் வீசியது. நொய்ந்து போய்க் கிடந்த கூரைத் தகரங்களின் ஓட்டை வழிகளில் சூரியக் கதிர்கள் தமது பருத்த உடல்களைத் திணிக்க முயன்றன. புதுக்காட்டுத் தோட்டப் பெண்கள் யாவரும் தத்தமது வேலைகளில் பரபரப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அன்று பௌர்ணமித் தினம் ஆகையால் தேயிலைத் தோட்டத்தில் விடுமுறை. இதனால் பெண்களுள் பலர் தமது வீடுகளினைத் துப்பரவு செய்து, வரண்டு வங்குபரிந்த தரையினை சாணியால் பூசிமெழுகினர்.

எல்லா வீடுகளிலும் பெண்களின் ஆட்சியே மேலோங்கி இருந்தது. ஊரில் எந்த ஆண்களையும் காணமுடியவில்லை. வழமைக்கு மாறாய் இப்பௌர்ணமித் தினத்தில் புதுக்காடு கிராமம் ஆண்களற்று வெறிச்சோடிகிடக்கிறது.

ஒரு வாளியில் சாணியைக் கரைத்த படி வெளியே வந்த செல்லம்மா, பக்கத்து வீட்டு மலரைப் பார்த்து ''பிரச்சினையில்லாமல் வந்திட்டானுங்கனா சரி....'' என்றாள். மலை உச்சியைப் பார்த்த மலர், ''எங்க அக்கா சும்மா வரப்போரானுங்க... ஒவ்வொருமொறயும் கவ்வாத்து சாமி கும்புடும் போதெல்லாம் அடிதடி, வெட்டுக்குத்துதான்.... இன்னும் கொஞ்சத்துல பாருங்க தண்ணியைப் போட்டுட்டு உருண்டு வருவானுங்க....'' என்றாள். வீட்டின் உள்ளே படுக்கையோடு படுகையாகிவிட்ட மலரின் அத்தை ''நேத்தோட கவ்வாத்து வெட்டி முடிஞ்சாச்சா....'' என்று கேட்டாள். அலுத்துக் கொண்ட மலர் ''வெட்டி முடியாமலா? கவ்வாத்து சாமி கும்புடுகிறாங்க'' என்று கூறிக்கொண்டு பீலியை நோக்கி நகர்ந்தாள். இவர்கள் பேசிக் கொண்டிருந்ததை அவதானித்த மலரின் இரண்டாவது குழந்தை, சட்டென வீட்டினுள்ளே ஓடிச் சென்று ''ஏன் ஆச்சி கவ்வாத்து சாமி கும்புடுறாங்க'' என்றாள் குழந்தையை அருகில் அமர்த்திய கிழவி, குழந்தைக்கு விளங்கும் வகையில், ''கவ்வாத்து வெட்டுறதற்கு முதல்ல யாருக்கும் எந்த காயங்களும், நோய்நொடியும் வராம நல்லபடி கவ்வாத்து வெட்டி முடியனுன்னு கவ்வாத்து வெட்டுரவுங்க கவ்வாத்து சாமிக்கு நேர்த்தி வைப்பாங்க, வெட்டி முடிஞ்சதும் எல்லாரும் சேர்ந்து சாமிக்கு கெடா வெட்டி நேர்த்திய முடிப்பாங்க'' என்று கூறி பெருமூச்சுவிட்டாள். இதைக் கேட்டவுடன் குழந்தை சிட்டாய்ப் பறந்தது.

வீட்டு வேலைகளை முடித்த செல்லம்மா அண்ணார்ந்து மலை உச்சியைப் பார்த்தாள்... தனது அங்கங்களை அகலவிரித்த இராட்சத ஆலமரம், அதற்கு அடியில் இறைவனாக உருவகிக்கப்பட்டு பட்டுச் சுற்றிய கல், அதற்கு முன் பூசைப் பொருட்கள், அதில் மூடி திறக்கப்பட்ட நிலையில் ஒரு போத்தல் சாராயம், அதனருகில் பெரிய கத்தியுடன் பூசாரி, சுற்றிவர புதுக்காடு தோட்ட ஆண் தலைகளும் சூழ்ந்திருந்தன. குறிப்பிட்ட சிலர் தத்தமது வேலைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அனைவரையும் பொறுப்பாக வழிநடத்தியபடி பெரியதொரு ஆட்டினை இழுத்து வந்தான் தம்பிராசா.

ஆட்டுக்கு மஞ்சள் நீர் தெளித்ததும் தலையசைத்த ஆடு அனைவரையும் ஒருமுறை சுற்றிப் பார்த்துக் கத்தியது. அதன் வார்த்தையில்லா ஓசையில் பலிக்கிடாக்கள் ஒன்றிணைந்து தன்னைப் பலியாக்குகிறார்களே என்ற ஏக்கம் தொனிப்பதாய் இருந்தது.

ஆடு வெட்டி கறி சமைத்து அனைவருக்கும் பரிமாறப்பட்டது. தம்பிராசா தலைமையிலான குழுவினர் அனைவரையும் சிறப்பாகக் கவனிப்பதில் ஈடுபட்டனர். குடிப்பவர்கள் தாங்கள் வாங்கி வந்த சாராயப் போத்தல்களுடன் குழுக் குழுவாக கற்பாறைகளில் அமர்ந்து ஆட்டிறச்சியின் காரத்தோடு மதுவில் மயங்கினர்.

தன் மகனின் வருகைக்காகக் காத்திருந்த செல்லம்மா, அடிக்கடி மலை உச்சியைப் பார்ப்பதும் வீட்டின் உள்ளே

---

**புதிய தலைமுறைப் படைப்பாளிகள் அறிமுகம் : 37**



**'கவ்வாத்துக்களம்' சிறுகதையை எழுதிய மு. ஜெயசீலன் மலையகத்தைச் சேர்ந்த ரங்கல நிவ் டிவிசனில் 07.11.1986ல் பிறந்தவர். இவர் தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விசேடத்துறை மூன்றாம் வருடத்தில் பயின்று கொண்டிருக்கிறார். இவரது முதலாவது சிறுகதை ரொட்டி பல்கலைக்கழகச் சஞ்சிகையான சிகரத்தில் வெளியானது. பல்கலைக்களகங்களுக்கு இடையிலான (2007–2008) கவிதைப் போட்டியில் இவரது கவிதை இரண்டாம் இடத்தினைப் பெற்றது. இவர் பல்கலைக் கழகச் சஞ்சிகையான இளங்கதிரின் (2008–2009) இதழாசிரியராகவும் இருந்துள்ளார்.**

**இவரது தொடர்பு முகவரி : ரங்கல நிவ் டிவிசன், ரங்கல, கண்டி.**
**தொ.பேசி : 072 4243475, 081 5720208**

செல்வதுமாக தனது வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள்.

இளமாலை மஞ்சள் வெயில் மலைகளைத் தாண்டி தூரச் சென்றது. மிகுந்த களைப்புடன் வீட்டுக்கு வந்த தம்பிராசா, கட்டிலில் அமர்ந்தான். குசினியிலிருந்து வெளியே வந்த செல்லம்மா "என்ன தம்பி பிரச்சினை ஒன்னுமில்லையே" என்று கூறியபடி அவனைப் பார்த்தாள். "பிரச்சினை எதுவுமில்லாம எல்லாம் முடிஞ்சது. ஆனால் ஒவ்வொருத்தரையும் வீட்டுக்கு கொண்டு விடுறதுலதான் போதும் போதுனு ஆயிரிச்சி" என்றான். பெரியதொரு சுமையை இறக்கி வைத்ததைப் போன்ற மனதுடன் குசினிக்குள் நுழைந்த செல்லம்மா மிகுந்த திருப்தியோடு மகனுக்கு தேனீர் கொடுத்தாள். தேனீரைக் குடித்த தம்பிராசா களைப்பாக இருந்ததால் கட்டிலில் சற்று ஓய்வெடுத்தான். உடம்புக்கு ஓய்வாக இருந்தாலும் மனதுக்குள் ஒரு பெரிய போராட்டமே நிகழ்ந்து கொண்டிருந்தது. மனம் ஏனோ அமைதியடையாது நேற்றைய சம்பவங்களையே அசை போட்டது.

காலை அமைதியாகப் புலர்ந்ததும் காலைக் கடமைகளை முடித்த தம்பிராசா கத்தியுடன் வேலைக்குத் தயாரானான். இவனைப் போன்றே ஊரில் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் பதினைந்து, இருபது ஆண்கள் கத்தியுடன் கணபதி கங்காணியின் தலைமையில் கவ்வாத்து வெட்டப் புறப்பட்டனர். இது அனுபவம் வாய்ந்த தளபதியுடன் போருக்குச் செல்லும் படையினரின் அணிவகுப்புப் போல தென்பட்டது.

வேகமாக கவ்வாத்து வெட்டுவதில் ஈடபட்ட இவர்களில் தம்பிராசாவும் இவனது நெருங்கிய நண்பன் சின்னவனும் பக்கத்துப் பக்கத்தில் கவ்வாத்து வெட்டினர். அப்போது தங்கவேல், "தம்பிராசாவும் நல்லா கவ்வாத்து வெட்டப் பழகிட்டான்" என்றதும் அனைவரும் கொல் என்று சிரித்தனர். இதனைக் கேட்டும் கேட்காதவனாய் தலை நிமிராமல் தேயிலைக் கிளைகளை வெட்டிச் சரித்தான் தம்பிராசா.

கோயில் நிர்வாகம், கிராமசேவகர், கணக்கப்புள்ளை போன்றோரைப் பற்றி கதைக்கத் தொடங்கிய அவர்கள் கணவனை இழந்த இளம் விதவையான சீத்தாவைப் பற்றியும் தொடர்ந்து ஈற்றிலே கணபதி கங்காணியிடம் தோட்டத் தொழிலாளர்களான தங்களது சம்பளம் பற்றி கதைக்கத் தொடங்கினர். நிமிர்ந்து பார்த்த தம்பிராசாவும் சின்னவனும் அக்கதையுடன் தங்களையும் இணைத்துக் கொண்டனர்.

ஒரு தேயிலைக் கிளையை வெட்டி இழுத்தவாறு சின்னவன், "கணபதி அங்கல் நமக்கு ஒருநாள் சம்பளம் இருநூறு ரூபா என்று சொல்றாங்க, ஆனால் நூற்றி எழுபது படிதானே சம்பளம் விழுகுது" என்றான். இரக்கத்துடன் சின்னவனைப் பார்த்த கணபதி கங்காணி "ஆமான்டா! ஒரு நாளைக்கு நூற்றி எழுபது ரூபா படிதான் சம்பளம், இருபத்திரெண்டு நாளுக்கு மேல வேல செஞ்சாதான் ஒரு நாளைக்கு இருநூறு ரூபா விழும், அப்படித்தான் நம்ப தலைவர்கள் கூட்டு ஒப்பந்தம் பண்ணியிருக்காங்க" என்றார். உண்மை அறிந்து ஆத்திரமடைந்த தங்கவேல் "ஒரு நாளைக்கு வேல செஞ்சாலும் இருநூறு ரூபா என செஞ்சிருக்கனும் முட்டாள் பயலுக" என உதட்டைக் கடித்தான்.

மூத்தவரான கணபதி கங்காணி வேலை செய்பவர்களை நோக்கி "இப்ப இருக்க நிலைக்கு இருநூறு ரூபா கொடுத்தா போதுமா? சாமா வெலவாசியைப் பார்த்திங்கத்தானே... மறுபடியும் ஒரு பஞ்சம் வரத்தான் போகுது. அந்த பஞ்சத்தில மொத உருள்ரது நம்பசனம்தான்" என தனது ஏக்கத்தைத் தெரிவித்தார். தனது மக்களின் அவல வாழ்க்கையை எண்ணி வெறுப்படைந்த தம்பிராசா, எவரிடமோ உள்ள கோபத்தை தேயிலையில் காட்டினான். கற்பாறையில் நின்ற கணபதி கங்காணி "தம்பிராசா நீர்வாத வச்சி வெட்டு" என்றார். ஆனால் அவன் காதுகளில் இவை விழவில்லை. கங்காணி முதல் கூறிய "இந்தமுற பஞ்சத்தில மொத உருள்ரது நம்ப சனம்தான்" என்ற கூற்றே திரும்பத் திரும்ப ஒலித்தது.

கையால் முகத்தைத் துடைத்தபடி மறுபக்கம் புரண்டு படுத்தான் தம்பிராசா. "தம்பி, தம்பி எழும்பிவா சாப்பிடுவோம்" என்றாள் செல்லம்மா. பெரும் சுமையோடு எழுந்து கட்டிலில் அமர்ந்தபடி நேரத்தைப் பார்த்தான் தம்பிராசா. கடிகார முட்கள் எட்டு மணியைக் காட்டின.



தலையைச் சொறிந்தபடி "தம்பி படிக்கிறானா?" எனக் கேட்டான். குசினியில் இருந்த செல்லம்மா, "ரவி தூங்கிட்டான்டா" என்றாள். "ஏன் படிக்கலையா?" என அதட்டிக் கேட்டான். இல்லடா என மழுப்பிய செல்லம்மா, "நான் தான் அவன தூங்கச் சொன்னேன். லாமண்ண முடிஞ்சிப் போச்சி அதனாலத் தான்" எனக் கூறி முடிக்கும் முன்பே மிகுந்த கோபத்தோடு எழுந்த தம்பிராசா "லாமண்ண இல்லாட்டி சொல்லறதுதானே" என்று கத்தினான். மௌனமாகிய செல்லம்மா சற்று நேரத்தின்பின் "தம்பி சாப்பிடவா" என்றாள். கோபத்தோடு இருந்த தம்பிராசா

''எனக்கு பசியில்ல தேத்தண்ணி ஒன்னு ஊத்து'' என அமர்ந்து தன்னைச் சாந்தப்படுத்த முயன்றான். இன்று முழுவதும் நான் வீட்டில் இருக்கவில்லையே சும்மா அம்மாவோட கத்திப்புட்டன் எனக் கழிவிரக்கப்பட்டான்.

தேனீரைக் குடித்த தம்பிராசா மறுபடியும் படுத்துக் கொண்டான். ஆனால் உறக்கம் ஏனோ அவனைத் தழுவ மறுத்தன. அவனது விழிகள் எதையோ தேடி அங்கும் இங்கும் அலைபாய்ந்தன. புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தான். மனம் நிம்மதியடையவில்லை. நேற்றைய சம்பவங்களே மீண்டும் மனத்திரையில் ஓடின.


ஒரு கல்லில் அமர்ந்து தனது கத்தியைத் தீட்டியபடி சின்னவன் ''பஞ்சம் வருன்னு சொல்றிங்க அங்கல், இருநூறு ரூபா பத்தாது தான், ஆனா கொழும்பு பக்கம் பொயிட்டு சம்பாரிக்கிற மாதிரியா இருக்கு, தம்பிராசைவையே நாலுதடவை புடிச்சிப்புட்டாங்க'' என்று சஞ்சலப்பட்டான். தம்பிராசாவுக்கு இடப்பக்கம் அமர்ந்து கத்தியைத் தீட்டிய தங்கவேல் ''ஏன் தம்பி ஒன்ன பொலிஸ் புடிச்சாங்க'' என்றான். வாடிநின்ற தம்பிராசா ''என்னவோ அவசரகால சட்டமாம், ஆள அடையாளப்படுத்தாட்டி உள்ளுக்குத் தான்... எனக்குத்தான் ஐடின்டிக் காட் இல்லையே அதுனாலத்தான் மாட்டிக்கிட்டேன்'' என்று கூறினான். அருகில் நின்ற சின்னவன் ''இதற்கெல்லாம் காரணம் நம்பத் தலைவர்களுந்தான்'' என தன் அதிருப்தியை வெளியிட்டான். என்ன தம்பி சொல்லுற என தங்கவேலு வினாவினார். ''ஆமா அண்ணே அவசரகால சட்டத்திற்கு ஆதரவாக நம்ப தலைவர்களும்தான் ஓட்டுப் போட்டானுங்க...'' என்றான் கோபத்தோடு ஆனால் தங்கவேலுக்கோ ஒன்றும் புரியவில்லை.

சிறிய கற்பாறை ஒன்றில் அமர்ந்திருந்த கணபதி கங்காணி வானத்தை வெறிக்கப் பார்த்துவிட்டு, ''இந்தக் கரண்டசரி நம்பளுக்கு கொடுத்து தொலைஞ்சாங்களா? மாசம் லாமண்ணைக்கே ஒராளு சம்பளம் வேணும்'' என்றார். இதற்கு ஒத்துப்போபவராய் தங்கவேலும் ''ஆமாங்க அண்ணே எந்த காலத்திலும் லாமண்ண வெலக்கூடினதில்ல. இதனால புள்ளைகளும் ராவைக்கு படிக்கிறதே இல்ல'' என தனது உள்ளக்கிடக்கையை அள்ளிக் கொட்டினார். கணபதிகங்காணி எதனையோ கூறமுனைந்த வேளை குறுக்கிட்ட சின்னவன் ''இங்கிட்டுதான் அங்கல் எதுவும் செய்றானுங்க இல்ல எல்லாம் நுவரெலியா, ஹட்டன் பக்கந்தான், கண்டியில இருக்கிற நம்பள மாதிரி தோட்ட தொழிலாளிகள அவனுக நெனைக்கிறதும் இல்ல, மதிக்கிறதும் இல்ல. சந்தாவ மட்டுந்தா புடிக்கிறானுங்க... எல்லாம் ஒருவக அரசியல்தான், அவனுங்க சொகுசா வாழ நம்பள அடகு வைக்கிறானுக'' என தனது மன அழுத்தத்தைக் கொட்டினான்.

சற்று மௌனமாகிய கணபதி கங்காணி, ''உண்மைத் தான்டா நம்ப வோட்டு அங்க இருக்கிறவுங்களுக்கு தேவயில்ல. அவுங்க நெனக்கிறாங்க அங்க இருக்கிறவுங்க மட்டுந்தான் மலையகத் தோட்டத் தொழிலாளிக என்று.... நம்ப என்னத்த தான் செய்றது பார் நம்ப ஊருல இருக்கிறதே தமிழ் ஆக்கள், ஆனா போட்டுயிருக்கிற ஆராச்சோ சிங்களவன் ஒருத்தன். அவன் சொல்லுறது நமக்கு சரியா வெளங்குது இல்ல. நம்ப சொல்லுறது அவனுக்கு வெளங்குது இல்ல. ஏதோ இருக்கிறன் என்று கெழமைக்கு ஒருக்கா வந்து போறான்'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார்.

பள்ளத்தில் நின்ற தங்கவேலு அண்ணார்ந்து வானைப் பார்த்து ''நமக்கெல்லாம் எப்பத்தான் விடிவு காலம் பொறக்குமோ? எல்லாம் அவன் கையிலதான்'' என இறைவனை வேண்டினான். பக்கத்தில் வேலை செய்த தம்பிராசா தங்கவேலுவை கோபத்துடன் வெறிக்கப்பார்த்தபடி ''அப்படிச் சொல்லாதிங்க எல்லாம் நம்ப கையில்தான் இருக்கு'' என ஆவேசத்துடன் கத்தினான். அவன் முகத்தின் வெம்மை அனைவரையும் சுட்டெரிப்பது போலத் தென்பட்டது. சுற்றியிருந்த அனைவரும் தம்பிராசாவை வியப்பாகப் பார்த்தனர். தன் நிலை மறந்த தம்பிராசா ''ஆமாம் எல்லாம் நம்ப கையில தான், தேயிலைக்கு வெட்டுற கவ்வாத்த நம்ப அரசியலிலும் அரசியல் தலைமைத்துவத்திலையும் நம்பள முட்டாளாக்குற மூடத்தனத்தினையும் வெட்டனும். அப்ப தான் தேயிலை செழிக்கிற மாதிரி அரசியலும் செழிக்கும். நாமலும் முன்னேறலாம்'' எனக் கூறி ஒரு தேயிலைச் செடியை வெட்டி இழுத்தான். அவனது கண்கள் நிறம் மாறி சிவந்தன. அதில் ஏதோ ஒரு வெறி தேங்கிக் கிடந்தது. பக்கத்தில் நின்று தம்பிராசாவை பெருமிதத்தோடு பார்த்த சின்னவன் அக்கருத்துக்கு உடன்படுபவனாய் ''தருவாங்க தருவாங்க என சும்மா இருந்தா நம்பலும் இந்த தேயிலைக்கே ஓரமாக வேண்டியது தான்.'' தம்பிராசா சொல்லுற மாதிரி துணிஞ்சி போராடுனாதா நம்பள பத்தியும் ஒலகத்திற்கு தெரியும், நம்ப வாழ்க்கையும் சிறப்பா அமையும். இதற்கு நம்ப எல்லாம் ஒன்னு சேர்ந்தால் தான் வெட்டலாம் கவ்வாத்து'' என்று கூறி வெறிபிடித்தால் போல ஒரு தேயிலைக் கிளையை வெட்டி எடுத்து தன் முகத்தின் முன் பிடித்துப் பார்த்தான். கையில் இருக்கும் கிளையின் அடிப்பகுதியில் ஒழுகிக் கொண்டிருந்த செங்குருதி துளித்துளியாய் பூமியில் விழுந்தன.

திடுக்கிட்டு விழித்த தம்பிராசா கட்டிலுக்கு கீழே கையைவிட்டுத் தண்ணீர் கோப்பையைத் தேடினான். தடவிப் பார்க்கும் போது தண்ணீர் கோப்பைக்கு பதிலாக அவனது கையில் கவ்வாத்துக் கத்தியே அகப்பட்டது. கண்களைத் தேய்த்து நன்றாக விழித்துப் பார்த்தான். கலங்கமற்ற நிலவு வீட்டுக் கூரை கண்ணாடி வழியே அறையை அலங்கரித் திருந்தது.



## எஸ்.பொ. பவள மலர்

ஈழத்து இலக்கிய உலகில் 55 வருடங்களுக்கு மேலாக ஆழமாக தடம்பதித்துவரும் எஸ்.பொ. அவர்களைக் கௌரவிக்கும்முகமாக ஞானம் ஒரு பவளமலரை வெளியிடவுள்ளது. இம்மலருக்கு எழுத்தாளர்களிடமிருந்து கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. கட்டுரைகளை 30.06.2009க்கு முன் அனுப்பி உதவுமாறு வேண்டுகிறோம்.

–ஆசிரியர்



# ஆய்வாளர் கவனத்தை ஈர்க்கத் தவறிய வாவெட்டிமலை இராசதானி

*-கலாநிதி "முல்லைமணி"-*

வட இலங்கை வரலாறு பற்றிச் சுவாமி ஞானப்பிரகாசர், முதலியார் இராசநாயகம் முதல் பேராசிரியர்களான அரசரத்தினம், கா. இந்திரபாலா, சி. பத்மநாதன், கலாநிதி க. செ. நடராசா, கலாநிதி ப. புஷ்பரட்ணம், க. தங்கேஸ்வரி வரை பலர் ஆய்வுசெய்து கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளனர்.

கயிலாய மாலை, வையாபாடல், பரராசசேகரன் உலா, இராசமுறை, யாழ்ப்பாண வைபவமாலை, மகாவம்சம், சூளவம்சம் முதலான நூல்களையும் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், தொல்பொருள்கள் முதலானவற்றை ஆதார மாகக் கொண்டும் ஆய்வுகளை நடத்தியுள்ளனர்.

இவற்றில் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வையாபாடல் மிகப்பழைமையானது. இந்த நூல் வையா என்னும் புலவரால் செய்யுள் நடையில் இயற்றப்பட்டது. 'இலங்கை மண்டலக்காதை' என்பதே இந்நூலின் உண்மையான பெயராகும். காலப் போக்கில் நூற்பெயர் மறைந்துபோக ஆக்கியோன் பெயராலேயே இது அழைக்கப்படுகின்றது. இது ஒரு வரலாற்று நூல். இலக்கிய நோக்கில் இந்நூல் இயற்றப்படவில்லை. இந்நூற் செய்யுள்களில் கற்பனை வளமோ, வர்ணனைச் சிறப்போ, அணிச்சிறப்போ, காவியச் சுவையோ இல்லை. இந்நூலில் இடம்பெறும் செய்திகள் பெருமளவு வரலாற்றுண் மைகளும் மிகவும் சிறிதளவு கற்பனையையும் கொண்டுள்ளன.

இந்நூலில் 17ஆம், 96ஆம், 99ஆம் செய்யுள்களில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வாவெட்டிமலை இராசதானி யில் இருந்து அரசோச்சிய மன்னர்கள் பற்றிய குறிப்புக்கள் உண்டு.

கிறிஸ்துவுக்குப்பின் 18ஆம் நூற்றாண்டில் மயில்வாகனப் புலவர் இயற்றிய யாழ்ப்பாண வைபவமாலை என்னும் வசன நடையிலமைந்த நூல் கைலாய மாலை, வையா பாடல், பரராசசேகரன் உலா, இராசமுறை என்னும் நூல்களை ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பட்டதென நூலின் சிறப்புப் பாயிரம் கூறுகின்றது. எனினும் யாழ்ப்பாண வைபவமாலை வாவெட்டிமலை இராசதானி பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. பின்வந்த ஆய்வாளரும் இதனைக் கவனத்தில் கொள்ள வில்லை.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வையாபுரி ஐயர் வன்னியிலுள்ள இராசதானி பற்றிக் கற்பனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. வலுவான ஆதாரம் ஒன்றின் அடிப்படை யிலேயே வாவெட்டிமலை இராசதானி பற்றிக் குறிப்பிட்டிருக்க வேண்டும். துரதிஷ்டவசமாக அந்த ஆதாரம் நமக்குக் கிடைக்க வில்லை. கல்வெட்டுச் சான்றுகளோ வேறு ஆதாரங்களோ நமக்குக் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக இதனை ஒதுக்கிவிட முடியாது.

வன்னி மாவட்டத்திலுள்ள ஒட்டிசுட்டானுக்கு மூன்று மைல் தொலைவில் உள்ளது வாவெட்டிமலை. அடர்த்தியான காட்டின் மத்தியிலுள்ள வாவெட்டிமலை இராசதானியதும் வணக்கத் தலங்களினதும் குடியிருப்புகளினதும் அழிபாடு களை இன்றும் காணக்கூடியதாக இருக்கிறது. 'மாநகர் வாவெட்டிமலை' என வையாபாடலில் குறிப்பிடப்படுவதி லிருந்து பெரியதொரு நகரமாக வாவெட்டிமலை திகழ்ந்திருக்க வேண்டும் என அறியக்கூடியதாக இருக்கிறது.

வாவெட்டிமலை இராசதானி பற்றி வையாபாடலில் இடம்பெறும் குறிப்பினையும் அது தொடர்பான சம்பவங் களையும் நோக்குவோம்.

இலங்கை மன்னனாகிய இராவணன் சங்காரம் செய்யப்பட்டபின் இலங்கை மன்னனாக இராமனால் முடி சூட்டப்பட்ட விபீஷணன் முன்னிலையில் யாழ்பாடி யொருவன் (கவிவீராகவன்) யாழ் வாசித்து வடபால் அமைந்த மணற்றிடல் காட்டைப் பரிசாகப் பெற்றான். அதனைத் திருத்தி நற்பயிர் விளைவித்துச் சோலையாக்கினான். அங்கு ஓர் அழகான மண்டபத்தை அமைத்தான். பின்னர் தசரதனின் மைத்துன னான குலக்கேதுவின் மைந்தன் கோளுறு கரத்துக் குரிசிலைக் (கூழங்கைச் சக்கரவர்த்தி) கூட்டி வந்து அவனுக்குச் சக்கரவர்த்திப் பட்டம் சூட்டினான். இது நிகழ்ந்தது கி.மு 101 ஆண்டுக்குச் சமமான கலியுக ஆண்டு 3000 இலாகும்.

கோளுறு கரத்துக் குரிசிலின் மாமனான உக்கிரசோழ சோழனது மக்கள் சிங்ககேது என்பவனும் மாருதப்பிரபை என்பவளும் இலங்கை சேர்ந்தனர். மாருதப்பிரபைக்கு இருந்த குதிரைமுக நோய் கீரிமலைத் தீர்த்தமாடக் குணமாயிற்று. 'குதிரை முக நோய் என்பது முழந்தாளில் ஏற்படும் நோய் போலும்' என வையாபாடல் பதிப்பாசிரியர் கலாநிதி க. செ. நடராசா கூறுகின்றார்.

பின்னர் அவள் கதிரையம்பதிக்கு (கந்தரோடை) சென்று அரன் மகவினை வணங்கி வருங்கால் உக்கிரசிங்கசேனன் அவளை மணந்து வாவெட்டியில் மண்டபமியற்றி அங்கிருந்து அரசாட்சி செய்தான். உக்கிரசிங்க சேனனை உக்கிரசிங்கன் எனவும் மாருதப்பிரபையை மாருதப்பிரவல்லி என்றும் யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. உக்கிரசிங்கன் கதிரைமலையில் இருந்து அரசாண்டான் என்று கூறுகின்றது இந்நூல். இவன் வன்னிமார்க்கமாகச் செல்லும்போது வன்னியர் ஏழுபேரும் எதிர்கொண்டு வந்து தங்கள் வன்னி

நாடுகளை திறை கொடுத்தாள உத்தரவு கேட்டனர். தனக்குச் சேரவேண்டிய திறையைக் கோணேசர் கோயிலுக்குக் கொடுக்குமாறு கூறிவிட்டுக் கதிரைமலை சென்றான் என்கிறது வைபவமாலை. வாவெட்டிமலை இராசதானி யிலிருந்து ஆட்சிபுரியும் போது இச்சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. கோளுறுகரத்துக் குரிசிலின் மறைவுக்குப் பின் உக்கிரசிங்கன் கதிரைமலைக்குச் சென்று யாழ்ப்பாண அரசனாகியிருக்கலாம்.

உக்கிரசிங்கன் விஜயனின் சகோதரன் மரபில் உதித்தவன் என்கிறது வைபவமாலை. உக்கிரசிங்கனே குளக்கோட்டன் எனவும் மாருதப்பிரபையே ஆடகசௌந்தரி எனவும் சுவாமி ஞானப்பிரகாசர் கருதுகின்றார். சோழகங்கன், சோடகங்கன், ஜயபாகு என்றும் வேறு பெயர்களும் குளக்கோட்டனுக்குண்டு.

''சாலிவாகன சகாப்தம் 358ஆம் வருஷத்தில் (கி.பி 436) மனுநீதிகண்ட சோழன் மகன் குளக்கோட்டு மகாராஜன் யாத்திரை பண்ணித் திருகோணமலையிற் சேர்ந்து கோணேசர் சிவாலயத்தைத் தரிசித்து தம்பலகாமத்தில் பழுதுபட்டுக்கிடந்த கோணேசர் சிவாலயத்தைப் பழுதுபார்ப்பித்தான்'' என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது.

ஜயபாகு (குளக்கோட்டன்) கலிங்கமாகனுடன் இணைந்து இராசரட்டையை ஆண்ட தமிழ் மன்னன் எனச் சூழவம்சம், பூஜாவலி ஆகிய நூல்கள் கூறுகின்றன. இவர்களின் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி எனத் தற்கால ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கிழக்கிலங்கையுடனேயே குளக்கோட்டன் திருப்பணிகள் பற்றிப் பேசப்படுகின்றன. வன்னிப்பிரதேசத்தில் நிலவும் செவிவழிச் செய்தி குளக்கோட்டன் ஒட்டிசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரன் கோயிலுக்குத் திருப்பணி செய்தான் என்று கூறுகின்றது. நந்தி உடையாருடன் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக அவரது நந்தி வயல்வெளிக்குப் பேராற்று நீரைச் செல்லவிடாது தடுக்கும் நோக்குடனேயே முத்தரையன் கட்டுக்குக் குளத்தைத் திருத்திக் கட்டுவித்தான். இக்குளம் சோழப் பெருமன்னர் காலத்தில் (993 – 1070) ஒட்டிசுட்டானில் வன்னிப் பிரதேசத்துக்குப் பொறுப்பாக இருந்த இராசப் பிரதிநிதி முத்தரையனால் கட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இவற்றிலிருந்து உக்கிரசிங்கனே குளக்கோட்டன் என்னும் கருத்து வலுவடைகின்றது. இவன் வாவெட்டிமலை யில் இராஜதானி அமைத்து வன்னிப்பிரதேச நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்தான் என்று கொள்வது தவறாகாது.

பொன்னகர் திகழும் கதிரையம்பதியில்
போயரன் மகவினை வணங்கிப்
பின்னர் உக்கிர சிங்க சேனன்தன்
பெண்ணென இருந்தனள் அதற்பின்
மன்னவன் அடங்காப் பற்றினி லேகி
மாநகர் வாவெட்டி மலையில்
தன்னிகரற்ற மண்டபம் இயற்றி
தனியர சியற்றினன் இருந்தான்.

(வையாபாடல் 17)

என வையாபாடல் மாருதப்பிரபை கதிரைமலையில் முருகப் பெருமானை வணங்கியபின் உக்கிரசிங்கனின் மனைவி யானாள் எனக் கூறுகின்றது.

வாவெட்டிமலை இராசதானி பற்றிய இன்னொரு குறிப்பு வையாபாடல் 96ஆம் 99ஆம் பாடல்களில் இடம்பெறுகிறது.

யாழ்ப்பாணத்தில் செகராசசேகரனையும் வாவெட்டியில் சங்கிலியையும் அரசுபாலிக்க வைத்து அவர்களின் தமைய னான பரராசசேகரன் முள்ளியவளையில் இருந்து பேரர சோச்சினான் என்றும் தம்பியர்கள் யாழ்ப்பாணத்திலும் வாவெட்டியிலும் எவ்வாறு பரிபாலனம் நடத்தினார்கள் என மாதந்தோறும் சென்று கண்காணித்து வந்தான் என்றும் வையாபாடல் குறிப்பிடுகின்றது.

அந்தவனைவோர்களையும் மன்னவர்கள்
மன்னன் பார்த்தன்பினோடு
கந்தமலி தாரிளவல் செகராச சேகரனைக்
கருணை கூற
இந்த யாழ்ப் பாணத்தில் இருக்கவென்றே
சித்திரவேலரையு மீந்து
வந்துமுள்ளி மாநகரில் கோட்டையும்
நற்சினகரமும் வகுப்பித்தானால்

(வையாபாடல் 96)

எந்நாளும் இம்முறையே யாவரையும்
வாழ்விரென இருத்தி யங்கண்
மன்னான இளவலெனும் சங்கிலியை
வாவெட்டி சாரச் செய்து
முன்னோர்க்குப் புரிபூசை நிதந்தரிசித்தே
முள்ளி வளையா மூரில்
மன்னான இரவிகுலப் பரராச
சேகரனும் வாழ்ந்தா னன்றே

(வையாபாடல் 99)

பரராசசேகரன் முள்ளியவளையில் கட்டியதாகக் கூறப் படும் கோட்டையின் சிதைவுகள் இன்றும் காணக்கூடியதாக இருக்கிறது. முள்ளியவளைக் காட்டு விநாயகர் ஆலயமே (சினகரம்) பரராசசேகரன் திருப்பணி செய்த கோயிலாகும்.

யாழ்ப்பாணத்தை இரண்டு சங்கிலி மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். முதலாவது சங்கிலி கி.பி 1519 தொடக்கம் 1561 வரை ஆட்சி செய்தான். இரண்டாவது சங்கிலி (சங்கிலி குமாரன்) 1615 தொடக்கம் 1619 வரை யாழ்ப்பாணத்தில் அரசோச்சினான். வையா என்னும் புலவர் எந்தச் சங்கிலியைக் குறிப்பிடுகின்றார் என்று தெரியவில்லை. முதலில் வாவெட்டியிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் ஆட்சி புரிந்தவன் முதலாவது சங்கிலி எனக் கொள்ளலாம்.

தற்கால ஆய்வின்படி சங்கிலி பரராசசேகரனின் சகோதரன் அல்லன். பரராசசேகரனின் மூன்றாவது மனைவி வயிற்றில் பிறந்தவன். பட்டத்து இராணி வயிற்றில் பிறந்தவர் கள் சிங்கவாகு, பண்டாரம் என்போர். சிங்கவாகுவுக்கோ அல்லது பண்டாரத்துக்கோ இளவரசுப்பட்டம் கட்டியபோது சங்கிலியை வாவெட்டியில் உபராஜன் ஆக அமர்த்தி யிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. பட்டத்துக்குரிய

இளவரசர்களைவிட இவன் வீரமும் ஆற்றலும் கொண்டவனாகத் திகழ்ந்திருக்கிறான். முடிக்குரிய இளவரசர்கள் கொல்லப்பட்ட பின்னர் (சங்கிலியே இவர்களைக் கொலை செய்தவன் என வைபவமாலை ஆசிரியர் கூறுகின்றார்) சங்கிலி யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றியிருக்கலாம். கீர்த்தி வாய்ந்த நாட்டுப் பற்றுள்ள மன்னனாக 42 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தை ஆண்ட பெருமை இவனைச் சாரும்.

யாழ்ப்பாண மன்னன் பரராசசேகரன் ஏன் தன் இராச்சியத்தை விட்டு வன்னிப்பிரதேசத்துக்குச் சென்றான்? இதற்கு வையாபாடலும் வைபவ மாலையும் வெவ்வேறு காரணங்களைக் கூறுகின்றன.

“தென்னிலங்கை அரசர் சிலர் கொடுங்கோலோச்சிய காரணத்தால் குடிசனங்கள் பரராசசேகரன்பால் முறையிட அவன் தம்பியோடு படைநடத்திச் சென்று பகை அரசரை அடக்கினான்” என வையாபாடல் கூறுகின்றது. தென்னிலங்கை என வையாபாடல் குறிப்பிடுவது யாழ்ப்பாணத்துக்குத் தெற்கேயுள்ள வன்னிப் பிரதேசத்தையே என எண்ணத் தோன்றுகின்றது. இதனாலேயே முள்ளியவளையில் இருந்து இராச்சிய பரிபாலனம் செய்திருக்கவேண்டும்.

“முடிக்குரிய இளவரசர்களைச் சங்கிலி கொலை செய்வித்ததை அறிந்த பரராசசேகரன் தன்னையும் அவன் கொன்று விடுவான் என அஞ்சித் தன்னிடமிருந்த சேம திரவியத்தை இராக்காலத்தில் யானையில் ஏற்றிக் கொண்டு போய் வன்னிநாட்டைச் சேர்ந்த பெருங்காட்டுக்குள்ளே சேமித்து வைத்துச் செங்கோலையும் முடியையும் கூடவைத்து உன்மத்த வைரவனைக் காவல் வைத்தான்” என வைபவ மாலை கூறுகின்றது.

யாழ்ப்பாண அரசர்களான உக்கிரசிங்கனும், சங்கிலியும் வாவெட்டியில் இராசதானி அமைத்து ஆட்சி புரிந்ததை வையாபாடல் தெளிவாகக் கூறுகின்றது. ஆரம்பத்தில் இவர்கள் யாழ்ப்பாண அரசின் பிரதிநிதிகளாக வன்னியில் அமர்த்தப்பட்டிருக்கலாம்.

வாவெட்டியையும் முள்ளியவளையிலுள்ள பரராசசேகரன் கோட்டையின் சிதைவுகளையும் அகழ்வாராய்ச்சி செய்யின் பெறுமதி வாய்ந்த வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கக்கூடும். இத்தகைய ஆய்வு பல்கலைக்கழக மட்டத்தில் செய்யப்படல் வேண்டும்.


## எமது புதிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | செ. கணேசலிங்கன் நாவல்கள் : ஓர் ஆய்வு<br>- அமிர்தலிங்கம் பௌநந்தி | 500.00 |
| 2. | ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி<br>- கலாநிதி க. செ. நடராசா | 450.00 |
| 3. | ஈழத்துத் தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும்<br>- கலாநிதி செ. யோகராசா | 250.00 |
| 4. | இந்திய அழகியல்<br>- கலாநிதி ஏ. என். கிருஷ்ணவேணி | 300.00 |
| 5. | ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி<br>- பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா | 300.00 |
| 6. | பாரதியின் கன்னிக்குயிலின் இன்னிசைப்பாட்டு<br>- பதி: கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் | 175.00 |
| 7. | சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரின் இலக்கணச் சந்திரிகை...<br>- பதி: கலாநிதி சுபதினி ரமேஷ் | 350.00 |
| 8. | நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள்<br>- பாலசுப்பிரமணியம் தனபாலன் | 300.00 |
| 9. | பாலர்கல்வியும் நவீன செல்நெறிகளும்<br>- பாலசுப்பிரமணியம் தனபாலன் | 300.00 |
| 10. | தேசபக்தன் கோ. நடேசய்யர்<br>- சாரல் நாடன் | 450.00 |

# குமரன் புத்தக இல்லம்


361, 1/2, டாம் வீதி, கொழும்பு – 12, தொ. பே. 2421388, மி. அஞ்சல்: kumbh@sltnet.lk

3, மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை – 600 026

அகன்ற ஆழ்ந்த அறிவிற்காய்

# நிமிர்வு

சிவனு மனோகரன்



கொழும்பு டேம் வீதி வழமைக்கு மாறாக சோபை இழந்திருந்தது.

வாகன நெரிசலற்றுவிரிந்து கிடந்தது வீதி.

பலமுறை அவ் வீதியைக் கடந்திருக்கிறேன். அப்போதெல்லாம் கண்ணில் படாத கொடுமை இன்று தெரிய வந்ததை இட்டு மனம் தடுமாறியது.

இருப்பினும் குறித்த வலியில் இருந்து இலகுவாய் என்னால் வெளி வரமுடியவில்லை. வெயில் சுட்டெரித்து மண்டையைப் பிளந்தது.

நான் வழமையாகவே கொழும்பு கால நிலையில் தடுமாறிப் போவேன். வியர்வை பிசுபிசுத்து உடல் ஒரு விதமாய் அசதியுற்றிருந்தது. அப்போதுதான் எதிர்பாராத விதமாய் செருப்பு அறுந்து சிரித்தது.

சரியாக டேம் வீதியின் மத்தியில் செருப்பறுந்து நின்ற போது அடைந்த அசௌகரியம் கொழும்பு பஸ் நடத்துனர்களிடம் மீதி வாங்குவதற்கு அடையும் அசௌகரியத்தை விடவும் கொடுமையாக இருந்தது.

மீதி வாங்குவதற்கு நடத்துனரிடம் போராடிய போது அவனால் மொழியப்பட்ட வார்த்தைகளில் கலந்திருந்த துவேஷத்தின் நெடி என்னை படபடப்புக்குள்ளாக்கியிருந்தது.

எப்போதுமே சில்லறைகளுடன் பயணிக்கும் நான் அன்று வசமாய் சிக்கிக் கொண்டதால் உள்ளுக்குள் விழுந்த புகைச்சல் உடல் புழுக்கத்தை இன்னும் வலுப்படுத்தியிருந்தது.

சூழலை அனுசரிக்காமல் அந்நேரம் பார்த்து கழுத்தறுத்தது செருப்பு.

அப்போதுதான் எதிரில் சடைத்து நிற்கும் அரச மரமும் செருப்புத் தைக்கும் இடமும் கண்ணில் பட்டன.

ஒரு கணமேனும் சிந்தியாமல் செருப்புடன் அரச மரத்தின் கீழே வியாபாரத்துடன் சீவியம் நடத்தும் செருப்புத் தைக்கும் இடத்தை அடைந்தேன்.

புறாக்கள் குழுமி இருக்கும் அம் மரச் சூழல் புறாக்களின் எச்சங்களால் விகாரப்பட்டிருந்தது. அங்கொரு விதமான துர்வாடையும் ஈக்களும் பரவியிருந்தன.

வலிமையாய் வேரோடி இருக்கும் மரவேர்கள் எட்டுத் திக்கிலும் படர்ந்திருந்தன. வெறுமனே துண்டுப் பலகையால் பொருத்தப் பட்டிருந்த கொட்டகை முழுவதுமாய் பல ரக செருப்புகள் குவிந்து கிடந்தன.

ஆங்காங்கே குவிந்து கிடக்கும் செருப்புகள் ஏதேதோ எண்ணப்பாடுகளை முடிக்கி விட்டன.

நொய்ந்துப்பட்ட செருப்புகள் எல்லாம் வைத்தியத்திற்காக தவமிருப்பதாய் தோன்றின.

மோட்சப் பயணத்தில் இணையத் துடிக்கும் செருப்புகள் உலகம் புதிய அனுபவங்களைத் தந்தன.

செருப்புகளுக்கிடையில் ஒரு பிஞ்சுள்ளம் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. உடல் முழுவதும் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன.

''மாத்தியா பொட்டக் இன்ட''

''தவ டிக்கிங் வெடே இவர கரலா தென்னாங்'' என்று வேலையில் மும்முரம் காட்டினாள் அந்தப் பெண். பிழைப்பு நடத்தும் வீதிதான் ஜீவியத்திற்குரிய இடமாகவும் பயன்படுத்தப்படுகிறது என்பதை அங்கு நின்ற சில நொடிகளில் அறிந்துக் கொண்டேன்.

மலையென குவிந்திருக்கும் செருப்புகளுக்கிடையில் சீவியம் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. முண்டியடித்துக் கொண்டு திரும்பிப்படுத்த பிஞ்சுள்ளத்தின் காலிடுக்கில் சுருண்டு கிடக்கும் இன்னொரு மழலையின் கறுத்த உடலையும் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன.

என்ன ஜீவியமடா இது என்று அடிக்கடி அலுத்துக் கொள்ளும் மனசு இன்று ஜீவியத்தின் மீதான முழுமையான நம்பிக்கைகளையும் இழந்திருந்தது.

முகத்தை ஆக்கிரமிக்கும் ஈக்களை துரத்தியபடியே மீண்டும் மீண்டும் நித்திரையில் ஆழ்ந்து போகும் குழந்தைகளை எண்ணிப் பார்க்க வியப்பாக இருந்தது.

''பரக்வெலாத மாத்தியா அவசட பொட்டாக் வெட கொடாக் தென்ட டக்கால மஹலா தென்னாம்'' என்றதும் அறுந்து தொங்கிய செருப்பை எடுத்து நீட்டுகிறேன். சற்றும் குறைவுபடாத அதே புன்னகையுடன் செருப்பை ஏற்று மடியில் கிடத்தி லாவகமாய் தைக்கும் அழகு என் எண்ணங்களை கசக்கிப் பிழிந்தது.

பஸ் நடத்துனரால் படர்த்தப்பட்ட துவேஷம் மெது மெதுவாய் கரையத் தொடங்கியிருந்தது.

''புத்தா நகிட்டின்ட கீலா தே கேன்ட வெலாவ கியா வெட கொடாக் தியனவானே'' என குழந்தையை எழுப்பி விட்டு பணியில் லயிக்கும் பெண்மணியின் உழைப்பின் மீது தனி மரியாதை ஏற்பட்டது.

அந்நேரத்தில் எழுந்து அடம் பிடிக்கத் தொடங்கிய சின்னக் குழந்தையை கரைத்து வைக்கப்பட்டிருந்த புட்டிப் பாலை கொடுத்து சமாதானப் படுத்திய விதம் நாகரிகமாய் இருந்தது.


இப்போது உடல் புழுக்கம் தளர்ந்திருந்தது. ஆனால் மனப் புழுக்கமோ எல்லை யைக் கடந்திருந்தது.

மனித ஜீவியத்தில்தான் எத்தனை ஏற்றத்தாழ்வுகள். மீண்டும் குழப்பத்தில் உறை கிறது மனசு.

செருப்பினுள் புகுந்து புகுந்து வெளிவரும் ஊசியின் நளினத்தைப் பார்த்துக் கிடந்த கண்கள் வேலையில் காட்டிய கரிசனையையும் அவதானிக்கத் தவறவில்லை.

ஏதோ கடன்காரனைப் போல மீதியை வாங்குவதற்கு சுற்றி விட்ட நடத்துனர் உலகில் இருந்து இவ்வுலகம் பெரிதும் மாறுப்பட்டிருந்தது.

ஒரு சோற்றைப் பதம் பார்த்து விட்டு ஒட்டு மொத்தமாய் ஒரு குழுமத்தின் மீதான சாடலுக்காக மனசு வருந்தியது.



''மாத்தியா கொஹேத துராய்த ஒயா மட்ட தென்ன வெட ஒந்தட்ட கரலா தென்ட ஒனே நெத்தங் அரியென்னே நேனே'' எனப் பேசியபடியே செருப்பை தைத்துக் கொண்டிருந்தாள். நானும் சுதாகரித்துக் கொண்டு ஒப்புக்கு தலையசைத்தபடி நிற்கிறேன். எனக்குள் கவிழ்ந்திருக்கும் குழப்பங்களை அவள் அறிந்திருக்க வாய்ப்பில்லைத்தானே அற்பமான விடயங்களுக் கெல்லாம் அல்லாடித் தொலையும் மனசு முதல் தடவையாய் வெட்கி தலை குனிந்தது.

தன் இருப்பை தக்க வைத்துக் கொள்ளப் பிரயத்தனப்படும் மனிதர்களில் இருந்து பெரிதும் வேறுபடும் சூழல்களும் இருக்கத்தான் செய்கின்றன என்பதை அன்றறிந்தேன்.

நோய்ந்த செருப்பு, நூலினால் உரமூட்டப்பட்டு மிக நேர்த்தியாய் தைக்கப்பட்டிருந்தது.

உரமேறிய கைகள் செருப்பில் படிந்திருந்த புழுதிகளை சுத்தப்படுத்திக் கொண்டிருந்தன. வாய் மட்டும் ''டிக்கக் பரக்வெலா மட்ட சமாவென்ன மாத்தியா'' என மீண்டும் மீண்டும் மொழிந்து கொண்டிருந்தது.

பஸ் பயணத்தில் ஒரு ரூபாயைக் கூட விட்டுத் தராத மனசு இங்கு பேரம் பேசுவதற்கு ஒப்பவில்லை.

நூறு ரூபாய் நோட்டொன்றை எடுத்து நீட்டினேன்.

''மட்ட தியாக் தென்னோத் ஹரி மாத்தியோ மாறு நேத'' என வினவியவாறே தட்டுத் தடுமாறி எழுந்த போதுதான் அறிந்தேன் அவள் இரண்டு கால்களையும் இழந்திருக்கிறாள் என்பதை! அக் கணம் உண்மையாகவே அதிர்ச்சியில் ஆழ்ந்தேன். விக்கித்து வாயடைத்து மறுப்பேச்சின்றி செருப்பை மாட்டிக் கொண்டு அங்கிருந்து நகர்கிறேன்.

எல்லோருடைய செருப்பையும் மடி மீது கிடத்தி தைக்கும் ஒரு ஜீவனின் கால்கள் பறிக்கப்பட்ட கொடுமையை யாரிடம் சொல்லி நோவது என்ற குழப்பங்களுடன் பயணித்துக் கொண்டிருக்கிறேன்.

''மாத்தியா பொட்டக்கின்ன பொட்டக்கின்ன'' என யாரோ பின்னால் அழைப்பது துல்லியமாக கேட்டது.

திரும்பிப் பார்க்கிறேன். மூச்சிரைக்க ஓடி வந்து நிற்கும் அதே சிறுவன். ''மாமே ஒயாகே இத்துரு கத்தனே மென்ன ஒயாகே இத்துரு சல்லி'' என்று நீட்டும் கசங்கிய நோட்டுக்கள் என்னைப் பார்த்து நகைத்தன.

கசங்கிய நோட்டுக்களை கறைபடிந்த அவனின் கைகளுக்குள் திணித்து விட்டு ''இத்துரு ஒயா தியான்ட'' என பயணிக்கிறேன். கைகளை சுழற்றியப்படி வேகமாய் ஓடி மறைத்தான் சிறுவன்.

நான் இப்போது டேம் வீதியின் அந்தத்தில் நிற்கிறேன்.

மீண்டும் ஒருமுறை வந்த வழியை திரும்பிப் பார்க்கிறேன். அங்கே நன்றிப் பெருக்குடன் தாயும் மகனுமாய் கையசைத்து நிற்கும் காட்சி புள்ளியாய் தோன்றியது.

தெளிந்த சித்தம் புது பரவசத்தைப் படர்த்தியது.

வழமைக்கு மாறாக நடையிலோர் நிமிர்விருந்தது.

## விவாதங்கள், வாசகர் கடிதங்கள், படைப்புக்கள்

விவாதங்கள் 500 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். 'வாசகர் பேசுகிறார்' பகுதிக்கான கடிதங்கள் 200 சொற்களுக்குள் அடங்குதல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கும் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்ந்துவரும் இதழில் இடம்பெறும். புனைபெயரில் எழுதுபவர்கள், தமது சொந்தப் பெயர் முகவரியை வேறாக இணைத்தல் வேண்டும். படைப்புக்கள் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படின் ஒரு மாதத்திற்குள் அறிவிக்கப்படும்.

ஆசிரியர்

# பிராக்கு

– பூ. சோதிநாதன்

*முகாமைக் கற்கைகள் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்*

எல்லோரும் அவை அவையளடை பிராக்கைப் பாக்கினை எனக்கெண்டா இப்ப பிராக்கில்லை. வீட்டிலை இருக்கிறன். வெட்ட வெளி மாதிரி பெரிய வீடு, வீட்டுக்கும் வெட்ட வெளிக்கும் என்ன வித்தியாசம் சுவருகளை போட்டுட்டும் வீடெண்டு நினைக்கலாம். எப்படி எண்டாலும் வீடே ஏகப்பெரு வெளிதான்.

பிராக்கில்லாட்டி சும்மா இருக்க விடாங்கள். நெப்போலியன் கூட யுத்தமில்லாட்டி படைக்கு பிராக்குக்காட்டுவானாம். அது இருக்கிற கட்டிடத்தை உடைச்சுக்கட்டுற பிராக்கு. பிராக்குக் காட்டுற பெரியவன் இருக்கிறான். அவன்ரை விளையாட்டு எல்லோருக்கும் பிராக்குக் கட்டுறதுதான். மற்றையவை கட்டிடத்தை உடைச்சு உடைச்சுக் கட்ட வேண்டியதுதான் மிச்சம்.

படிக்கிறது ஒரு பிராக்காப்போம். படிச்சு முடிஞ்சாலும் எல்லோரும் பிராக்கு தேடவேணும். பிராக்குத் தேடுறவையின்ர தொகை கூடக் கூட உலகத்திலே பிரச்சினை கூடுமாம். சனத்தொகையிலை பன்னிரண்டு வீதம் பிராக்கில்லாட்டி உலகத்திலை புரட்சி வருமாம். அது பிராக்குப்பாக்கிற பொருளாதாரக் காறன் சொன்னது. பிராக்குத் தேடினா பிராக்குக்காட்டுறதுக்கு ஆளும் இருக்கத்தானே வேணும்.

தாய்மார்க்கு நல்லாத் தெரியும் பிள்ளையளைப் பிராக்காட்ட. தாய்க்குப் பிள்ளையைப் பிராக்காட்டுறதே பெரிய பிராக்கு. பிராக்குக் கள்ளி யெண்டாத் தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளி விடுவாளாம். பிராக்குக் காட்டுறவளுக்கு என்னண்டு பிராக்குக் காட்டுறது?

அண்டைக்கு ரீச்சர் படிப்புச்சுக் கொண்டு இருந்தா. நான் பாடத்தை விட்டுட்டு ஒன்றையைப் பிரட்டிக் கொண்டிருந்தன். மயிலிறகு குஞ்சு பொரிச்சிருக்கோ எண்டு பார்க்க. ரீச்சர் எல்லாரையும் பார்த்துக் கொண்டுதான் படிப்பிப்பா. அவ கண்டிட்டா, என்னடா பிராக்கு பார்க்கிறாய் எண்டு அடிச்சுப்போட்டா. ரீச்சரின்ரை பிராக்கு, பிராக்குப் பாக்கிறவைக்கு அடிக்கிறது. ஆனா பிள்ளையள் பிராக்கு பாக்கிறதை விட்டாத்தானே.

குழந்தைகளை பிராக்குக் காட்டத்தான் எத்தினை சாமான்கள் வந்துட்டுது. முந்தியெண்டா ஒரு சந்தனக் கட்டை மட்டும்தான். பிள்ளை அதை வாயுக்கை வெச்சாலும் சௌக்கியம் தான். இப்ப உலகம் முன்னேறி விட்டுதாம். கட்டையை அமத்தினால் காணும் சித்து விளையாடும் பொம்மைகள் – றப்பரிலை, தகரத்திலை. இரும்பிலை. பிளாஸ்டிக்கிலை எல்லாம் போலிதான். போலியைச் செய்யுறதே ஒரு பிராக்குத்தான். போலியையும் திறமாச் செய்தா மூலமோ என்று சந்தேகம் வரும் அது நல்ல பிராக்கு. இப்படி பிராக்குக் காட்டுறதுக்குத்தான் எத்தினை தொழில்கள். விளையாட்டுக் கைத்தொழிலாம். பிறகு அதுக்கு விளம்பரம் பண்ணுறது பிராக்காகி விடும், பிராக்கெல்லாம் காசுக்குத்தான்.

அப்படியெண்டா பிராக்குப்பாக்குறது சரியா பிழையா? உண்மையிலை அது சரியோ பிழையோ எண்டு இன்னும் ஒருத்தருக்கும் தெரியாது. அதாலைதான் பிராக்குப் பாக்குறவையும் இருக்கினை. பிராக்குப் பாத்ததெண்டு சொல்லி அடிக்கிறவையும் இருக்கினை பிராக்கின்ரை குணமே அதுதான்.

பிராக்கு இல்லாட்டி ஆக்களுக்கு விசர் வந்திடுமாம். அதனாலை எல்லோரும் தாங்களே பிராக்குப் பார்க்கிறது மட்டுமல்லாமல் மற்றவையளையும் பிராக்குப் பாராமல் இருக்காதையுங்கோ எண்டு சொல்லினை. பிராக்கு இல்லாட்டி உலகத்தின்ரை நிலை என்ன? அப்ப பிராக்குப் பாக்கத்தானே வேணும்.

பிராக்குப் பாக்க வேணுமோ? வேண்டாமோ? பிராக்குப் பார்க்க வேண்டாம் எண்டு தெரிஞ்சா ஆர்தான் பிராக்குப் பாக்கப் போறான். ஆனா, பிராக்குப் பார்க்க கூடாது எண்டு சொல்லுற எல்லோருக்கும் பிராக்குப் பார்க்காம இருக்க வேண்டும் தெரியாது. அப்பிடி அவைக்கு அது தெரியுமெண்டா பிறகேன் பிராக்குப் பாராதை எண்டு சொல்லுறதையே பிராக்காக்கினை? இதாலைதான் அவை பிராக்குப் பாக்காமை இருக்க மாட்டாமை இருக்கினை.

இதாலை தான் உலகமே முழுவதும் பிராக்காலை நிறைஞ்சுபோயிருக்கு. எங்கே பார்த்தாலும் பிராக்குப் பாக்கிறவைதான். உலகமே பிராக்குத்தான் அது பிராக்குக் காட்டுறவற்றை பிராக்கோ ஆர்கண்டது! பிராக்குக்காட்டுறவன் ஆரடா எண்டு தேடுறதும் ஒரு தேவையில்லாத பிராக்குத்தானே!

அப்ப பிராக்குப் பாக்காமை சும்ம இருக்குமட்டும் பிராக்குப்பாப்பம். பிராக்கு வாழ்க கர்ம யோகம் வாழ்க.

# மலை சாய்ந்து போனது

**வன்னேரி ஐயா**

*விதையொன்றை நாட்டினோம்*
*துளிர்தழைத்து செடியானது*
*கண்ணீரைத் தண்ணீராயும்*
*செந்நீரை உரமாகவுமிட்டு*
*வளர்த்தெடுத்தோம் விருட்சமாய்*

*விருட்சமாய் நிழல் தந்து எமை*
*வெருட்சியின்றி வாழவைத்தது*
*வெயில் எமைத் தகிக்கவில்லை*
*கூடி மகிழ்ந்து குதூகலித்தோம்*
*இனியெமக்கு என்ன குறையென்று*

*சூறாவளியாய் வந்த பெருங்காற்றில்*
*விருட்சமது வேரோடு தகர்ந்து*
*சாயுமென யார் நினைத்தார்?*
*சரிந்துசாய்ந்த விருட்சத்துடன்*
*நகர்ந்து போனது எம் கனவுகள்*

# பெண் விடுதலை நோக்கி சாதகமான அம்சங்கள்! ஆனாலும்...



-சந்திரகாந்தா முருகானந்தன்

கடந்த சில ஆண்டுகளாகப் பெண் விடுதலை அம்சங்களும் பெண்ணியச் சிந்தனைகளும் சர்வதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பரவலாக்கப்பட்டு, பெண் விடுதலையை எட்டும் முயற்சிகள் பன்முகப்படுத்தப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. இதனால், பெண்கள் மத்தியில் விழிப்புணர்வும், புரிதலும், விடுதலை உணர்வும் மேலோங்கி வருவதும் சாதகமான அறுவடைகளாகும். எனினும், சமத்துவ அறுவடைகளை எட்டுவதில் பல தடைக்கற்களைத் தாண்ட வேண்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இலத்திரனியல் விஞ்ஞான விரிவாக்கத்தால் உலகமே உள்ளங்கைக்குள் சிறைப்படும் புதுமை ஏற்பட்டுள்ள அதே வேளை பல பெண்கள் இன்னமும் அடுப்பங்கரைச் சிறைகளிலிருந்து விடுபடவில்லை என்பதும் தரிசனமாகிறது.

பெண்களின், தம் அடிமைத்தனத்தைப் புரிந்து கொள்ளாத அறியாமையும், அதிலிருந்து மீள்வதிலுள்ள அக்கறையின்மையும், தம்மைத் தாமே தாழ்த்திக் கொள்கின்ற பேதைமையும், எதிலும் ஏனோ தானோ என்ற அசட்டையான போக்கும், சமத்துவத்திற்கான போராட்டத்தில் ஏற்படுகின்ற பின்னடைவுகளினால் சலித்துப் போகின்ற தளர்வும், எதிர்விளைவுகளை எதிர்கொள்ள முடியாத அச்சப்போக்கும், மீண்டெழமுடியாத வலிமையின்மையும் ஒன்று சேர்ந்தோ அல்லது தனியாகவோ, தடைக்கற்களாக நின்று, பால் சமத்துவத்தை எட்ட முடியாமல் பின்தள்ளிவிடுகின்றன.

மேற் குறிப்பிட்ட அம்சங்களை எதிர்கொண்டு மீள்வதன் மூலமே பெண் விடுதலையை எட்ட முடியும். பெண்களின், போராடப் பின் நிற்கும் போக்கும், மனவுறுதியின் தளர்வும், ஆணாதிக்கத்தை வலிமை பெறச் செய்கின்றன. மரபு ரீதியாக வரும் அடக்குமுறைகளுக்கு, கலாசார, பண்பாட்டுக் கோலங்களினால் முலாமிடப்பட்டிருக்கும் ஒரு சிக்கலான தடையைத் தாண்டும்போது, வாரி இறைக்கப்படும் சேற்றினால், வலுமிக்க பெண்கள் கூட சோர்ந்து விடுகின்ற அவல நிலையைக் காண முடிகிறது. ஆனால், பெண்ணிய விடுதலை முன்னெடுப்புகளில் ஈடுபடுவோர் இவ்வாறு சோர்ந்து விடலாகாது.

மனித ஆளுமை என்பது பால் வேறுபாட்டிற்கு அப்பாற்பட்டது. மனிதமும், சுதந்திரமும் இரு பாலாருக்கும் பொதுவானவை. அதாவது ஆண்-பெண் என்ற பாகுபாடோ, வேறுபாடோ அற்ற பொதுவான உன்னதமே மானுடம் என்பது. எனவே, மனிதப் பிறவிகளுக்குப் பொதுவான உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டமே இன்றைய பெண் விடுதலைப் போராட்டம். இன்றைய பெண்கள் போராடுவது ஆண் வர்க்கத்திற்கு எதிராக அல்ல என்ற உண்மை உணரப்பட வேண்டும்.

அறியாமை, அச்சம், இயலாமை, புரியாமை என்பவற்றினால் காலாதிகாலமாக தாழ்வுற்றிருந்த பெண்ணினம் இன்று விழித்துக் கொண்டுள்ளது. தடைகள், தாக்கங்கள், ஆக்கிரமிப்புகள் என்பவை இனம் காணப்பட்ட போது, அவற்றிற்கெதிரான ஆக்கபூர்வமான சிந்தனைகளும், செயற்பாடுகளும் பல்வேறு பின்னடைவுகளிலிருந்து பெண்ணை விடுவிப்பதற்குப் பெரும் பங்கை ஆற்றியுள்ளன. இவ்வாறிருந்தும் உலகில் நிலவும் சமூக, பொருளாதார, அரசியல் ஆதிக்கப் போட்டிகளின் மத்தியில் பெண் விடுதலை முன்னெடுப்புகள் எதிர்பார்க்கப்பட்ட அதியுச்ச இலக்குகளை எட்ட முடியவில்லை.

மக்கள் மீது அக்கறையற்ற அதிகார வர்க்கத்தினர், கல்வி, கலை, பண்பாடு, மதம், தகவல் தொழில்நுட்பம் என்பவற்றைத் தமது ஆதிக்க நலன்களுக்குத் துணைபோகும் கருவிகளாகக் கொண்டுள்ளது போல் இன்றைய பெண் விடுதலை கோஷங்களையும் கூட தம் நலன்களுக்காகப் பயன்படுத்து கின்றனரேயன்றி, பால் சமத்துவத்தை ஏற்படுத்தும் சீரிய நோக்கம் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். பெண்பால் அரசியல் தலைமைத்துவங்கள் கூட இதற்கு விதிவிலக்கு அல்ல. பிரித்தாளும் தந்திரமென்பது, ஜனநாயகத்தின் சாபக்கேடு. சுடர் விட்டெழுந்திடும் மனிதத்தை ஊதி அணைக்கும் ஆதிக்கச் சதியை முறியடிக்க முடிந்தால்தான் மனிதநேயம் தக்க வைக்கப்படும். மக்கள் மத்தியில் இயல்பாக எழும் மானுடப் பண்புகளும், துயரில் முளைத்தெழும் மனித நேயமும் பேணப்படுமானால், அது அனைத்து ஒடுக்குமுறைகளிலு மிருந்து விடுபடும் மானுட சக்தியாக வலுப்பெறும். பெண் விடுதலை முன்னெடுப்புகளும் கூட இவ்வாறான ஒரு தளத்தில் வெற்றி கொள்ளப்படும் போதே பூரண சமத்துவத்தை எட்ட முடியும் என நம்பப்படுகிறது.

எமது நாட்டு வாழ்வு முறையில் நோக்கும் போது இவ்வழியில் எட்டப்படும் சமத்துவமானது, நெடுங்காலத்தை விழுங்கக் கூடுமாகையால், அடிப்படை பெண் உரிமைகளை ஒவ்வொரு குடும்ப மட்டத்திலும் எட்ட பெண்கள் முயல வேண்டும். குடும்ப அலகுக்குள்ளிருந்து, அவ்வலகு சிதைவுறாமல், பெண் தனது உரிமைகளை நிலை நிறுத்த செயற்படலாம்.

போராட்டம் என்கின்றபோது வெறும் எதிர்ப்புணர்வும், ஆயுதமேந்தலும் மட்டுமல்ல என்பதை அறவீர்கள்.

ஒடுக்கப்பட்டோர் தம்மை நிலைநிறுத்த முயல்வதும் போராட்டமே. போராட்டம் என்பது பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டுள்ளன. காந்தியும் மார்க்ஸும் போராட்டத்தை வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்தியமை கடந்த நூற்றாண்டுகளில் தரிசனமாகின. சாதி, இனம், மதம், சொத்துடைமை போன்றே பால் ரீதியான ஏற்றத் தாழ்வும், அதன் கூறான ஒடுக்குமுறைகளும், ஓர வஞ்சனைகளும் பெண்ணினத்தின் எதிர்ப்பைச் சந்தித்து வருகின்றமையே, இன்றைய பெண்ணிய எழுச்சி. இஃது ஆண்களுக்கு எதிரான போராட்டம் என்ற தப்பர்த்தம் கொள்ளலாகாது.

சமூகச் சூழலில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு போராட்டத்திலும், ஒவ்வொரு தனி நபரும் ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது யதார்த்தமே. அது சார்பு நிலையாகவோ, எதிர்நிலையாகவோ இருக்கலாம். ஒத்த இணக்கப்பாடான கருத்தை எட்டுவதே எந்த ஒரு போராட்டத்தின் இலக்குமாகும். ஒருவருடைய நிலைப்பாடு என்பது அறிவின் அடிப்படையில் ஆராய்ந்து எடுத்த முடிவாகவோ, சமூக நிலையும், சமூக அனுபவங்களும் ஏற்படுத்தும் முடிவாகவோ இருக்கலாம். பெண் விடுதலை முன்னெடுப்பிலும் பெண்ணியம் பற்றிய அறிவூட்டலும், சமூக அனுபவங்களின் செயற்பாடுகளும் இணைந்தவையாகவும் இருப்பதுடன், பால் வேறுபாடின்றி இருபாலாருக்கும் புரிதல், புரிய வைத்தல் என்ற தளங்களில் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

ஆணாதிக்கச் சமூகத்தவரின் மனவுலகில், பெண்கள் பற்றிய கருத்துகளில் பாரிய மாற்றங்கள் காணப்பட வேண்டிய காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆண்களின் மனதில் மட்டுமன்றி, மரபு ரீதியில் மூழ்கி ஆணாதிக்கத்தை வலியுறுத்தி நிற்கின்ற பெண்களின் மனதிலும் உள்ள கருத்தியல்கள் சீரமைக்கப்பட்டு, அவர்களது கருத்துலகில் ஆழமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான மாற்றங்கள் ஏற்படாமல் பெண் விடுதலை சாத்தியமாகப் போவதில்லை.

கடந்த கால் நூற்றாண்டின் பெண் விடுதலை முன்னெடுப்புகளின் பலாபலன்களை அவதானிக்கும் போது முன்சொன்ன நிதர்சனமான உண்மை தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எட்ட முடியாமல் போனமைக்கும் இவ்வாறான தெளிவான அணுகுமுறை இல்லாமற் போனமையும் முக்கியமான காரணமாகும்.

ஒழுங்கமைக்கப்பட்டதும், தீர்க்க தரிசன சிந்தனைகளை உள்ளடக்கியதும், சகலரையும் குறிப்பாகச் சொன்னால், இரு பாலாரையும் ஈடுபட வைப்பதுமான தளத்தில் சென்று பெண்விடுதலை காண இணைந்து நின்று எதிர்த்துப் போராட வேண்டியமையே சமத்துவத்தை எட்டுவதற்கான யுக்தியாகும்.

எந்த ஒரு போராட்டத்திலும் தொடர்ந்து எதிர்த்து நிற்றல் என்பது அசாத்தியமானது. இடையிடையே ஏற்படுத்தப்படும் சமரசமும், கருத்துப் பரிமாற்றமும், இலக்கை எட்டுவதற்கான முக்கிய அம்சங்களே! புரிய வைத்தலும், எதிர்ப்புணர்வை அகற்றலும், விடுதலையை எட்டும்போது, மேற்கொள்ளப்பட வேண்டிய மனமாற்றங்களை எட்டுதலும் மனம் கொள்ளப்பட வேண்டும்.

பெண் விடுதலைப் போராட்டத்தின் பல் பரிமாணங்களும், பகுத்தாராயப்பட்டே செயல் வடிவம் பெற வேண்டும். பெண்ணியம், பெண்ணுரிமை, பெண் சமத்துவம் பற்றிய தெளிவு ஏற்படுத்தபட வேண்டிய செயற்பாட்டுடனே, அடுத்த கட்டமாக மிக ஆழமான அறிவு நிலைப்பட்ட விவாதங்களும், முன்னெடுப்பு முறைகளும், செயற்பாடுகள் பற்றிய தெளிவும் ஆராயப்பட்டுத் தீர்மானிக்கப்பட வேண்டும். பெண்களின் சுதந்திரம், சமத்துவம் முதலானவற்றை ஈட்டும் முன்னெடுப்புகளின் போது ஆளுமை விருத்தியும், ஆற்றல் வெளிப்பாடும் ஏற்படுத்தல் அவசியமானது.

பால்நிலை சமத்துவம் பற்றிய கருத்தாடல் நிகழ்வுகளாலும், அறிவூட்டலாலும் மட்டுமின்றி, பங்காற்றலாலும் பெண்ணியம் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியதன் முக்கியத்துவமும் உணர்த்தப்பட வேண்டும். சமூக மட்டத்திலான ஒன்றிணைந்த போராட்டத்துடன், எமது பாரம்பரியமான குடும்ப அலகுக்குள்ளேயும் புரியவைத்தல், உரிமை பேணல் என்கிற அம்சங்களில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் போது, குடும்ப அலகுகள் உடையாமற் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பெண் விடுதலை முன்னெடுப்புகளின் போது மனரீதியான மற்றும் உடல்ரீதியான நெருக்கடிகள் ஏற்படவே செய்யும். இவற்றைத் துணிவுடனும், சாதுரியமாகவும் எதிர் கொண்டு, உறுதியுடன், மனம் சோராது நின்று, அவற்றைப் புறக்கணித்து மனோபலத்துடன் பெண்கள் செயற்பட வேண்டும். முன் வைத்த காலைப் பின்வைத்துச் சோர்வடைந்தால் மரபு வழிச் சமூகத்தின் நடைமுறையிலுள்ள பழைமையான சட்டதிட்டங்களுக்குள் மீளவும் அமிழ்ந்து போகின்ற பின்னடைவு ஏற்படும். இதன் விளைவாகப் பெண்ணடிமைத்தனமே மீண்டும் எஞ்சும். வினைத் திறனுடனும், துணிவுடனும் செயற்பட்டால் மட்டுமே உச்சமான வினைத்திறனை எட்டமுடியும். தீங்குறு பிரிவினர் மேலெழ முடியும்.

பெண்ணியம் பற்றிய தெளிந்த அறிவுடன் எழுகின்ற அல்லது கருத்தாடுகின்ற பெண்ணிலைவாதிகளை விட, அவற்றைப் புரிந்து கொண்டு, சூழலுக்கேற்ற நடைமுறைச் சாத்தியமான திட்டங்களை சமூக மட்டத்தில் முன்னெடுத்துச் செல்கின்றவர்களின் பங்களிப்பே இன்று அதிகமாகத் தேவைப்படுகின்றது. பெண்ணியச் சிந்தனையாளர்களின் அறிவுத்திறனுடனும், சூழலோடு இணைந்து செயற்படுபவர்களின் செயற்திறனும், செயற்பாட்டனுபவமும் ஒன்றிணைய வேண்டும். பெண் சமத்துவத்தை எட்டுதலை இலகுபடுத்த இது பெரிதும் உதவிடும்.

பெண் விடுதலை முன்னெடுப்பில், பெண்ணின் இல்ல உழைப்பின் அதியுயர் பெறுமானமானது சமூக மட்டத்தில் உணர்த்தப்பட வேண்டும். அத்துடன், பெண் சுயமாக உழைத்துப் பொருளீட்டல், சேமித்தல், பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ளல் என்பன ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

சடங்கு சம்பிரதாயங்கள், கலாசார, பண்பாட்டு மரபு வழி அம்சங்கள் அனைத்துக்குள்ளாலும் பெண்ணின் உரிமைகளையும் சமத்துவத்தையும் மீட்டெடுக்க வேண்டியுள்ளது. பெண் மீட்டெடுக்கப்பட்டு சமத்துவ நிலையடையும் போது முழுச் சமூகமும் இதனால் பெருநன்மை பெறும்.

# அகதியாய் ஓடமாட்டேன்!

கா.தவபாலன்

“இரத்தமும் வேர்வையும் சிந்திக் கட்டிய இந்த வீட்டையும், தாய் தந்தையர் தந்த காணி பூமிகளையும், வயல் வாய்க்கால் வருமானங்களையும் விட்டிட்டு அகதியாய் அங்கையும் இஞ்சையும் அலைஞ்சு திரிய நான் விரும்பேல்லை; செத்தாலும் சாவேனே தவிர எனது மண்ணை விட்டு அகதியாய் எங்கும் ஓடமாட்டேன்” என்று கூறி இடம் பெயர மறுத்து விட்டார் தர்மலிங்கம். “அப்பா வராட்டி நாங்களும் அவரை விட்டிட்டு எங்கும் போக மாட்டம்” என்று மகள் சாந்தியும் கூறிவிட்டாள். ஊர்மக்கள் எல்லோரும் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு இடம்பெயர்ந்து சென்றுவிட்டார்கள். வெகுதூரத்தில் ஷெல் விழும் சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருக்கிறது. சாந்தியின் கணவன் தியாகு சொன்னான். “முழுச் சனமும் இடம் பேர்ந்து போட்டுதுகள்; நாங்கள் மட்டும் இருந்து என்னத்தைச் சாதிக்கிறது; சுத்தி வர ஷெல் விழத் தொடங்கீட்டுது; வாருங்கோ மாமா எங்காவது போவம்” என்று. “அதுதானை தம்பி பாருங்கோவன்; உந்தாள் சொல்வழி கேக்குதில்லை” என்று திருமதி தர்மலிங்கமாகிய தங்கம்மாவும் அலுத்துக் கொண்டாள். சாந்தியும் கணவனுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கத் தவறவில்லை. மகளின் குடும்ப நன்மையைக் கருத்தில் கொண்டவராக தர்மலிங்கம் ஒருவாறு பிடிவாதத்தைக் கைவிட்டு இடம் பெயரச் சம்மதித்தார்.

தர்மலிங்கத்தார் தியாகு இருவரின் துவிச்சக்கர வண்டிகளையும், கொப்பறையில் இருந்த நெல்லைச் சாக்குகளில் கட்டி அவற்றையும், ஏனைய முக்கிய பொருட்களையும் மட்டும் தியாகுவின் டிராக்டரில் ஏற்றினர். சாரதி ராசு டிராக்டரை ஸ்ராட் செய்ய அவனருகில் தர்மலிங்கமும் அமர்ந்து கொண்டார். டிராக்டரில் ஏறுவதற்கு பிள்ளைகளும் அடம் பிடித்தார்கள். பிள்ளைகள் டிராக்டரில் இருக்க முடியாது என்று கூறி சாந்தி பிள்ளைகளைத் தடுத்து விட்டாள். ஆட்டோக்கள் எல்லாம் இடம் பெயர்ந்து சென்று விட்டதால் தங்கம்மா, சாந்தி, பிள்ளைகள் ஆகியோரின் பிரயாணத்துக்குக் கை கொடுத்தது மாட்டு வண்டி ஆகும். பொருட்கள் ஏற்றும் தட்டின் மீது எருதுகளின் உணவான வைக்கோலைப் பரப்பி அதன்மேல் பன்பாய்களை விரித்து அனைவரும் ஏறி அமர தியாகு வண்டிச் சாரதியாகக் கடமை ஏற்றான். தண்ணீரூற்றில் இருந்து மணல் பாதை வழியாக வந்து, தார் றோட்டில் ஏறி ஆலடி வளைவில் திரும்பி, முல்லைத்தீவு வீதியால் நேராகச் சென்று, குமுழமுனை றோட் சந்தி மாஞ்சோலை ஆஸ்பத்திரி ஆகியவற்றைக் கடந்து வற்றாப்பளைச் சந்தியை வந்தடைந்தனர். அங்கிருந்த கற்பூரக் கல்லின் மீது கற்பூரம் கொழுத்தி வற்றாப்பளை கண்ணகி அம்மனை மானசீகமாக வழிபட்டபின் தொடர்ந்து செல்கின்றனர். வற்றாப்பளை தாண்டிக் கோப்பாபுலவு வீதியால் தென்னந் தோப்புகளைக் கடந்து கோப்பாபுலவுக் கிராமத்தை வந்தடைந்தனர். புதுக்குடியிருப்பு எல்லைப் பகுதியில் ஷெல் சத்தம் கேட்ட வண்ணம் இருந்தமையால் தம்பி சுப்பிரமணியத்தின் வீட்டில் தங்கிச் சிறிது தாமதித்துச் செல்ல முடிவு செய்தார் தர்மலிங்கத்தார். டிராக்டரைத் தெரு ஓரமாக நிறுத்திவிட்டுப் பார்த்த போது வீடு பூட்டியிருந்தது. தம்பி குடும்பத்தினர் இடம் பெயர்ந்து சென்று விட்டார்கள் போல் இருக்கிறது. வளவு முழுவதும் தென்னை மா, பலா, வாழை என்று ஒரே பசுமையாக இருக்கிறது. இக் கிராமத்தில் இன்னும் ஷெல் விழத் தொடங்கவில்லை என்பது புலனாகியது. இருவரும் மாமர நிழலில் சிறிது நேரம் இளைப்பாறியபின்னர்.

கிணற்றடிக்குச் சென்று முகம் கை, கால் கழுவிவிட்டு வந்து சாப்பிட்டுப் பசியாறினர். மாலை நேரம் ஆகிவிட்டது. மாட்டு வண்டி அப்போதுதான் வந்து சேர்கின்றது. வற்றாப்பளையில் தங்கி சாப்பிட்டு விட்டு வருவதாகக் கூறினார்கள். ஷெல் சத்தம் முற்றாக ஓய்ந்து விட்டது. அகதிகள் அவசரம் அவசரமாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். தர்மலிங்கத்தார் சொன்னார்; “சரி கதைச்சுக் கொண்டு நிக்க நேரமில்லை; நாங்கள் போறம்; நீங்கள் பின்னாலை வாருங்கோ” என்று பிள்ளைகளை அள்ளிக் கட்டித் தழுவிவிட்டுத் தர்மலிங்கத்தார் டிராக்டரில் ஏறி அமர்ந்தார். தங்கம்மா சொன்னாள் “பார்த்துக் கவனமாய்ப் போங்கோ” என்று.

டிராக்டர் ஒரு கால் மைல் தூரம் கூடப் போயிருக்காது. காதைச் செவிடாக்கும் படு பயங்கரமான சத்தமொன்று அப்பக்கமாகக் கேட்டது. அது நிச்சயமாக ஒரு ஆட்டிலறி ஷெல் ஆகத்தான் இருக்கவேண்டும். தங்கம்மாவும், சாந்தியும், பிள்ளைகளும் பயத்தால் குளறத் தொடங்கிவிட்டார்கள். தூரத்திலைதான் சத்தம் கேட்டது; பயப்படாதேங்கோ என்று ஆறுதல் கூறிய தியாகு, ஷெல் மீண்டும் விழுமோ என்று உள்ளூரப் பயந்தபடி மெல்ல மெல்லச் சென்று பார்த்த போது தர்மலிங்கத்தாரும் ராசுவும் ஷெல்லுக்கு இரையாகி இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து செய்வதறியாது திகைத்து நின்றான்.



**புதிய தலைமுறைப் படைப்பாளிகள் அறிமுகம் : 38**

**யாழ் நிலா என்ற புனைபெயரில் எழுதும் திருமதி பா. யாழினி யாழ். துன்னாலையில் 17.11.1978ல் பிறந்தவர். க.பொ.த. உயர்தரத் தகைமை கொண்ட இவர் ஓர் ஆசிரியர். இவரது முதலாவது சிறுகதை 'மேள ஓசை' கல்வியியல் கல்லூரிகளுக்கிடையிலான போட்டியில் பரிசு பெற்றது. வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு நடாத்திய சிறுவர்களுக்கான தேசிய மரபுரிமைப் போட்டியில் 'நாகதாளிப் பழங்கள்' என்ற கதை இரண்டாம் இடத்தினையும் அகில இலங்கை இலக்கிய சங்கம் நடாத்திய அமரர் கந்தையா வடிவேலு ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் 'செவ்வரத்தம் பூக்கள்' என்ற சிறுகதை மூன்றாம் இடத்தையும் பெற்றன.**

**இவரது தொடர்பு முகவரி : தாமரைக் குளத்தடி, துன்னாலை மேற்கு, கரவெட்டி**




பனிபடர்ந்த இருளில் யன்னல் கதவிடுக்குகளினூடாகவும் கிறில் ஓட்டைகளினூடாகவும் பனி சீறியடித்துக்கொண்டு வந்தது. எங்கோ ஒரு சில சேவல்கள் கூவத் தொடங்கியிருந்தன. ஒன்றொன்றாய் ஒன்றைப் பார்த்து ஒன்று மாறிமாறிப் கூவிக் கொண்டிருந்தது. காதோட்டைகளின் வழியே பனி புசுபுசுவென போய்விடுமென்ற பயத்தில் தலையிலிருந்து கால்வரை போத்தியபடி படுத்திருந்த கணவனைக் கண்கொட்டாமல் பார்த்தபடி இருந்தாள் தமையந்தி.


கண்கள் தூக்கத்தை இழந்து ஒரு சில நிமிடங்களே என்றாலும் மறுபடி தூங்க முடியவில்லை. மனத்தை ஏதோ குடைந்தது. 'கனவு பலிக்குமா?' விடியற்காலைக் கனவுகள் பலிக்கும் என்றுதானே சொல்வார்கள். பல் வரிசையைத் தடவிப் பார்த்தாள். எல்லாப் பற்களும் ஓர் ஒழுங்குடன் இருந்தன. முன் பல் கழன்று கையோடு வந்துவிட்டதாகத்தானே கனவு. "வல்லிபுர ஆழ்வாரே யாருக்குக் கெடுதல் வரப் போகுதோ? சிந்தித்துப் பார்த்த போது நெஞ்சு பகீர் என்றது. இனித் தூக்கமேது? அமைதியேது? இன்றைய பொழுது நன்றாக அமைய இறைவன் தான் துணை செய்ய வேண்டும் என்ற பிரார்த்தனைகளோடு படுக்கையை விட்டெழுந்து சமயலறையை நோக்கி நடந்தாள்.

மனசை உடல் வென்றது. வேலைகள் மளமளவென்று நடந்தன. சில நாட்களாய் ஆயிரம் கேள்விகள் நெஞ்சுக் குழிவரை எட்டிப் பார்க்கிறது. விடை பகரத்தான் யாருமில்லை. உத்தியோகம், உத்தியோகம் என்று பதறி அடித்து ஓடுவதும் பிறகு படுக்கையில் விழுவதும். மீண்டும் சமையல், சாப்பாடு உத்தியோகம் இதில் ஒரு 'ரிதம்' வந்து விட்டது. ஆனால் 'ரசம்' கெட்டு விட்டது. வாழ்வை இரசிக்க முடியவில்லை. இரசிக்கக் கற்றுக் கொடுக்கும் தேவை தமையந்திக்கு என்றுமே இருந்ததில்லை. அவள் ஒரு இரசிகை. மனம் லயிக்க எல்லாவற்றையுமே இரசித்துப் பார்ப்பவள். புழுவையும் பூச்சியையும் கூட புதினம் பார்ப்பவள். அவளுக்கு நல்ல குடும்பத்தை சிறந்த கணவனை எல்லாமே கடவுள் தந்திருந்தார். ஆனால், சில நாட்களாய் அவள் பத்திரிகையைப் புரட்டிப் பார்த்துவிட்டுப் படுக்கவும், படிக்கவும், பிறருடன் பேசிக் கொள்ளவும் முடியாமல் மிகவும் திண்டாடுகிறாள். மனசின் மூலையில் மூளையின் ஓரத்தில் அரிக்கும் கவலை உடலில் கூட அதிர்வை உண்டாக்குகிறது.

கனத்துப் போன இதயத்தோடு இன்று சனிக்கிழமை என்ற நினைவில் காலைச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வீடு வாசலைத் துப்புரவு செய்யலானாள். படுக்கையிலிருந்து எழுந்த கணவன் ரேடியோவை முறுக்குவது தெரிந்தது. அதில் யாழ் எவ் எம்மில் சினிமாப் பாடல்கள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன. நேயர் ஒருவர் ஆர்வமாகப் பாட்டுக்கேட்டுக் கொண்டிருந்தார். அறிவிப்பாளர் கொஞ்சம் தமிழில் பேசிக் கொண்டிருந்தார். இந்த உலகத்தின் போக்கில் தமையந்திக்குச் சிரிப்பு வந்தது.

ஒரு புறம் உயிருக்காக ஏங்கித் துடித்து ஓடி ஒளிந்து ஒப்பாரி வைக்கும் மனிதக் கூட்டம், மறுபுறம் இந்தக் கூத்துக்களும் நடக்கத்தானே செய்கிறது. கடவுளே என்ன வாழ்க்கையிது! மனிதனின் நடத்தைகளில் ஏனிந்த இடைவெளிகள். கணவன் குளிப்பதற்காய்ச் சென்றுவிட, "உக்"கென்று ரேடியோவை நிறுத்திவிட்டு ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

கடவுள் பற்றியும் அவரது தண்டனைகள் பற்றியும் அறிந்திருக்கிறான். பாவம் செய்தவன் தண்டனை அனுபவிப்பான் என்றும் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்றும் வினை விதைத்தவன் வினையறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான்' என்றெல்லாம் சொல்லக் கேட்டிருக்கிறாள். ஆனால் இன்று ஐந்து வயதில், ஒன்பது வயதில், நான்கு மாதத்தில் எனச் சின்னஞ் சிறிய வண்ணத்துப் பூச்சி போன்ற குழந்தைகள் குடல் சிதறிக் கொன்றொழிக்கப் படும் விதியை... அக்குழந்தைகளின் உயிர் துடிக்கத் துடிக்க



“தமையந்தி உனக்கென்ன சித்தப் பிரமை பிடிச்சிட்டுதே முகட்டை வெறிச்சுப் பாக்கிறாய்? என்னப்பா என்ன வந்திட்டுது” என்ற கணவனின் கையிலிருந்த தினசரி பத்திரிகையைப் பார்த்து விட்டு அதை வெடுக்கெனப் பறித்தாள். அதில் பரபரப்பாய் எதையோ தேடினாள். ‘எதைத் தேடுகிறாள் என்ன தேடுகிறாள் என்று கணவன் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

எதை இருக்கக் கூடாது என்று தேடினாளோ எது நடக்கக் கூடாது என்று பிரார்த்தனை செய்து வந்தாளோ அது பத்திரிகையில் இருந்தது. பெருங் குரலெடுத்து அழ ஆரம்பித்து விட்டாள். பத்திரிகையை வாங்கிப் பார்த்த கணவன் தமையந்தியின் வாயில் கைவைத்து சத்தம் போட விடாது தடுத்தான். “தமையந்தி சத்தம் போடாதை உதால வீண் பிரச்சினை. துன்பமான விஷயம் தானப்பா என்ன செய்ய? எல்லாம் விதி. நீ சத்தம் போட்டு ஊரைக் கூட்டாதை முதலில் கண்களைத் துடை. அழுவதை நிறுத்து” என்று சொல்லி ஆதரவாய் முதுகைத் தடவிக் கொடுத்தான்.

தமையந்தியால் கணவனைப் பார்க்க முடியவில்லை. தோழி சியாமளாவின் அழகிய முகமே எதிரில் நின்றது. அவளையும் அவளது குடும்பத்தையும் நினைத்த போது அடிவயிறு பற்றி எரிந்தது. இது போல எத்தனை குடும்பங்கள் குண்டுகளால் சிதறிப் போகிறது. வாய்விட்டு அழ முடியாத வாழ்வியலின் துர்ப்பாக்கியத்தை நினைத்து உள்ளுக்குள் குமுறி அழுதாள். ஊருக்குள்ள கிட்டடியில ஒரு செத்த வீடாவது வரவேணும்” மனத்துக்குள் கணக்குப் போட்டாள். ஏன் தெரியுமோ? வாய் விட்டுக் கதறி அழுவதற்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்துவிடும். அவளின் சியாமளாவிற்காக இவள் எப்ப அழுவாளோ? அதற்கு முன் கணவன் சொன்னது போல சித்தப் பிரமை கிரமை வந்து விடுமோ? மாறுபட்ட சிந்தனைகளில் அவள் துடித்துக்கொண்டிருக்கையில், கணவன் அவள் துப்பரவு செய்யத் தொடங்கிய வேலையில் தான் ஈடுபட்டிருந்தான்.

அழகான பொட்டுப் பூச்சிகள் நிலை குலைந்து நிலத்தில் கிடந்தன. அவற்றின் மணிக் கூட்டுக் கம்பி போன்ற கால்கள் துடித்துக் கொண்டிருந்தன. அங்கும் இங்குமாய் ஓடி ஒளியும் பொட்டுப் பூச்சிகளை கணவன் தேடித்தேடி அடித்துக் கொன்றான். கூடுகளைப் பிய்த்து எறிந்தான். அவள் விதிக் குரங்கின் விளையாட்டை வேடிக்கை பார்க்க முடியாமல் பார்த்தபடி அசையாது இருந்தாள். அவளின் கண்கள் அழகிய பொட்டுப் பூச்சி ஒன்றின் மேல் நிலைகுத்தி இருந்தது.

அழிவினைக் கொடுத்த கொடுக்கின்ற விதியை அதை வகுத்த இறைவனை என்னவென்று சொல்ல?

தமையந்தியின் கைகள் வேலையை மறக்கவில்லை. அவள் நீண்டநாளாய் தூசி தட்டாது படிந்து போய் அங்கு மிங்கும் தூங்கும் ஒட்டடைகளைத் துப்பரவு செய்வதற்காய் தென்னோலை ஒன்றைக் கட்டி எடுத்து வந்தாள். வீட்டின் மூலையில் ஆங்காங்கே அழகான பொட்டுப்பூச்சிகள் சிறிய பெரிய வலைப்பின்னல்களோடும் தமது குஞ்சுகளோடும் அமர்ந்திருந்தன. தூசி தட்டி அவற்றை நாசஞ் செய்ய அவளால் முடியவில்லை. அழகாய் கட்டிய வீடு. ஆசையாய் பெற்ற குஞ்சுப் பூச்சிகள். அங்குமிங்குமாய்த் துள்ளி ஓடும் அவற்றின் மகிழ்ச்சி ஆரவாரம். இவை ஏன்தான் வீட்டினுள் குடியேற வேண்டும். வீட்டைச் சுத்தம் செய்ய அவற்றை நாம் கொல்ல வேண்டும். அவற்றின் வீடுகளைப் புடுங்கி குஞ்சுகளை விழுத்தி அடித்து கூட்டைச் சிதைத்து சின்னா பின்னப் படுத்தி அவற்றின் துயருக்கு நாமே காரணமாகிறோம். இந்தப் பொட்டுப் பூச்சிகளின் அழுகுரலை என்றாவது நாம் கேட்டதுண்டா? அவற்றின் கண்ணீரை யாரும் பார்த்ததுண்டா?

இந்தப் பொட்டுப் பூச்சிகள் செய்த குற்றமென்ன... வெளியில் வீட்டைக் கட்டாமல் எமது வீட்டுக்குள் குடி புகுந்தது மட்டும் தானோ அவை செய்த குற்றம். அவற்றிற்குப் பேசத் தெரிந்தால் இது என் வீடு என்று பேசியிருக்குமோ? அவை எங்களைக் கடித்ததில்லை. எங்களைக் கோபித்தது கூட இல்லை. ஆனால் நாங்கள் அவற்றை அழிக்கவே முயல்கிறோம். இது எந்த விதத்தில் நியாயம். புலிநகச் சிலந்திகள் கடித்தால் விஷம். அதனால் அமாவாசை நாட்களில் கைகால் குறட்டும் என்றும் சொல்வார்கள். ஆனால் பொட்டுப்பூச்சி அது என்ன செய்தது? அதற்கு எங்களது வீடுதானே தஞ்சம் அவை எங்கே போகும்? மழையிலும் வெய்யிலிலும் இருந்து பாதுகாப்பை எமது வீட்டில் பெறுகிறது. அதற்கு நாம் இவ்வளவு பெரிய தண்டனையை கொடுக்கலாமா? இங்கே இதுதான் விதியென்று சொல்ல வேண்டுமா?

துப்பரவு செய்வதை மறந்து நின்ற தமையந்தியை கணவன் உலுக்கிய போதுதான் நினைவு பெற்றாள்.

# கலைச்செல்விக் காலம் சிற்பி

## 12. முதலாம் ஆண்டு மலர்

1958ஆம் ஆண்டு ஆடி மாதம் வெளிவரத் தொடங்கிய "கலைச்செல்வி"க்கு 1959ஆம் ஆண்டு ஆனி மாதத்துடன் ஓராண்டு முடிவடைந்ததாயினும், அந்தக் காலப்பகுதியில் பதினொரு இதழ்கள் மட்டுமே வெளிவந்தன. முதலாம் ஆண்டு மலரும் சற்றுத் தாமதமாகி 1959 ஐப்பசியில் வெளிவந்தது.

"கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல். அதில் நிகழும் அன்பொழுக்கமும் நெய்தல். நெய்தல் என்றால் இரங்குதல். பிரிவு, பாலை. பிரிந்தபின் காத்திருப்பது முல்லை. வரவு நீட்டித்த போது நிகழ்வது நெய்தல். அஃதாவது இரங்குதல். புலம்புதல் என்றுஞ் சொல்லலாம்" எனத் தொடங்கும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் "நெய்தல்" கட்டுரை ஆண்டு மலரின் முதற்கட்டுரையாக இடம்பெற்றது.

அருச்சுனனிடமிருந்த விசேட வில்லாண்மைக்குத் துரோணாச்சாரியாரின் பாரபட்சமான போதனையும் பயிற்சியுமே காரணமாக இருக்குமோ?; துரியோதனனுக்கு ஏற்பட்ட பொறாமை கலந்த சந்தேகத்தைத் தீர்த்து வைப்பதற்குத் துரோணாச்சாரியார் கையாண்ட உத்தியை "அம்பின் குறி" என்ற சுவையான கதையாகக் கூறுகின்றார் கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன்.

அன்பும் பண்பும் அறமும் செழிக்க அருமையான பல சிறுகதைகளையும் நாவல்களையும் எழுதிவரும் "அகிலன்", "கலைமக"ளின் தலைமகன்! "பாவை விளக்"கின் ஒளியைத் தொடர்ந்து "குலமகள் ராதை" திரைக்கு வர இருக்கின்றாள். அகிலனின் எழுத்திற்காக ஏங்கி நிற்கும் அனைவர்க்கும் "சிறுகதை" பெருவிருந்து – என்ற அறிமுகக் குறிப்புடன் அவருடைய "சிறுகதை" என்ற கட்டுரை பிரசுரமானது.

"அஞ்சிலைக்கை வேடனார் அன்பின் வடிவானார்" என்பது கனக. செந்திநாதன் எழுதிய கட்டுரையின் தலைப்பு. சிவபெருமான் மீது கண்ணப்பன் வைத்திருந்த அன்பின் ஆழத்தை பக்தியின் மேன்மையை நெஞ்சில் நிறுத்தும் வகையிலே ஈழத்துக் கவிஞர் ஒருவர் பாடிய கதைப் பாடலை வாசித்து அதன் அழகிலும் அமைப்பிலும் அடிநாதமாய் விளங்கும் அருட்சக்தியிலும் நெஞ்சைப் பறிகொடுத்து "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற நோக்கில் வாசகர்கட்கு அறிமுகஞ் செய்து வைக்கிறார் கனக. செந்திநாதன். "அதெல்லாம் சரி, இந்தக் கவிதையை எழுதியவர் யார் என்று சொல்லாமல் வீண்கதை அளக்கிறீர் என்கின்றீர்கள்? ஈழத்தின் பிரபல கவிஞராய் இருந்தது மாத்திரமல்ல தமிழ் பேசும் இடமெல்லாம் தன் ஒளியைப் பிரகாசிக்கச் செய்தவரும் யாழ் நூல், ஆங்கிலவாணி, மதங்கசூளாமணி ஆகிய நூல்களின் ஆசிரியருமாகிய சுவாமி விபுலானந்தர்தான் இதன் ஆசிரியர். அவரைத் தவிர வேறு யார் இப்படிப் பாடமுடியும்? எனக் கட்டுரையின் முடிவுப் பகுதியிற் கட்டுரையாசிரியர் கேட்பது, அடிகளாரின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையையும் தூய இறைபக்தியையும் அவர் போற்றிப் பெருமைப்படுவதைக் காட்டுகின்றது.



மு. தளையசிங்கம், சிற்பி, அகலவத்தை செ. நடராசா, ஜீவா, சொக்கன், ப. பொன்னையா, வ. அ. இராசரத்தினம், இ. நாகராஜன், காசி. ஆனந்தன், அப்துஸ்ஸமது, தீவான், ஜோவலன் வாஸ், கே. டானியல், மயில்வாகனன், இ. பொன்னையா ஆகியோர் 1959 மார்ச் மாதத்தில் இலங்கை இந்தியச் சஞ்சிகைகள் – பத்திரிகைகளில் எழுதிய 18 சிறுகதைகள் சம்பந்தமான விமர்சனத்தைச் "சிவா" எழுதினார்.

"கலைச்செல்வி" அலுவலகம் அமைந்துள்ள கந்தரோடை, மிகப் பழைய காலத்திலே யாழ்ப்பாணத் தமிழ் அரசின் தலைநகரமாக இருந்தது. பிறநாட்டு வணிகர்கள் பலர் இங்கு வந்து போனதற்குப் பல சான்றுகள் உண்டு. "கயக்கணை" என்ற இடத்திலே அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு சைவ, பௌத்த சின்னங்கள் பல வெளிக்கொணரப்பட்டுள்ளன. இவ்வூரிலுள்ள பல்வேறு குறிச்சிகளில் வெளிநாட்டு நாணயங்கள் பல காலத்துக்குக் காலம் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இவைபற்றி "யாழ் நாட்டு இறந்த நகர்ச் செல்வங்கள்" என்ற தலைப்பிலே ஆசிரியர் சி. பொன்னம்பலம் எழுதிய நீண்ட கட்டுரையின் முதற்பகுதி இந்த ஆண்டு மலரில் இடம்பெற்றது.

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களின் முன்னோடிகள் எனப் பொதுவாகக் கருதப்படும் மூவர்களில் ஒருவரான சி. வைத்திலிங்கம் "எழுத்துலகில் நான்" கட்டுரையை எழுதியிருந்தார். "கதை எழுதுவதென்றால் ஏதோ உல்லாசமான பொழுதுபோக்கு என்று சிலர் கருதுகின்றார்கள். நானும் ஆரம்ப நாட்களில் அப்படித்தான் நினைத்திருந்தேன்.... சுவையான கதைகள் எழுதுவதென்றால் எவ்வளவு கஷ்ட மென்பது போகப் போக, பேனாவைக் கையிலெடுத்தபோது

தெரியவந்தது. இரவு பகல் அதைப் பற்றிய சிந்தனை, பல உருவங்களாக வந்து கொண்டிருக்கும். மிக நுண்மையான உணர்ச்சியையும் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற சொல் வந்து அமைந்தால் தான் கதையில் உயிர்த்துடிப்பும் கலை அழகும் ஏற்படும். கதையை அழகாய் வடித்து எடுக்கவேண்டுமென்றால் அதற்கு ஓயாத உழைப்பு வேண்டுமென்று தெரிந்து கொண்டேன்'' என அவர் கூறுவதை எல்லா எழுத்தாளர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்பது நிச்சயம்.

இலங்கையில் நவீன இலக்கியத்தின் தோற்றம், அதன் வளர்ச்சிக்கு, சிறப்பாகச் சிறுகதை வளர்ச்சிக்கு வழிவகுத்த சஞ்சிகைகள், ஒவ்வொரு காலத்திலும் தோன்றிய எழுத்தாளர்கள் – போன்றவற்றை உள்ளடக்கிய வரலாற்று ரீதியான கட்டுரையொன்றை ''மறுமலர்ச்சி இயக்கத்துக்குப் பின்'' என்ற தலைப்பில் ''ஈழத்துச் சோமு'' எழுதினார். கட்டுரையின் முதற்பகுதி இந்த ஆண்டு மலரில் வெளிவந்தது.

உதிர்ந்த நினைவு (சகிதேவி தியாகராசா), செல்லாக்காசு (உதயணன்), புதுயுகப்பெண் (வரதர்), சாந்தி (பித்தன்), சபலம் (சம்பந்தன்), வெறுங்கோயில் (சு.வே) ஆகிய ஆறு கதைகளை இந்த ஆண்டு மலரில் வெளியிட்டதை நினைத்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். ஒவ்வொருவருடைய தனித்துவ முத்திரையும் கதைகளிற் காணப்படுகின்றது. ''கனவு காட்டிய உண்மை'' என்ற சிறுவர் கதையைப் ''பூங்குயில்'' என்ற புனைபெயரிற் பரராஜசிங்கம் எழுதியிருந்தார்.

நமது நாட்டைப் பொறுத்தவரை, வெறும் பொழுது போக்கிற்காகவோ, பணம் சம்பாதிப்பதற்காகவோ இலக்கியத் துறைக்கு வந்துள்ள எழுத்தாளர்கள் குறைவென்றே, இல்லையென்றே சொல்லிவிடலாம். ஒவ்வொருவரிடமும் ஓர் இலட்சியம் – உயர்ந்த இலட்சியம் உண்டு. ''உங்கள் இலட்சியம் என்ன?'' என்பதைக் கவிதை உருவிலேயே எழுதியனுப்ப வேண்டும் என்று கேட்டதற்கிணங்க, பரமஹம்சதாசன் (எனது இலட்சியம்), முருகையன் (எண்ணம்), தான்தோன்றிக் கவிராயர் (கடவுளாக வேண்டும்), நீலாவணன் (எனது இலட்சியம்), ''மஹாகவி'' (கண்ணீர் இருதுளி) ஆகியோர் அனுப்பிய கவிதைகள் வெளியிடப்பட்டன.

டில்லிப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் சாலை. இளந்திரையன் ''நேயம் மலர்ந்தது'' என்ற தலைப்பில் எழுதியனுப்பிய கவிதையும் மலரில் இடம்பெற்றது.

> ஓங்கிடு புகழ் சே ரீழ நாட்டிலே மலர்ந்து செஞ்சொற்
> நீந்தமிழ் மிளிர்ந்து யார்க்கும் தேடரு மினிமை சாலப்
> போந்தருள் கலைகள் சாற்றிப் பொங்கிடு நிலவுபோல
> வீங்கிடு புகழினோடு வீற்றருள் கலையின் செல்வி!
>
> இலங்கைப் பல்கலைக்கழகம் — க. கணபதிப்பிள்ளை
> பேராதனை — தமிழ்ப் பேராசிரியர்.

வாழ்க்கைக்குத் தேவையான தத்துவங்கள், கருத்துக்கள், புத்திமதிகள், எச்சரிக்கைகள் போன்றவற்றை ஞானிகள், சமயத் தலைவர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பல தரப்பட்டோர் காலத்துக்குக் காலம் வெளியிட்டு வந்துள்ளார்கள். பத்திரிகைகள் சஞ்சிகைகளில் அவர்களின் ''பொன்மொழிகள்'' இடம்பெறுகின்றன. ஆழ – நீளமான கட்டுரைகளைவிட இந்தப் பொன்மொழிகள் வாசகர்களின் நெஞ்சங்களில் மிக விரைவாகவும் ஆழமாகவும் பதிந்து விடுகின்றன.

நம்நாட்டு எழுத்தாளர்களும் இத்தகைய நல்ல பல கருத்துக்களைக் கூறும் அறிவும் அனுபவமும் ஆற்றலும் உடையவர்கள் என்பதைக் காட்டுவதற்காக சம்பந்தன், எஸ். பொன்னுத்துரை, பித்தன், எஸ். நடராஜன், சொக்கன், வ.அ.இராசரத்தினம், எஸ். அகஸ்தியர், இ. நாகராஜன், உதயணன் ஆகியோரின் அனுபவ மொழிகள் ''ஒரு சொற் கேளீர்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளன.

> கலை, உயர்ந்த செல்வம், பண்பாட்டோடு இயைந்து விளங்கும்போதுதான் அது பயன்படுகிறது. ஆதலின் கலையைப் பயன்படுத்தும் செல்வியாகத் தங்கள் இதழ் தொண்டாற்றுக.
>
> சென்னை — டாக்டர் மு. வரதராசன்

தமிழ் மாணவர்களின் பேச்சாற்றலை ஊக்குவிக்கும் நோக்குடன் ''கலைச்செல்வி'' ஏற்பாடு செய்த பாரதி தினப் பேச்சுப் போட்டியில் ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர். யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் மூன்று பிரிவுகளாகப் போட்டி நடைபெற்றது. அந்தக் காலத்தில் அரசியல் மேடைகளில் 'நட்சத்திர'மாக விளங்கிய 'புதுமைலோலன்' போட்டி அமைப்பாளராகக் கடமையாற்றினார்.

> கலைச்சுவை ததும்பும் நல்ல அம்சங்களுடன் இலக்கியச் சேவை செய்துவரும் ''கலைச்செல்வி''யில் வெளியாகும் சில சிறுகதைகள், நாம் போற்றும் பல தமிழ் இதழ்களில் வரும் பல சிறுகதைகளையும் தூக்கியடித்து, சுவைப்பதைப் படித்துணர்ந்தோம்.
>
> க. பே. முத்தையா (விடிவெள்ளி)
> நிர்வாக ஆசிரியர்
> 'சமூகத் தொண்டன்'

நடைபெற்ற போட்டி சம்பந்தமாகப் புதுமைலோலன் எழுதிய அறிக்கை ஆண்டு மலரில் இடம்பெற்றது. மேற்பிரிவில் எஸ். சிவசக்திவேல் (கந்தரோடை), வி. கணேசமூர்த்தி (யாழ்ப்பாணம்), த. துரைராசா (யாழ்ப்பாணம்) ஆகியோர் முதல் மூன்று இடங்களைப் பெற்றனர். மத்திய பிரிவில் வை. சி. குணசேகரம் (அராலி), செ. விவேகானந்தன் (அல்வாய்), வ. யோ. கொன்ஸ்ரன்ரையின் (சில்லாலை) ஆகியோர் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டனர். பிற்காலத்தில் ''சிதம்பர – பத்தினி'' என்ற பெயரில் எழுத்துலகிற் புகழ்பெற்ற சி. பத்தினியம்மா (கரவெட்டி) தேற்றப் பரிசில் பெற்றார். கீழ்ப்பிரிவில் ச. மரியநியூமன் (சில்லாலை), போதராணி அருணாசலம் (அரியாலை), ம. இரத்தினசபாபதி (யாழ்ப்பாணம்) ஆகியோர் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டனர். ஏழு வயதுடைய அ. சூரியகுமார் (அளவெட்டி) என்பவர் விசேட பரிசைப் பெற்றார்.

பாடசாலை மாணவர்கள் பலர் ''கலைச்செல்வி''யின் நிரந்தர வாசகர்களானதற்கு இந்தப் பேச்சுப் போட்டி பெருமளவிற்குத் துணைபுரிந்தது. போட்டியிற் கலந்து கொண்ட பலர் சிறந்த பேச்சாளர்களாகவும் எழுத்தாளர் களாகவும் வளர்ந்துள்ளனர்.

> இன்று ஈழத்திற் காணப்படும் இலக்கிய விழிப்புக்கு விளக்கந் தரும் வகையில் விஷயங்களைத் தாங்கி வெளிவரும் ''கலைச்செல்வி''யின் ஆண்டு மலர் அழகினுக்கு அழகூட்டி அமையுமென நம்புகிறேன். விடாமுயற்சியினால் பெரும்பணி புரியும் ஆசிரியர் ''சிற்பி'' ஈழத்தமிழ் இலக்கிய இரசிகர்களது பாராட்டுதலுக்கு உரியவர்.
>
> க. கைலாசபதி
> ஆசிரியர், தினகரன்.

**(தொடர்ச்சி 25ஆம் பக்கம்)**

# மட்டக்களப்பின் இலக்கிய முன்னோடி கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி

*- அன்புமணி*

"மட்டக்களப்பு இலக்கிய வானில் 84 ஆண்டுவரை வாழ்ந்து ஒளி வீசிய ஓர் இலக்கிய வாதி கடந்த 13. 04. 2009 ல் இயற்கை எய்தினார். அவர்தான் மட்டக்களப்பின் ஒரே ஒரு கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி.

இவர் ஒரு தனி மனித நிறுவனம். பசிமுக (பகுத்தறிவுச் சிந்தனை முத்தமிழ்க் கழகம்) நிறுவுனர். ப. நோ. கூ. சங்கத்தில் பலவருடங்கள் பணிபுரிந்தவர் முதலாந்தர அதிபராகக் கடமை ஆற்றி ஒய்வு பெற்றவர். விவசாய விற்பன்னர். தனது பொறுப்பில் பல இலக்கிய விழாக்களை ஏற்பாடு செய்து மூத்த இலக்கிய வாதிகளைக் கௌரவித்தவர். பிரபலமான கவிஞர். சிறுவர் இலக்கியம், இலக்கிய ஆய்வு, சிறுகதை, விமர்சனம் முதலிய பல்வேறு இலக்கியத் துறைகளில் முத்திரை பதித்தவர்.

பகுத்தறிவுப் பாசறையில் வளர்ந்த இவர் தனித்துவமான போக்கும், தற்றுணிவான சிந்தனையும் கொண்டவர். துணிச்சல் மிக்கவர். பிறரின் கருத்துக்களுக்கு கண்மூடித் தலையசைத்தவர். எந்தச் சபையிலும் தனது கருத்தை ஆணித்தரமாக முன் வைப்பவர். பாராளுமன்றத் தேர்தலிலும். வேட்பாளராக நின்றவர்.

இலக்கிய வாழ்வைப் பொறுத்தவரை கும்பலில் ஒருவராக இல்லாமல், தான் வகுத்துக் கொண்ட இலக்கியக் கோட்பாடுகளுக்கமைய தனி வழி நின்றவர்.

மட்டக்களப்பு கிராமியத்தை நேசித்தவர். கிராமிய வாழ்வில் ஊறித்திளைத்தவர். பல ஏக்கர் நெற்காணிகளுக்கு உரிமையாளர். இவர் போடியார் என்று பெயர் பெற்றாலும், வேளாண்மைக்காரருக்கு நிறைய உதவிகளைச் செய்தவர்.

மட்டக்களப்பில் வடபகுதி கிராமமான பங்குடா வெளி கிராமத்தில் 15. 09. 1924 ல் இவர் பிறந்தார். தந்தையார் வட்ட விதானை கா. வெற்றிவேல், தாயார் பாலாத்தைப் பிள்ளை. பங்குடாவெளி RCTMS பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர், பின்னர் மட்டக்களப்பு சென்ட் மேரிஸ் பாடசாலை மட்: புனித மைக்கேல் கல்லூரி ஆகியவற்றில் தன் கல்வியைத் தொடர்ந்து பெற்றார்.

1948ல் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகி, நுவரெலியா, மாத்தளை, பதுளை, திருகோணமலை முதலிய இடங்களில் ஆசிரியராகக் கடமை ஆற்றினார். தமிழ் ஆசிரியர்கள் (அலுவலர்கள்) சிங்களம் கற்க வேண்டும் என்ற அரச சுற்றுநிருபம் இல. 700 ஐ நிராகரித்து தனது 45 வது வயதில் 31. 12. 1969 ல் ஒய்வுபெற்றார்.

இவர் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில், பாடசாலை நாடகம் வானொலி நாடகம் முதலியவற்றை எழுதினார். இலங்கையில் உள்ள பல்வேறு பத்திரிகைகளுக்கும் கட்டுரைகள் எழுதினார்.

இவர் எஸ். பொ. வின் நெருங்கிய நண்பர் மட். வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் ஆசிரியப்பணி ஆற்றிய காலத்தில் எஸ். பொ. வும் அண்மையில் உள்ள பாடசாலையில் கடமையாற்றினார். அப்போது ஏற்பட்டது இந்த இலக்கிய நட்பு .

பல இலக்கியக் கூட்டங்களில் பங்குபற்றி சொற்பொழிவாற்றிய இவர் 1974 ல் பொன்விழாவையும் 1999 ல் பவளவிழாவையும் கண்டவர். இவரது தம்பியார் செல்வராசா இவருக்கு வலது கை. அவர் மறைவு இவரைப் பெரிதும் பாதித்தது. திரு. தங்கத்துரை ஆசிரியர் இவரது இடது கை என்றும் துணைநிற்பவர். பசிமுக. நிறுவனத்தின் தலைவர், அமரர் திக. எஸ். கந்தசாமி, அவரது உடன்பிறவாச் சகோதரர் ஆவார். இவர் வெளியிட்ட நூல்கள் வருமாறு

(i) பாலர்பாமாலை – 1964 – சிறுவருக்கான பாடல்கள்
(ii) பொதுப்பாமாலை – 1992 – கவிதைநூல்
(iii) கண்ணகையும், தன்னகையும் – 1993 – இலக்கிய விமர்சனம்
(iv) கடவுள் எங்கே? – 1994 – தத்துவ விசாரம்
(v) பாட்டும் விளையாட்டும் – 1997 – கிராமிய இலக்கியம்
(vi) மாறிவரும் மட்டக்களப்பு தமிழகம் – 1997 – சமூக ஆய்வு
(vii) பொன்னாச்சி பிறந்த மண் – 10. 12. 1998 – சிறுகதைத் தொகுதி
(viii) ஆண்டவர் பிறந்த மண் (சிறுகதைக் தொகுதி 15.09.2000)
(ix) இராவணனும் சீதையும் (2007) இலக்கிய ஆய்வு
(x) திருமணப்பரிசு (2008) சமூகம்

மேற்படி நூல்களைத் தவிர அச்சில் வெளிவராது கையெழுத்துப்பிரதிகளாக உள்ள நூல்கள் எனப் பின்வருவனவற்றை இவர் குறிப்பிட்டுள்ளார்.

(i) வானொலிப்பாமாலை (கவிதை)
(ii) வானொலிப் பேச்சுக்கள் (உரை)
(iii) முப்பெரும் தேவியர் (சமயம்)
(iv) நாடும் , நாமும், ஜனாதிபதியும் (அரசியல்)
(v) விற்போரை மிஞ்சிய சொற்போர் (இலக்கிய ஆய்வு) (இதுவே இராவணனும் சீதையும் என்ற தலைப்பில் வெளிவந்தது)
(vi) கண்ணியமிக்க கடமை வீரர்
(vii) மும்மூர்த்திகள் (நாடகம்)
(viii) பறக்கும் திருமணம் (நாடகம்)

மேற்படி பட்டியலிலிருந்து இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் இவர் தனது ஆக்கங்களை வெளியிட்டுள்ளார் என்பது தெளிவாகிறது. கையெழுத்துப் பிரதிகளாக உள்ள நூல்களும் வெளிவந்திருந்தால் இவருடைய இலக்கிய ஆளுமை இன்னும் விகாசித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.



## மானாமக்கீன் ஓசையில்லா ஓசைகள்...

"ஆய்வுக்காகவும் நூலாக்கங்களுக்காகவும் தமிழகத்தில் இருக்கும் ஒவ்வொரு சமயத்திலும் பலவிதமான ஓசையில்லா ஓசைகள் ஒலிப்பதைக் கேட்பதுண்டு. 'ஞானம்' அபிமானிகளுக்குத் தெரிவிக்க நினைப்பதுமுண்டு. இம்முறை அது நிறைவேற்றம்

**'கலைமாமணி' விருதைத் திருப்பி அனுப்பிய 'இன்குலாப்''.**

அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலைகளைக் கண்டித்தும் அதற்கு ஒரு விதத்தில் காரணமாக இருக்கும் இந்தியக் காங்கிரஸ், தமிழக தி. மு. க. போக்குகளை ஆட்சேபித்து. கவிஞர் 'இன்குலாப்' என்ற பேராசிரியர் சாஹுல் ஹமிது தமிழக அரசு 2006 ல் வழங்கிய 'கலைமாமணி' விருதை அரசிடமே ஒப்படைத்து விட்டார்!

''உண்மையான மக்கள் அரசு ஒன்று இங்கு இருக்குமேயானால் தமிழினத்துக்கு நியாயம் செய்திருக்கும். காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு வஞ்சகமாக உதவிக் கொண்டிருக்கிறது. தமிழக இளைஞர்கள் மேற்கொண்ட உயிர்த்தியாக அகிம்சைப் போராட்டத்தைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. இந்திய அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரி யாழ் மண்ணில் திலீபன் உண்ணா நோன்பிருந்தது உயிர் நீத்த போதும் பொருட்படுத்தாததும் இதே காங்கிரஸ் ஆட்சிதான். இன்று கலைஞர் செய்ய வேண்டியது காங்கிரஸ் கூட்டணியை விட்டு வெளியேறுவதுதான். நான் முதலில் மனிதன், பின் தமிழன், அப்புறம் படைப்பாளி. எனக்கு வழங்கப்பட்ட விருது கௌரவமாக அல்லாமல் முள்ளாகக் குத்திக் கொண்டிருக்கிறது. இதைத் தமிழக அரசிடமே திருப்பித் தருவது தான் எனது மனித கௌரவத்தைத் தக்க வைத்துக் கொள்வதாக அமையும் என 'இன்குலாப்' ஒரு நீண்ட அறிக்கையில் காரணங்களை அடுக்கிக் கொண்டே போகிறார்.

### தமிழக இதழில் 'செங்கை ஆழியான்' தொடர் நவீனம்

இந்த மனிதர் சேனாஆவன்னா ( செங்கை ஆழியான்) சில விடயங்களை இலை மறைத்த கனியாக வைப்பார். அல்லது இருட்டடிப்பே செய்வார். இரண்டும் கைவந்த கலை.

இப்பொழுது தனது சொந்த விடயத்திலும் அப்படித்தான்.

கடலும் கரையில் சில மனிதர்களும் என்கிற கவர்ச்சியான தலைப்பில் தொடர் நவீனம் ஒன்று தமிழக இதழில் எழுதிக் கொண்டிருக்கிறார் 'ஓசையில்லா ஓசையாக' இப்பொழுது 12 அத்தியாயங்களைத் தாண்டிவிட்டது! நான் பார்த்த இதழில் ஒரு சிறுகதை வேறு. (புளியமரத்து முனிகள்)

இதழ் இதழ் என்கிறேன் எந்த இதழ்? கல்கியோ, விகடனோ, குமுதமோ, குங்குமமோ அல்ல! 'யுக மாயினி'

பெயர் ரொம்ப வித்தியாசம். சிற்றிதழ் என்பதா, இலக்கியச் சஞ்சிகை என்பதா புரியவில்லை. ஆனால் 'தமிழ் மாத இதழ்' என்று கலை மகள், அமுதசுரபி பாணியில் அட்டையில் பதிவு 'யுகம் – 2' என்பதைக் கொண்டு இரண்டாண்டு காலமாக வருவதாக யூகிக்கலாம். (நானே, தினமணி தகவலைக் கண்டுதான் இப்பொழுது வாங்கினேன்).

எனக்குக் கிடைத்த இதழ்களில் 'தீபச் செல்வன்' ரிஷான் ஷெரிஃப் ஆகியோரின் கவிதைகளையும், கே. எஸ். சுதாஹரின் சிறுகதையையும், வி. என். மதியழகனின் பத்தி எழுத்தையும் பார்த்தேன்.

இந்த 'யுக மாயினி' இலங்கை மட்டுமல்லாது அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், தென்கொரியா எனப் பன்னாட்டுப் 'பேனா'க்களுக்கும் இடம் கொடுத்து நல்ல தரமான எழுத்துக்களை வாரி வழங்குகிறது. வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

### 'மனுஷ்ய புத்திரன்' சினிமாக் கவிஞர் ஆகிறார்!

புதுமைப் படைப்பாளி 'சுஜாதா'வின் மோதிரக் கையால் குட்டுப்பட்டவர் எனப் பரவலாகப் புகழப்படும் கவிஞர் 'மனுஷ்ய புத்திரன்' என்ற அப்துல் ஹமீது இப்பொழுது இன்னொரு (மோதிரக்) கையாலும் குட்டுப்பட்டு விட்டார்.

அது கமலஹாசனுடையது!

சிறிய பட்ஜட் படமாக தயாராகிக் கொண்டிருக்கும் கமலின் சொந்தத் தயாரிப்பான 'உன்னைப் போல் ஒருவன் படத்தின் பாடலாசிரியர் மனுஷ்ய புத்திரன். இசை அமைப்பு கமலின் மகளார் ஸ்ரூதி!

'உயிர்மை' என்ற நல்ல இலக்கிய சஞ்சிகையை நடத்திக் கொண்டும், அந்தப் பெயரிலேயே பதிப்பகம் ஒன்றை வைத்து தரமான நூல்களை வெளியிட்டும் தன்னை வித்தியாசமான கவிஞனாகவும் காட்டி வந்துள்ள 'மனுஷ்ய புத்திர' னுக்கு நிச்சயமாக இதுவொரு புதிய சொர்க்க வாசல்!

## கவிஞர் மேத்தாவுக்கு கவிக்கோ விருதும் பொற்கிழியும்!

புதுக்கவிதையாளர் மு. மேத்தா இலங்கையில் நிறைய அபிமானிகளைக் கொண்டிருப்பவர். இவருக்கு விருதும் பொற் கிழியும் (இந்திய ரூபா 30,000/=) கவிக்கோ அப்துல் ரஹ்மான் சொந்தமாக வழங்கினார் என்றால் அது சாதாரண தகவலன்று.

ஆனால் நூற்றுக்கு நூறு உண்மை! நடந்ததோ கடந்தாண்டில் இங்கே செய்தி கசியவே இல்லை.

கவிக்கோ ஆண்டுதோறும் தமது அறக்கட்டளை மூலமாக சிறந்தவொரு படைப்பிலக்கியக்காரரை (குறிப்பாக கவிஞர்) தேர்ந்தெடுத்து விருதும் சொற்கிழிவும் வழங்கி வருகிறார். அதை கடந்த சில ஆண்டுகளாக ஒரு நிகழ்வாக நடத்துகிறார். அந்தவகையில் கடந்தாண்டு மேத்தா. அவரை வாழ்த்துவோம். அதுசரி பன்னாட்டு வித்தகர்களை நினைத்துப் பார்ப்பாரா கவிக்கோ? ஊஹூமும் சொல்ல முடியாது!

## சொல்லத் துடிக்கும் பாலனின் மனசு!

பாடல் பெற்ற திருச்செந்தூரைப் பூர்வீகமாகக் கொண்டு சிறுவயது முதலே கொழும்பில் வாழ்ந்து தமிழ் நாடகத் துறைக்குப் பங்களிப்புச் செய்த வி. கே. டி. பாலன் இப்பொழுது சென்னையில் (மதுரா டிரவல்ஸ்) சாதனைக்குரிய ஒரு பயண முகவர்.

கலை இலக்கியத்துறையைக் கைவிடாமல் 'பொதிகை' தொலைக்காட்சியில் பலநூறு நடைபாதை திறமை சாலிகளை அடையாளம் கண்டு நேர்காணல் நடத்திப் பிரபலமானவர். சேரனின் 'தவமாய் தவமிருந்து' விலும் பங்கேற்று நடித்தார். இப்பொழுது 'சொல்லத் துடிக்குது மனசு' என்றொரு நூலை எழுதி அசத்தி இருக்கிறார். நமது சமகாலப் பிரச்சினைகள் சிலவற்றை மையப்படுத்தி நடைமுறை சார்ந்த தீர்வுகளைக் கூறும் குறிப்படத்தக்க நூல் என்று 'தினமணி' நூல் அரங்கம் பதிவு செய்துள்ளது.

இந்த இனிய நண்பர் பாலன், தமிழக அரசின் 'கலைமாமணி' விருதினை அடைந்தவருங்கூட இலங்கையுடன் நெருங்கிய தொடர்புடைய ஒருவருக்கு கிடைத்திருப்பது இவருக்கு மட்டுமே!

எல்லோரையும் எப்பொழுதும் பாராட்டிக் கொண்டிருக்கும் இவரைப் பாராட்டும் தருணம் இதுவே!

*(ஓசை இல்லா ஓசைகள் அவ்வப் பொழுது 'ஞானத்தில் ஒலிக்கும்)*

---

## (22ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

''கலைச்செல்வி''யின் முதலாவது இதழ் மின்னாமல் முழங்காமல் 1959ல் வெளிவந்தது. வெளியீட்டு விழா, அறிமுக விழா, விமர்சன விழா என எதுவுமே நடைபெறவில்லை. ஆனால் ஆண்டு மலரை தரமான கலை, இலக்கிய விழா ஒன்றிலேயே வெளியிடவேண்டும் என ஆசிரியர் குழு தீர்மானித்தது. விழாவிற்குரிய ஏற்பாடுகளைச் செய்வது சிரமமான காரியமாக இருக்கவில்லை எழுத்தாளர்கள், வாசகர்கள், கலைஞர்கள் போன்றோரின் உதவியும் ஒத்துழைப்பும் தாராளமாகவே கிடைத்தன.

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற விழாவுக்கு முதலியார் செ. சின்னத்தம்பி தலைமை ஏற்றார்.

> சுதந்திரன் பண்ணையில் வளர்ந்த நண்பர்களான சிற்பி, உதயணன், ஈழத்துச் சோமு ஆகியோரும் சிறந்த சிறுகதை எழுத்தாளர் இராஜநாயகனும் ஓவியக் கலைஞர் ஆதவனும் சென்ற ஆண்டில் ''கலைச்செல்வி''யைத் தோற்றுவித்த போதே அது ஒரு சிறப்பும் செம்மையும் வாய்ந்த பத்திரிகை யாகத் திகழும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. அந்த நம்பிக்கை வீண்போகவில்லை. வெளிவந்த அத்தனை இதழ்களும் கலையும் மணமும் கொழித்துக்கொண்டே வெளி வந்தன. அனைவருடைய புகழ்மொழிகளையும் வாரிக் கொண்டன. தரம் வாய்ந்த மாத இதழ் என்ற தனி இடத்தை யும் ''கலைச்செல்வி''க்குத் தேடித் தந்தன.
>
> எஸ். டி. சிவநாயகம்
> ஆசிரியர், சுதந்திரன்.

ஈழநாடு ஆசிரியர் இராஜ. அரியரத்தினம், ''கலைமதி'' ஆசிரியர் வித்து வான் சி. ஆறுமுகம், வித்துவான் க. ந. வேலன் ஆகியோர் இலக்கிய மணம் கமழும் வாழ்த்துக்களைச் சொரிந்தனர். வரதர் அவர்களின் ஆதரவுடன் ''கலைச்செல்வி'' நடத்திய தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவர் நினைவுப் போட்டியில் முதற் பரிசைப் பெற்ற கவிஞர் மயிலன் அவர்கட்கும் பாரதி தினப் பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ மாணவியருக்கும் தங்க, வெள்ளிப் பதக்கங்களையும் இலக்கிய நூல்களையும் பரிசாக வழங்கி மகிழ்ந்தார் யாழ் மாநகர சபை முதல்வர் அல்பிரட் துரையப்பா. நல்லூர் நந்திகேஸ்வர நாட்டியாலயத்தைச் சேர்ந்த திருமதி நீலா சத்தியலிங்கம் தன் மாணவிகளுடன் இணைந்து அளித்த நடன விருந்து அன்றைய நிகழ்ச்சிகளின் சிகரமாக அமைந்தது. மண்டபத்தினுள்ளேயும் வெளியேயும் நிறைந்திருந்த வாசகர்களும், இரசிகர்களும் போட்டி போட்டுக் கொண்டு ''கலைச்செல்வி'' ஆண்டு மலரை வாங்கினார்கள்.

> ஈழநாட்டு எழுத்தாளர் பலரை மக்களுக்கு அறிமுகப்படுத்தி அரிய பல கதை, கட்டுரைகளுடன் ''கலைச்செல்வி'' அபிவிருத்தியடைந்து வருவது தங்களுக்கு மட்டுமல்ல தமிழ்ச் சமுதாயம் முழுவதற்குமே பெருமை தரக்கூடியதாக இருக்கிறது.
>
> கே. வீ. எஸ். வாஸ்,
> பிரதம ஆசிரியர், வீரகேசரி.
>
> ஈழத்திருநாட்டில் நாம் பெருமைப்படத்தக்க ஒரு தமிழ் இலக்கியப் பரம்பரை உண்டு. இந்தப் பரம்பரையை, ''கலைச்செல்வி'' தனது ஓராண்டு கால வளர்ச்சியில், சிறப்புற வளர்த்துள்ளது. இந்தப் பணியைக் ''கலைச்செல்வி'' தொடர்ந்து செய்ய வேண்டும்.
>
> எச். எம். பி. முஹிதீன்
> பிரதம ஆசிரியர், தேசாபிமானி.

இனி, அடுத்த இதழில்

**குறுங்கதை**




இன்று வங்கியில் எக்கச்சக்கமாக வேலை. என்னவோ தெரியாது வழமைக்கு அதிகமான வாடிக்கையாளர். வங்கி மனேஜர் சிதம்பரநாதனின் அறையுள் AC வேலை செய்தும், சிதம்பரநாதனுக்கு வியர்க்கிறது. காலை எட்டு மணிக்கே தொடங்கிய வேலை மாலை ஐந்து மணியாகியும் ஓயவில்லை. கிராமத்தவரான மனேஜர் சிதம்பரநாதன் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் பேர்வழியல்ல.

இன்றைக்கெனச் சொல்லாமற் கொள்ளாமல் சிதம்பர நாதனின் வயதான பெற்றோர் மகன், மருமகளைப் பார்த்துப் போகச் சிதம்பரநாதனுடைய வீட்டுக்கு வந்துவிட்டார்கள்.

வங்கியால் வந்ததும் வராததுமாக சிதம்பரநாதன் ''சாந்தி'' என தனது மனைவியை அழைத்து ''எனக்கும், அப்பா அம்மாவுக்கும் நல்ல தேத்தண்ணீராகப் போட்டுக் குடுங்கோ'' என்றார்.

''எனக்கு அலுப்பாக இருக்கு. அவைக்கும், எனக்கும் தேநீர் போட்டு நீங்க தாங்களேன்'' எனச் சாந்தி வேண்டா வெறுப்பாக சாய்நாற்காலியுள் சாய்ந்து படுத்தபடி மறுதலித்தாள். பிரபல வர்த்தகரொருவரின் ஏக மகளான சாந்திக்கு இப்படிப் பேசுவது சகஜம்.

சிதம்பரநாதனுக்கு வெட்கமும், துக்கமும், கோபமும் கொப்பளித்தன.

''தேநீர் நான் போட்டுக் கொண்டு வந்து தாரேன்... அப்பா! அம்மா! வாங்கோ போவம்'', என்றார்.

போனவர் போனவர்தான்!

அதனைத் தொடர்ந்து வந்தது சிதம்பரநாதனின் சட்டத்தரணியிடமிருந்து சாந்திக்கு மணவிலக்கு நோட்டீஸ்.

*– யாவும் கற்பனையல்ல*




''நேற்று ராத்திரி உங்கட ஊர்ப் பக்கத்தில பாட்டுக் கச்சேரி, பெரிய மேளம், சின்ன மேளம், வாண வேடிக்கை அது இது எண்டு விடிய விடிய ஒரே அமர்க்களமா இருந்துதே...?''

''ஓமோம்...!''

''கோயில் திருவிழாவோ...?''

''இல்லை...''

''அப்ப அரசியல் கட்சி ஏதாவது கூட்டம் போட்டவங்களோ?''

''ஊஹும்...''

''பெரிய இடத்து கலியாண வீடு, கீடு ஏதாவது...?''

''அதுவும் இல்லை...!''

''என்னண்டு கெதியில சொல்லித் தொலையப்பா...!''

''என்னத்துக்கு அவதிப் படுகிறியள்...? கொஞ்சம் பொறுங்கோவன்''

''என்ர ரென்ஷனைக் கிளப்பாதே...! டக்கெண்டு சொல்லு... பிறஷர் ஏறப்போகுது!''

''அண்ணை... கோபிக்காதேயுங்கோ! சொல்லுறன்... எங்கட தலைவர்...''

''எந்தத்தலைவர்...?''

''அதுதான் எங்கட எம்.பி...''

''மந்திரிப் பதவி, கிதவி எண்டு ஏதாவது கிடைச் சிட்டுதோ...?''

ஊஹு ம் இன்னும் இல்லை!

''அப்ப என்னத்துக்கு இந்தக் கூத்தும் கும்மாளமும்?''

''பாராளுமன்றத்தில் 'சொற்பொழிவு' ஆற்றினவர்...!''

''அடி சக்கை...! மழை வரப்போகுது!

''சத்தியமா அதுக்குத்தான் பாராட்டு விழா நடத்தினவங்கள்''

''வன்னியில சனங்கள் சாப்பாடு தண்ணியில்லாமல், குண்டடிபட்டு சாகிறதைப் பார்க்கச் சகிக்காமல் வீர முழக்கம் செய்தவரோ...?''

''சும்மா சொல்லப்படாது...! மற்ற எம்.பி. மார் எல்லாம் மேசையில் தட்டி ஆரவாரம் செய்தவையளாம்...!

''அப்படி என்னதான் பேசினவர்?''

தனது தொகுதிக்கு ஒதுக்கின நிதியை உடனடியாக தரச்சொல்லி...!''

''என்ர நாக தம்பிரானே! எங்கட சனத்தை நீதான் காப்பாத்த வேணும்...!''

''எத்தனை காலம் தான் ஏமாற்றுவார்... எம்மை இந்த நாட்டிலே... சொந்த நாட்டிலே...'' என்ற பாடல் பக்கத்து தேநீர்க் கடையின் எவ் எம் ரேடியோவில் அலறியது.

# ஒளியிலாப் பனி

எஸ்.முத்துமீரான்

மரங்களெல்லாம் காஞ்சு கருகி
மடிந்து கொண்டிருக்கின்றன.
கடவுளிடம் மழைப் பிச்சையெடுக்க
கயிலாயத்திற்கு படையெடுக்கிறார்கள்.
வட்டிக் கணக்கில் பிழையென்று
என் மனைவி, சீலையை உரிகிறாள்.
காமவெறியில் கத்திக் கொண்டிருந்த
நாய்களெல்லாம், பாதைகளில்
பாலியலில், இந்திரனாகி விட்டன.
வெறும் உலையில் கனவுகாணும்
குசேலரும் குடும்பமும்
குடும்பிக்கு நெய் போடுகின்றனர்.
என் கற்பனைப் படைப்புகளைச்
சுமந்து வந்த தபாற்காரன், வெறுப்பில்
கடவலடியில் எறிந்து விட்டு,
மணியடித்துப் போகின்றான்.
தேவதூதர்கள் தேரில் வருவதாக
அதிகாரி பறையடிக்கிறான்.
தங்க இடமில்லாமல் தவித்துத்திரியும்
பறவைகளும், குருவிகளும் தங்குவதற்கு
கூடுகள் கட்ட வேண்டும்.
இலைகளில்லா மரங்களில், என்னால்
எப்படிக் கூடுகள் கட்டமுடியும்?
சதா, வட்டிக் கணக்குப் பார்க்கும்
என் மனைவிதான் பதில் கூறவேண்டும்.
மக்களைப் பிழிந்து மஹால்கள் கட்ட,
நானென்ன மன்னன் சாஜஹானா?
மறியில் ஓடிய என் நாய் வந்து,
வாழைப் பாத்திக்குள் படுத்துக்கிடக்கிறது.
நான் இமயமலையின் உச்சியில் ஏறி,
கடவுளை அழைக்கிறேன்!
பாவம்! அவன் உலகை அழிக்க, கங்கையில்
புனித நீராடிக் கொண்டிருக்கிறான்.
கங்கை குளிராகி விட்டது.

## கலாபூஷணம் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2009



(அனுசரணை : புலோலியூர் க. சதாசிவம் குடும்பத்தினர்)

முதற் பரிசு – ரூபா 3000/–
இரண்டாம் பரிசு – ரூபா 2000/–
மூன்றாம் பரிசு – ரூபா 1000/–

- *ஏனைய ஒன்பது சிறுகதைகளுக்கு தலா ரூபா 500 /- வழங்கப்படும்.*
- *முன்னர் பிரசுரமான கதைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.*
- *கடித உறையின் இடது பக்க முலையில் கலாபூஷணம் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி - 2009 எனக் குறிப்பிடல் வேண்டும்.*

*அனுப்ப வேண்டிய முகவரி:*

**ஞானம் கிளை அலுவலகம் – 3-B, 46வது ஒழுங்கை, கொழும்பு – 06.**

**போட்டி முடிவு திகதி – 30.08.2009**

**முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது**

– ஆசிரியர்

# நேர் காணல் (4)

சந்திப்பு : தி. ஞானசேகரன்



தெளிவத்தை ஜோசப்

**16.02.2009ல் அகவை எழுபத்தைந்தை நிறைவு செய்து பவள விழா ஆண்டில் தடம்பதித்துள்ள தெளிவத்தை ஜோசப் அவர்களின் இலக்கியப் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக இந்த நேர்காணல் தொடரை ஞானம் வழங்குகின்றது.**

ஈழத்து இலக்கியப் பரப்பில் அறுபதுகளில் மேற்கிளம்பிய உத்வேகக் காலகட்டத்துடன் தன்னையும் பிணைத்துக் கொண்டு எழுத்து வாழ்வை ஆரம்பித்தவர்.

ஐம்பது வருட இலக்கிய வாழ்வு வாழ்ந்த அனுபவஸ்தர்.

தீவிரமான வாசிப்பும் தேடலும் மிக்க இலக்கிய ஆவணச் சேகரிப்பாளர்.

சிறுகதை, குறுநாவல், நாவல், விமர்சனம், ஆய்வு, திரைப்படக்கதை, தொலைக்காட்சி, வானொலி நாடகம் என்று தனது தளத்தை விஸ்தாரப்படுத்தி உழைத்து வருபவர்.

சாகித்திய விருது, சம்பந்தன் விருது, கலாபூஷண விருது உள்ளிட்ட பல விருதுகள், பரிசுகள் பெற்றவர்.

இவரின் நூல்களாக :-

- காலங்கள் சாவதில்லை - நாவல் - 1974
- நாமிருக்கும் நாடே - சிறுகதைத்தொகுதி - 1979
- பாலாயி - குறுநாவல்தொகுதி - 1997
- மலையகச் சிறுகதை வரலாறு - ஆய்வு இலக்கியம் - 2000 ஆகியன வெளிவந்துள்ளன.

பல நூல்களின் தொகுப்பாசிரியராகவும் இருந்துள்ளார்.

**இனிவரும் நூல்களாக :-**

- குடைநிழல் - நாவல்
- நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் - நாவல்
- மலையக நாவல் வரலாறும் வளர்ச்சியும் - ஆய்வு
- இருபதாம் நூற்றாண்டு ஈழத்து இதழியல் - ஆய்வு

மலையகம் என்னும் உணர்வுக்குத் தன் எழுத்தாற்றலால் உருவம் கொடுத்தவர்.

மலையக இலக்கியத்தின் அடையாளத்துக்கும் தனித்துவத்துக்கும் இவரின் எழுத்தும் ஆய்வுப் பணிகளும் தக்க பங்களிப்புச் செய்துள்ளன.

**தி.ஞா :- தென்னிந்தியக் கிராமங்களில் இருந்து தேயிலைத் தோட்டத்துக்கு வந்த இந்த மக்கள் பற்றிய கதைதான் மலையக வரலாறு! நீங்கள் தேயிலைத் தோட்டத்திலிருந்து ஒரு கிராமத்துக்குச் சென்றுள்ளீர்கள். அந்த அனுபவம் எப்படி இருந்தது?**

மலைகள் மலிந்த, மலைகளால் சூழப்பட்ட தேயிலைத் தோட்டத்தில் பிறந்து, மலைகள், குன்றுகள், மேடு பள்ளங்கள் என்று ஏறி இறங்கி, வரக்கட்டுகளில் சறுக்கி விழுந்தெழுந்து நெஞ்சுமுட்டும் படிக்கட்டுகளையும் குலைநடுங்கும் பள்ளத்தாக்குகளையும் பார்த்துப் பார்த்துப் பழகிய இடத்திலிருந்து தமிழ் நாட்டின் ஒரு மூலையில் மலைகளோ குன்றுகளோ அற்ற கண்ணுக் கெட்டிய தூரம் வரை ஒரே சமதரை இடமும் தமிழைத் தவிர வேறு மொழியே பேசாத மக்கள் நிறைந்த எங்கள் அம்மாவின் கிராமமுமாகிய வடகரையின் நினைவுகளும் அந்த நினைவுகளூடே பொங்கி வரும் அனுபவங்களும் புதுமையானவைதான்.

கல்விக்கான பாடசாலை கோவில்கள் நிறைந்த கும்பகோணத்தில் தான் என்றாலும் விடுமுறை நாட்களைக் கழித்த வடகரைக் கிராமமே என்னை ஆட்கொண்டிருந்தது; உள்வாங்கியிருந்தது.

வெள்ளி மாலை வீடு வந்ததால் சனி, ஞாயிறு என்றும் தவணைக்கான விடுமுறை என்றால் மூன்று வாரம் அல்லது ஒரு மாதம் என்றும் அந்தக் கிராமமும் அதன் சுற்றுச் சூழலும் கும்பகோணத்தில் இருந்து பஸ் அல்லது ரயில் ஏறி ஆடுதுறையில் இறங்கினால் சின்னத் தாத்தாவின் ஒற்றை மாட்டு வில்வண்டி வந்து நிற்கும். அமலதாஸ், அருமை நாதன் என்னும் அவர்களது பிள்ளைகளுக்காகத்தான் அந்த வண்டி. நாங்கள் இருவரும் பாட்டியுடன் ஏறிக்கொள்வோம். ஏதோ எங்களுக்காகவும் வில் வண்டி வந்திருப்பதான நினைவுடன்.

கிராமத்தில் வில்வண்டி வைத்திருப்பவர்கள் மேல் நிலையில் உள்ளவர்கள்.

வண்டிச் சக்கரம் ஓடி ஓடி மண்பாதையின் இரு புறமும் பள்ளமாகவும் நடுவில் மேடாகவுமே இருக்கும். நாங்கள் தங்கியிருக்கும் 'தாத்தா' வீட்டைத்தாண்டித்தான் சின்னத்தாத்தாவின் வீடு இருக்கிறது என்றாலும் எங்கள் வீட்டைக் கடந்தோடி வரும் வண்டி நேராக சின்னத் தாத்தாவின் வீட்டிடமே வந்து நிற்கும். அங்கிருந்து நாங்கள் திரும்பி நடந்து 'தாத்தா' வீட்டுக்கு வருவோம்.

அம்மாச்சி, பெரியம்மா, சித்தி என்று பெண்கள் மூவரும் எங்களுக்காகக் காத்து நின்று வாரித்தூக்கிக் கொள்வார்கள்.

'மீன் கொழம்பு ஆக்கி வச்சிருக்கேன்' என்பார் பெரியம்மா. கணவனைப் பிரிந்து தாய் வீட்டுடன் வந்து விட்ட எங்கள் அம்மாவின் அக்கா!

'வாங்கடா போய் பனம்பழம் பொறுக்கிட்டு வருவோம்' என்று ஊர்த்தோப்புக்குக் கூப்பிடுவார் சித்தி. இன்னும் திருமணமாகாத அம்மாவின் தங்கை.

பதனீ பதனீ... என்று தலைச்சும்மாடும் பானையுமாக இருகை வீசி வரும் பதநீர் விற்கும் பெண்ணை நிறுத்தி, முந்தானை முடிச்சவிழ்த்து சில்லறை எண்ணிக் கொடுத்து கிளாஸ் நிறைய நுரையுடனே மேலேழும் வெள்ளைப் பதநீர் வாங்கிப் பருகத் தருவார் சித்தி.

பனை மரத்தின் பாளை சீவி சுண்ணாம்பு தடவிய கலையம் கட்டி சுரந்த நீர் சேர்த்துச் சேர்த்து விற்பதே பதனீர். சுட்டெரிக்கும் கிராமத்தின் வெய்யிலுக்குச் சுகமான பானம் இந்த பதனீர். ஆனால் சுண்ணாம்பு மணம் பழக்கமில்லாத எங்களுக்கு வாந்தி வருவது போல் இருக்கும். சுண்ணாம்பு கலவாமல் சுரக்கும் நீர் விற்றால் 'கள்' விற்பதாக போலிஸ் பிடிக்கும் என்று சித்தி கூறுவார்.

வீட்டுக்கு வீடு மாடுகள் நிற்கும். வண்டிக்கான காளைகள், பசுக்கள், கொம்பு வளைந்த சாம்பல் நிற எருமைகள் கூட்டம் கூட்டமாகத்திரியும்! றோட்டோரத்துச் செடிகளில் இலை தேடித் தேடி கடித்து மேயும் ஆட்டுக் கூட்டம் இன்னொரு பக்கம்.

உலக நாடுகளில் கால்நடைச் செல்வம் கொண்ட ஒரு முக்கிய நாடாகக் கருதப்படுவது இந்தியா என்பது குறிப்பிடக் கூடியது. உலகத்து மொத்த கால்நடை எண்ணிக்கையில் இருபத்தைந்து வீதத்தை இந்தியா கொண்டிருப்பதாக கால்நடை மதிப்பீட்டு அறிக்கைகள் கூறுகின்றன.

சாணி மெழுகிய கீழ்த்தட்டுக் குரித்தான தரை கொண்ட வீடுதான் எங்கள் தாத்தாவினுடையது என்றாலும் முன்கதவோரம் இருக்கும் திண்ணை மட்டும் வழவழப்பான சிமிந்தியாலானது . அதில் தான் தாத்தா கால் மடக்கி அமர்ந்திருப்பார்.

வீட்டின் கால் வாசியை அடைத்து கொண்டிருப்பது குதிர், நெல் சேகரித்து வைக்கும் கூடு. ஒவ்வொரு வீட்டிலும் இந்தக் குதிர் இருக்கும். மேலே குறுகியும் கீழே அகன்றும் ஒரு கோவில் மணி உருவத்தில் இருக்கிறது குதிர்.

ஊருக்குப் போன புதிதில் எனக்கே எரிச்சலாகத்தான் இருந்தது. அது என்ன நட்ட நடு வீட்டில் இப்படி ஒரு கூடு என்று. பிறகுதான் தெரிந்தது அதன் பயன்.

''அப்பன் குதிருக்குள் இல்லே'' என்னும் ஒரு சொல்லடை கிராமங்களில் உண்டு.

ஒரு மனிதன் உள்ளிறங்கி ஒளிந்து கொள்ளும் அளவு உயரமானது, பருமனானது இந்தக் குதிர்.

அறுவடை காலத்தில் வரிக்காகக் கொடுத்த நெல் போக மிகுதியை இந்தத் குதிரில் சேகரித்து வைத்துக் கொள்கின்றனர். அடுத்த அறுவடை வரை அதுதான் உணவு. குதிரின் உச்சி ஒரு ஆள் இறங்கும் அளவான வாயுடன் குடத்தின் வாய் போல் அழகாக உருவமைக்கப்பட்டிருக்கிறது. அதன்வழியாகத்தான் நெல்லை உள்ளே கொட்டுவார்கள். அடியில் தரையுடன் ஒரு கை நுழையும் அளவான ஓட்டை வைத்து மூடி போட்டிருக்கும்.

அன்றாட பாவனைக்கான நெல்லை அந்த ஓட்டையின் வழி சுளகில் அள்ளி உரலிலிட்டு குற்றிப் புடைத்து, உமி வேறு தவிடு வேறு அரிசி வேறு குருணை வேறாகப் பிரித்துக் கொள்வது வீட்டுப் பெண்களின் வேலை.

நீரிட்டு மாவாட்ட ஆட்டுக்கல். நீரிடாமல் காய்ந்த மாவரைக்க திருகைக்கல், அம்மி குழவி என்று சகலதும் வீட்டுக்குள் இருக்கின்றன.

குதிரின் அருகே ஒரு சின்னக் குதிர் போல் பிரம்பாலான ஒரு கூடையும் இருக்கிறது. வட்டமான அடிப்பாகம். ஒரு இரண்டடி அகலமிருக்கலாம். நுனிப்பாகம் ஒரு அரையடி வட்டமாக கை நுழைக்கும் அளவில் இருக்கிறது. கை நுழைக்கும் போது பிரம்புகளின் நுனி கீறிக்கிழித்து விடாமல் பிரிமனை போல் வட்டமாக வைக்கோல் பிடித்து அழகாக இருக்கிறது. மேலேயும் ஓட்டை கீழேயும் ஓட்டை என்றால் இந்தக் கூடை ஏன் என்பது எனக்கு ஆரம்பத்தில் புரியவில்லை.

எங்கள் வீட்டுக் கொல்லைப்புறம் ஒரு வாய்க்கால் ஓடுகிறது. கிராமத்தின் எல்லையாக ஓடும் ஆற்றிலிருந்து கிளை பிரிந்து ஓடிவரும் வாய்க்கால் இது. வாய்க்காலுக்கு மேலாகப் பாதையோடும் இடங்களில் மதகுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

எங்கள் வீட்டிடம் இருக்கும் மதகின் சுவற்றில் ஏறி அமர்ந்து வாய்க்காலில் தூண்டிலிட்டு மீன் பிடித்திருக்கிறேன் நான். வீட்டுக்கு மீன் வந்ததா என்பது வேறு கதை.

கொழம்பாக்க மீன் இல்லேப்பா என்று பெரிய மாமாவிடம் அம்மாச்சி கூறிய ஒரு நாள் மாலை மாமா கொல்லைப்புறம் சென்றார். வைக்கோல் போரிலிருந்து கொஞ்சம் வைக்கோல் பிடுங்கி ஈரம் உலராத சாணம் கொஞ்சம் எடுத்து இரண்டையும் ஒன்றாப் பிசைந்து பிசைந்து ஒரு வட்டமாகப் பிடித்துக் கொண்டார். இப்போது வைக்கோல் தெரியவில்லை. வட்டமாக சாணம் மட்டுமே தெரிகிறது. கொஞ்சம் அரிசிக்குருணை வாங்கிவரச் சொன்னார். ஒரு சிரட்டை நிறைய குருணல் பொட்டுக் கொடுத்தார் அம்மாச்சி மாமாவிடம் நீட்டினேன். சாணி பிசைந்த கையில் குருணையைக் கொட்டி வைக்கோல் பிசைந்த சாணி உருண்டையில் தூவித் தூவி தேய்த்துத் தேய்த்து அழுத்திவிட்டார். வெள்ளையும் பச்சையுமாக அரிசி ஒட்டிய சாணிப்பந்தை இரண்டு கைகளாலும் தூக்கிக் கொண்டு வாய்க்காலை அடைந்து சலசலத்தோடும் தண்ணீரில் இறங்கி மெதுவாக அந்தச் சாணி உருண்டையை நீரடியில் கரையோரத் தரையில் வைத்து வேலியோரத்தின் நொச்சிக் கிளை ஒடித்து ஊன்றி அடையாளம் இட்டு கை கால் முகம் அலம்பி மேலேறி வந்தார். நிழலைப் போல நானும் அவர் பின்னால் திரிந்தேன். உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டார்.

கொஞ்ச நேரம் சென்ற பின் எழுந்தார், நானும் எழுந்தேன். அந்த சின்னக் குதிர் போன்றக் கூடையை எடுத்துக் கொண்டார். வாய்க்கால் நோக்கி நடந்தார். நானும் நிழலானேன்.

திரும்பி என்னைப் பார்த்து உதட்டில் விரலை வைத் சத்தமிடக்கூடாது என்று சைகை செய்தார். அடையாளத்துக் கிட்ட நொச்சிக்கிளை ஆடி அசைகிறது. நீர்மட்டம் தளும்பித் தளும்பி ஒலிவிடுகிறது. மீன்கள் அரிசியை ருசிக்கின்றன. என்று மெதுவாக என்காதிடம் கூறிய பெரிய மாமா மறுபடியும் உதட்டில் விரல் வைத்து எச்சரித்து விட்டு கூடையுடன் வாய்க்காலில் மெதுவாக இறங்கி அடையாளமிட்ட இடத்தில் நங்க் கென்று கூடையை ஊன்றி சேற்றுக்குள் அழுத்திக் கொண்டார். நீருக்கு மேல் ஒரு அரையடி உயரத்தில் இருக்கிறது கூடையின் மேல்வாய். அதற்குள்ளாக கையை விட்டு உள்ளே துளாவிய மாமா நெற்றியுயர்த்தி மகிழ்ச்சியாகத்தலையாட்டினார். ஒரு பாத்திரம் கேட்டுவரச் சொன்னார்.

கையளவு கைளவான மீன்கள் ஒரு பத்துப்போல் பாத்திரத்திரத்தில் விழுந்தன! கெளுத்தி, கெண்டை, உளுவை என்னும் பெயர்களுடன்.

வலை வீசாமல் மீன் பிடிக்கும் மாயமான வித்தைகள் இவைகள்.

ஆடு, மாடு, அம்மி, குழவி, குதிர், கூடை என்று சகலதும் இருக்கும் இந்த கிராமத்து வீடுகளில் கழிவறை, குளியலறை என்று எதுவுமே இல்லை!

பனந்தோப்பு, தென்னந்தோப்பு, வயல்வெளி நீர் வற்றிக் காய்ந்து கிடக்கும் குளம் குட்டை என்று சர்வமும் கழிவறைகள் தான்!

ஆறு, குளம், வாய்க்கால், நீர்நிலைகள் அனைத்தும் குளியலறைகள்தான். திறந்தால் நீர்வடியும் பைப் அல்லது பீலீ என்ற ஒன்றை நான் பார்த்ததே இல்லை!

மரம் செடி கொடிகள் முளைத்து வளரும் கிராமம் போல் அல்லாமல் கட்டிடங்கள் முளைத்து முளைத்து வளர்ந்து வரும் – நாங்கள் கல்விக்காகப் போய்ச் சேர்ந்த கும்பகோணம் போன்ற பட்டினங்களில் கழிப்பறைகள், குளிப்பறைகள் பைப் இத்தியாதி அத்தியாவசியங்கள் இருக்கவே செய்தன.

வாய்க்கால் மறித்து வயலுக்கு நீர்பாய்ச்சி எருதுகள் இரண்டு கட்டி ஏர்பூட்டி உழுது நாற்றாங்காலில் இருந்து பிடி பிடியாய் நாற்று கட்டிக் கொண்டு வந்து உழுத வயலுக்குள் நடவுக்காக நிற்கும் பெண்களிடம் வரப்பில் நின்று கட்டுகளை வீச லாவகமாய்ப் பிரித்து நடுகின்ற விரைவும் அலாதி! அழகும் அலாதி!

நாற்று நட்டு வளரத் தொடங்கிய பின் களை எடுத்து, குரல்வளை பெருத்து பூக்களை வெளியே தள்ளி நெல்மணி கோர்த்து ஒரு கொத்தை உருவி வாயில் பொட்டு மென்றால் உள்ளே அரிசி கடிபடாது. பிசு பிசு வென்று வாய்க்குள் பால்வடியும்.

முற்றிப் பொன்னிறம் கொண்டு குனிந்து கிடக்கையிலே குருவிகள் விரட்டி அறுவடை காலத்தில் களத்து மேடு, மாடுகள் கட்டியோ, தரையில் அடித்தோ நெல் மணி பிரித்து காற்று வீசும்பக்கம் பார்த்து தூற்றி சுத்தம் செய்து... மரக்கால் கொண்டு அளந்து...

கண்பார்வைக் கெட்டிய தூரம் வயல் வயல்தான்...

வயல் தொழிலின் சகல மட்டத்துறையுடனும் வேலை செய்வோருடனும் நானும் இருந்திருக்கிறேன். இணைந்து உள்வாங்கப் பட்டிருக்கிறேன்!

எள்ளுதான் எண்ணெய்க்குக் காய்கிறது இந்த எலிப்புளுக்கை ஏன் காயுது... என்று பெரிய மாமா என்னை வீட்டுக்கு விரட்டுவார். நான் போகமாட்டேன்.

இந்த வடகரைக் கிராமத்தின் செல்வச் செழிப்புக்களும், சிறப்புக்கள், அழகுகள், அசிங்கங்கள் என்று எத்தனையோ இன்று இல்லாமல் போயிருக்கலாம். சில அழிந்து போயிருக்கலாம். வேறு சில மாற்றமடைந்திருக்கலாம்.

ஒரு அரை நூற்றாண்டுகளுக்கு மேலான அந்த நாட்களின் நினைவூட்டல்களுக்காகவும் பதிவுகளுக்காகவுமே. இந்த எலிப்புளுக்கையும் எள்ளுடன் அன்று காய்ந்திருக்கிறது என்று நினைக்கையில் நெகிழ்ச்சியாக இருக்கிறது.

எங்கள் தாத்தா வீட்டுக் கொல்லை அடியில் ஓடும் வாய்க்காலைத் தாண்டி ஒரு பொட்டல் வெளி இருந்தது. கிராமத்துப் பையன்கள் பிள்ளையார் பந்தடிக்கப் பயன்பட்ட இடம் இது. ஊர்க்கதை பேசவும் உட்கார்ந்து இளைப்பாறவும் உறக்கம் வந்தால் காற்றோட்டமாக கால் நீட்டி படுத்துக் கொள்ளவும் ஒரு சத்திரம் இருந்தது.

சத்திரத்தின் கூரைக்குக் கூரையாக நிழல் பரப்பி நிற்கும் புளியங்கிளையின் அடிமரம் தூரத்தில் இருக்கிறது. புளிய மரத்தடியில் தான் ஒரு தடவை காளை மாட்டுக்கு லாடம் அடித்தார்கள்.

லாடக்காரன் லாவகமாக அந்தத் காளையின் கால்களுக்குச் சுருக்குக் கயிறு போட்டு தடால் என்று தரையில் வீழ்த்தும் காட்சி மறக்க முடியாதது. பூஸ் பூஸ் சென்று பெருமூச்சு விட்டபடி விழி பிதுங்க இந்த ராட்சத உருவம் பிரண்டு கிடக்கும்.

லாடத்தின் ஓட்டைகளுக்குள் ஆணி சேருகி மாட்டின் குளம்புடன் பொருத்தி சுத்தியலால் அடித்திறக்கும் கோரம்... மாடு துள்ளித் துள்ளி எழப்பார்க்கும்...

கோவில் வேண்டுதலுக்காக தீ மிதிக்க இந்தப் பொட்டலில் தான் தீ மூட்டுவார்கள். நீண்ட பாத்திபோல் ஒரு அரையடிக்கு மண் தோண்டி, கொன்றை, மா, கருவேலங் கட்டைகளைப் போட்டுத் தீ மூட்டி எரிய விட்டு பாளம் பாளமான நெருப்புத் துண்டுகளை இரும்புக் கம்பிகளால் உடைத்துப் பரப்பி தக தகவென்று வைத்திருப்பார்கள். தீ மிதிக்கும் பக்தர்கள் அதன் மேல் தான் ஓடுவார்கள். ஓடுவார்கள் என்பது தப்பு நடப்பார்கள்.

இந்தப் பொட்டலைத்தாண்டியதும் இருக்கிறது வடகரையின் குளம். படித்துறை நிறைய பெண்கள் துணி துவைப்பதும் குளிப்பதுமாக! எருமை மாடுகளும் தலையையும் மூக்கின் துளைகளையும் நீருக்கு மேல் நீட்டிக் கொண்டு நீந்திக் கொண்டிருக்கும். எருமைகளின் முதுகில் ஏறி குளத்தின் மறுகரை வரை வாண்டுப் பயல்கள் நாங்கள் நீந்திச் செல்வோம். உடலைக் குலுக்கிக் குலுக்கி எருமைகள் எங்களை தண்ணீரில் உதறிவிடும். மீண்டும் தொத்தி ஏறி நீருள் அமிழ்ந்து நீந்தி வருவோம்.

இப்படி எல்லாம் ஒன்றித்துப்போய் இருந்தாலும் கூட ஆஞா அம்மாவின் பிரிவும், ஏக்கவும் என்னை அலைக்கழித்தே வந்துள்ளன.

ஒரு எத்தியோப்பியக் குழந்தை போல் இருந்திருக்கின்றேன். உடல் கை கால்கள் மெலிந்து வயிறு மட்டும் பெரிதாகி – சூனை விழுந்த பலாப் பிஞ்சுபோல்.

'வந்து கூட்டிக் கொண்டு போய் விடுங்கள்... இல்லா விட்டால் ஏதாவது ஏடா கூடமாக நடந்துவிடும்' என்று ஊவாகட்டவளைக்குக் கடிதம் எழுதிப் போட்டிருக்கின்றார்கள் பெரியம்மா.

(தொடரும்)

# நானும் எனது நாடகங்களும்
## சில மனப்பதிவுகள்
### அந்தனி ஜீவா

**நாடக உலகில் ஒரு சாதனையாளர்**

நான் நாடகத்துறையில் ஈடுபடுவதற்கு அறிஞர் அ.ந. கந்தசாமி அறிவுரை கூறி வழி காட்டினாலும், ஆரம்பத்தில் என்னோடு தொடர்பு கொண்ட ஒரு நாடகக் கலைஞரை குறிப்பிட்டே ஆகவேண்டும் அவர்தான் கலைஞர் கலைதாசன். அவர் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் ஏ. இளஞ்செழியனின் பாசறையில் வளர்ந்தவர்.

இவர் கலைஞர் மு. கருணாநிதியின் "பரப்பிரம்மம்" என்ற நாடகத்தை பொரளை வை.எம்.பீ.ஏ. மண்டபத்தில் மேடையேற்றினார். அந்த நாடகத்தை நெறிப்படுத்தி, தானே ஒரு முக்கிய பாத்திரத்திலும் நடித்தார். இந்த நாடகத்தின் ஒரு காட்சியில் நடிகை மணிமேகலை நடனம் ஆடினார்.

கலைஞர் கலைதாசன் நல்ல மேடைப் பேச்சாளர், வானொலி நடிகரும் கூட. இவர் மூலம் கொழும்பில் நாடகத்துறையில் ஈடுபட்டிருந்த பல கலைஞர்கள் எனக்கு அறிமுகமானார்கள். நடிகவேள் லடீஸ் வீரமணி, கலைஞர் கலைச்செல்வன், நடிகரும் நாடக நெறியாளருமான ஹுசைன் பாருக், சாண்டோ முத்தையா, விக்டர், குறட்செல்வன் குமாரசாமி இப்படி எத்தனையோ பேர்.


கலைஞர் கலைச்செல்வன் இளம் வயதிலிருந்து நாடகத்துறையில் ஈடுபட்டு வந்தார். அவரது கலைத்துறை செயற்பாட்டிற்கு அரை நூற்றாண்டாகப் போகிறது. கொழும்பில் பிறந்த கலைஞர் கலைச்செல்வன் நாடகத்தையே தன் வாழ்வாகவும் தொழிலாகவும் கொண்டவர்.

கொழும்பு வாழ் நாடகக் கலைஞர்களின் குருகுலமாக ஜிந்துப்பிட்டியிலிருந்த கே. பி. ஏ. இராஜேந்திரம் மாஸ்டர் நடத்திய மனோரஞ்சித கானசபா என்ற கலையகம் பல கலைஞர்களின் பயிற்சிப் பாசறையாகத் திகழ்ந்தது. "இளவரசன்" என்ற நாடகத்தில் மிக இள வயதில் கலைச்செல்வன் நடித்துள்ளார். இவர் தந்தையார் கூட ஒரு நாடகக் கலைஞர்தான். அவர் மேடையேற்றிய "மரணத்தின் மடியிலே" என்ற நாடகம் கலைச்செல்வன் எழுதிய முதல் நாடகம். அதன் பிறகு இவர் பல நாடகங்களை எழுதி நடித்து நெறிப்படுத்தியும் உள்ளார்.



தினகரன் பத்திரிகை நடத்திய நாடக விழாவில் இவருடைய "மனித தர்மம்" என்ற நாடகம் சிறந்த இயக்குநர் விருது உட்பட ஆறு விருதுகளை பெற்றுள்ளது. இந்த நாடகத்தின் மூலம் நடிகை ராஜம் சிறந்த நடிகையாக விருது பெற்றார்.

தரமான இந்த நாடகம் கலைஞர் கலைச் செல்வனுக்கு பெயரும் புகழும் பெற்றுத் தந்தது. 1975ம் ஆண்டு தேசிய நாடக விழாவில் இடம் பெற்றது "சிறுக்கியும் பொறுக்கியும்" என்ற நாடகம். இந்த நாடகத்தில் முக்கிய பாத்திரத்தில் நடிகை ராஜம், நடிகர் சத்தியன் நடித்தார்கள், என்பதை விட வாழ்ந்து காட்டினார்கள் என்றே குறிப்பிட வேண்டும். இந்த சிறுக்கியும் பொறுக்கியும் என்னைப் பெருதும் கவர்ந்த நாடகங்களில் ஒன்று. சகோதர சிங்கள கலைஞர்கள் கூட இந்த நாடகத்தைப் பார்த்து விட்டு பெரிதும் பாராட்டினார்கள். இந்த நாடகத்தைப்பற்றி கலா விமர்சகர் கே.எஸ். சிவகுமாரன் சிறப்பான விமர்சனம் ஒன்றை ஆங்கில தினசரி ஒன்றில் எழுதியிருந்தார்.



இந்தக் காலகட்டத்தில் கொழும்பில் பல நாடக மன்றங்கள் நாடகங்களை மேடையேற்றின. கொழும்பில் லயனல்வென்ற் அரங்கு, லும்பினி நாடக அரங்கு, சரஸ்வதி மண்டபம், கதிரேசன் மண்டபம், பொரளை வை.எம்.பீ.ஏ. ஆகியவற்றில் பழையவர்களும் புதியவர்களும் நாடகங்களை மேடையேற்றினார்கள்.

நாடகத்துறையில் ஜாம்பவான்களான நாடக நெறியாளர்களான சுஹைர் ஹமீட், தாசிசியஸ், சுந்தரலிங்கம் போன்றவர்களின் தரமான மேடை நாடகங்கள் மேடையேறின. கலைஞர் கலைச்செல்வனின் நாடகங்களுக்கு ஒரு ரசிகர் கூட்டம் இருந்தது. அவரது நாடகங்களில் நடிகர் டீன்குமார், கலைவேந்தன் ஸ்ரீசங்கர், எம்.எம்.ஏ. லத்திப் நடிகைகள் ராஜமணி, மணிமேகலை, ரோகினி, லீலாரஞ்சனி போன்றவர்கள் நடித்தார்கள். கலைச்செல்வன் நெறிப்படுத்திய 'கொள்ளைக்காரன்', 'ஒரு மனிதன்' 'இரு உலகம்' போன்ற நாடகங்கள் யாழ்ப்பாணத்திலும் மேடையேறின.

1998ம் ஆண்டு கலாசார அமைச்சின் அரச தமிழ் நாடக விழாவில் கலைஞர் கலைச்செல்வன் எழுதி நெறிப்படுத்திய 'ஒரு கலைஞனின் கதை' என்ற மேடை நாடகம் சிறந்த நடிகருக்கான விருதினை பெற்றுக்கொடுத்தது. இந்த நாடகம் பின்னர் 2008ல் புரவலர் புத்தக பூங்கா வெளியீடாக நூலுருவில் வெளிவந்தது.

"ஒரு கலைஞனின் கதை" என்ற நாடகம் ஒரு கலைஞன் கதை மாத்திரமல்ல, கலையுலகில் கலைஞர் வாழ்வில் நடந்த பல உண்மைகளை, கசப்பான சம்பவங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது.



இந்த நாடக நூலில் ''கதை பிறந்த கதை'' என்ற தலைப்பில், தன் எண்ணத்தை எழுத்து வடிவில் பதிவு செய்துள்ளார் கலைஞர் கலைச்செல்வன் ''இதிலே வரும் ஐந்து முக்கிய கதாபாத்திரங்களும் நம்மோடு வாழ்ந்தவர்கள், வாழ்ந்து மறைந்தவர்கள். கலையரசு க. சொர்ணலிங்கம், நடிகவேள் லடீஸ் வீரமணி, கலைவேந்தன் ஸ்ரீ சங்கர், நடிகமணி கே. ஏ. ஜவாகர், கலாபூஷணம் டீன்குமார் ஆகியோரின் கூட்டுக்கலவைதான் கலாஜோதி சண்முகம் என்னும் பாத்திரப்படைப்பு, இந்த பாத்திரத்தில் நானும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பது நிஜம் என்கிறார் கலைச்செல்வன்.

அது மாத்திரமல்ல இந்த நாடக நூலை, நாடகத்திற்காக தன் வாழ்வையே அர்ப்பணித்த நடிகவேள் லடீஸ் வீரமணிக்கு சமர்ப்பணம் செய்துள்ளார். நடிகவேள் லடீஸ் வீரமணி நெறிப்படுத்திய ''சலோமி'' என்ற நாடகத்தில் யோவான் பாத்திரத்தில் கலைஞர் கலைச்செல்வன் நடித்தார். இவரது நடிப்பை நேரில் பார்த்த கலையரசு சொர்ணலிங்கம் பெரிதும் பாராட்டினார்.

தமிழ் நாடக மேடையில் விஸ்வரூப தரிசனம் தந்தவர் நடிகவேள் லடீஸ் வீரமணி. இவருடன் பல நாடகங்களில் கலைச் செல்வனும் நடித்துள்ளார். இவருடன் நாடெங்கும் சென்று வில்லிசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். கவிஞர் மஹாகவியின் ''கண்மணியாள் கதை'' கவிஞர் பெரிய சாமியின் ''வாழ்வின் வசந்தம்'' போன்றவை பல தடவைகள் மேடையேறிய வில்லிசை நிகழ்ச்சிகள். கலைஞர் கலைச்செல்வன் நெறிப்படுத்தி பலரால் பாராட்டப்பட்ட நாடகங்களில் மிக முக்கியமானது ஷேக்ஸ்பியரின் ஒத்தெல்லோ நாடகம்.

ஷேக்ஸ்பியரின் ஒத்தெல்லோவாக நடிகர் கலைச்செல்வன் நடித்தார்; மிகச் சிறப்பாக நடித்திருந்தார். மற்றும் இந்த நாடகத்தில் இயாகோவாக நடித்த நடிகர் ஸ்ரீகரன் ஸ்ரீநிவாசன் மிகச் சிறப்பாக நடித்தார். இந்த நாடகத்தில் நடித்த ஒவ்வொரு நடிகரும் சிறப்பாக நடித்தார்கள் என்பதை குறிப்பிட்டே ஆகவேண்டும். இதற்கு முக்கிய காரணம் கலைஞர் கலைச்செல்வன் நடத்தும் நாடக ஒத்திகையே. நடிக்க முடியாதவர்களைக் கூட மிகச் சிறப்பாக நடிக்க வைத்து விடுவார். அதற்காக அவர் படும் சிரமங்களை நேரில் பார்த்துள்ளேன்.

கலைஞர் கலைச்செல்வன் கலையுலகில் அரை நூற்றாண்டாக செயற்படுகின்றார். அவரது கலையுலக செயற்பாட்டை மதித்து கலைக்கழக தேசிய நாடகக்குழு 2008ம் ஆண்டில் ''முதுகலைஞர்'' விருது வழங்கி கௌரவித்தது. இவரோடு சிங்கள நாடகமேடைக்கு சிறப்பாக பணியாற்றிய சிங்கள நாடக கலைஞர் கருணாரத்னாவுக்கும் இவ்விருதினை ஒரே மேடையில் வழங்கியது.

*– இனியும் வரும்*


# புரவலர் புத்தகப் பூங்கா
# மாதம் ஒரு நூல் வெளியீட்டுத் திட்டம்

முன்பொருபோதும் நூல்வெளியிடாத எழுத்தாளர்களின் நூல்கள் இத்திட்டத்தின் மூலம் வெளியிடப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் பயன் பெற விரும்பும் எழுத்தாளர்கள் தமது படைப்பின் இரண்டு பிரதிகளோடு, என்னுரை அணிந்துரை, ஆசிரியர் பற்றிய விபரம், இரண்டு புகைப் படங்கள் ஆகியவற்றை இணைத்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். எழுத்தாளர் விரும்பினால் மூவர்ண அட்டைப்படஓவியத்தையும் சேர்த்து அனுப்பலாம்.

எழுத்தாளருக்கு 300 பிரதிகள் இலவசமாக வழங்கப்படுவதோடு, வெளியீட்டு விழா நடத்தி அதில் கிடைக்கும் பணம் முழுவதும் எழுத்தாளருக்கே வழங்கப்படும். இலங்கை எழுத்தாளர்கள் யாபேரும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம். நூல் ஆக்கத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படாத பிரதிகள் எழுத்தாளருக்குத் திருப்பி அனுப்பப்படும்.

**தொடர்பு முகவரி :** தேர்வுக்குழு, புரவலர் புத்தகப் பூங்கா, இல 25, அவ்வல் சாவியா ரோட் கொழும்பு – 14.
தொ. பேசி : 077 4161616, 078 5318503

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்

கலாநிதி. துரைமனோகரன்

**நாடக விமர்சனம்**

உலகத்தில் எத்தனையோ கலைஞர்கள் இருக்கின்றனர். ஆனால், தமிழ்நாட்டில் ஓர் அபூர்வக் கலைஞர் இருக்கின்றார். எழுத்து, சினிமா, பத்திரிகை, அரசியல் என்று பல்வேறு துறைகளிலும் ஈடுபட்ட கலைஞர் அவர். அவரது திரைப்பட வசனங்களைக் கேட்டு அந்தக் காலத்தில் மயங்காதவர்களே இல்லை. அவரைப் பலரும் சிறந்த கதை – வசனகர்த்தா, பாடலாசிரியர் என்றுதான் அறிந்திருக்கின்றனர். ஆனால், அவர் ஓர் அற்புத நடிகர் என்ற உண்மை அண்மையில்தான் வெட்ட வெளிச்சம் ஆகியது.

அண்மைக்காலங்களில் இந்தக் கலைஞர் தமிழ்நாட்டில் அடுத்தடுத்துப் பல நாடகங்களை அரங்கேற்றி வந்துள்ளார். உலகத் தமிழர்களைக் கவர்வதற்காகவே அடிக்கடி நாடகங்களைக் கலைஞர் அரங்கேற்றுவார். அவரது ஒவ்வொரு நாடகமும் ஒவ்வொரு விதமாக அமைந்திருக்கும். உலகத் தமிழர்களை ஏமாற்றுவதே அவரது நாடகங்கள் எல்லாவற்றின் கருப்பொருளாக அமைந்திருக்கும். ஆனால், தமிழ் ரசிகர்கள் அவரது நாடகங்களையும், அவற்றில் அவரது நடிப்பையும் பார்த்துப் பார்த்துச் சலித்துவிட்டனர். அதன் காரணமாக, கலைஞர் அண்மையில் புதிய வடிவத்தில் ஒரு நாடகத்தை மேடையேற்றினார். நாடகம் புதியது எனினும், கருப்பொருள் பழையது. எந்தவித முன்னறிவித்தலும் இன்றி, திடீரென மேடை போடுவித்து இந்த நாடகத்தைக் கலைஞர் மேடை யேற்றினார். "உண்ணாவிரதம்" என்பது நாடகத்தின் பெயராகும். கலைஞர் இதுவரை அரங்கேற்றிய நாடகங்களிலேயே அதியுயர் தயாரிப்புச் செலவுகளோடு மிகச் சிறந்த நடிப்புத்திறனையும் வெளிப்படுத்தியது இந்நாடகம்தான் என்பது தமிழ் நாடக ரசிகர்களின் ஏகோபித்த கருத்தாகும்.

கலைஞரின் "உண்ணாவிரதம்" நாடகம் ஓரங்க நாடக வகையைச் சார்ந்தது. நாடகத்தின் கதை – வசனம், தயாரிப்பு, நெறியாள்கை என்பவற்றோடு, கதாநாயகன் பாத்திரத்தையும் கலைஞரே ஏற்றிருந்தார். மூலக்கதை கச்சிதமாக அமைந்திருந்தது. வீட்டிலிருந்து பாதுகாவலர்களோடு வெளியேறிய கதாநாயகன், திடீரென உலகத் தமிழர்களுக்காகத் தன்னைத் தியாகம் செய்வதற்காக உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்கிறான். பாதுகாவலர்கள் செய்வதறியாது திகைக்கின்றனர். தொலைபேசிகள் தொடர்புகளைத் தேடுகின்றன. சிறிது நேரத்தில் கதாநாயகிகளும், துணை நடிகர்களும், கதாநாயகனின் மகளும், மகனும் மேடையில் தோன்றுகின்றர். கதாநாயகனின் தியாகம், காட்சியில் தோன்றுகின்றவர்களை உருக்குகின்றது. கதாநாயகனின் தியாகத்தை மெச்சி, உடனடியாக 'எயர் கண்டிஷன்' வசதி அளிக்கப்படுகிறது. கதாநாயகன் தொடர்ந்து நாற்காலியில் உட்கார்ந்து இருந்தால் முதுகு வலி ஏற்படும் என்பதால், படுக்கையில் சாய்ந்திருக்குமாறு வைத்தியர்கள் வற்புறுத்துகின்றனர். கதாநாயகனும் அவ்வாறே படுக்கையில் சாய்ந்திருக்கிறான். இடையிலே தொலைபேசி ஒலிக்கிறது. ஒரு பாத்திரத்தின் குரல் தொலைபேசியில் கதாநாயகனுக்குக் கேட்கிறது. அதைக் கேட்டவுடன் கதாநாயகன் உடன் இருந்தவர்களுக்குச் செய்தியைக் கூறிவிட்டு, பழரசம் அருந்தி உண்ணாவிரதத்தை உடனடியாக முடித்துக் கொண்டு வெளியேறுகிறான்.

"உண்ணாவிரதம்" நாடகத்தின் காட்சியமைப்பு பார்ப்போரைப் பரவசப்படுத்தும் முறையில் அமைந்திருந்தது. புராணக்கதைகளில் இடம்பெறும் ஒரு காட்சியமைப்பை ஒத்ததாக இந்நாடகத்தின் காட்சியமைப்பும் அமைந்திருந்தது. திருப்பாற்கடலில் திருமால் இலக்குமி, பூமாதேவி ஆகியோர் புடைசூழ பாம்பணையில் யோகநித்திரை புரிவதுபோல, கதாநாயகனும் கதாநாயகிகள் புடைசூழ, பஞ்சணையில் அரசியல் நித்திரை செய்வதாகக் காட்சி அமைக்கப்பட்டிருந்தது. ஒரேயொரு வித்தியாசம். திருப்பாற்கடலில் 'எயர் கண்டிஷன்' இல்லை. ஆனால், "உண்ணாவிரதம்" நாடகக் காட்சியில் 'எயர் கண்டிஷன்' இருந்தது. இந்நாடகத்தில் கதாநாயகனாக நடித்தவர் பிரபல கலைஞர் என்பதால், காட்சியில் 'எயர் கண்டிஷ'னும் இணைக்கப்பட்டிருந்தது. நாடகத்துக்கான ஒளிப்பதிவினைப் பல்வேறு தொலைக்காட்சி நிறுவனங்கள் ஏற்றிருந்தன. விளம்பரப் பொறுப்பைப் பல்வேறு பத்திரிகை நிருபர்கள் ஏற்றிருந்தனர்.

கதாநாயகன் பாத்திரத்தை ஏற்றிருந்த கலைஞர் மிக அற்புதமாக நடித்திருந்தார். இதுவரை இத்தகைய பாத்திரத்தில் இவ்வளவு சிறப்பாக நடித்தவர்கள் யாருமே இல்லை என்பது நாடகத்துறை வல்லுநர்களின் கருத்தாக இருக்கிறது. கதையின்படி, கதாநாயகன் தொடர்ந்து உலகத் தமிழர்களுக்காக உண்ணாவிரதம் இருந்து தியாகம் செய்யப்போகிறார் என்று நாடக ரசிகர்கள் கருதியிருந்தனர். ஆனால், நாடகத்தில் யாரும் எதிர்பார்க்காத திடீர்த் திருப்பம் ஒன்றை நாடக ஆசிரியரான கலைஞர் ஏற்படுத்துவார் என்பதை எவரும் உணர்ந்திருக்கவில்லை. நாடகத்தில் கதாநாயகன் திருப்பாற்கடலில் திருமாலைப் போன்று பள்ளி கொண்டிருந்த போது, யாரும் எதிர்பார்க்காத முறையிலும், கதாநாயகன் எதிர்பார்த்த முறையிலும் தொலைபேசி மணி ஒலிக்கிறது. நாடகத்தின் திடீர்த்திருப்பமானது இந்தத் தொலைபேசி அழைப்பிலேயே அமையக்கூடியதாக நாடக ஆசிரியர் சிறப்பாகக் கதையைக் கையாண்டிருந்தார். நாள் கணக்கில் அல்லது மணித்தியாலக் கணக்கில் நாடகக் கதை அமையப்போகிறது என்றே ரசிகர்களின் எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், நாடகக் கலையில் கைதேர்ந்தவரான கலைஞர், பலரதும்

எதிர்பார்ப்புகளுக்கும் மாறாக ஒஹென்றி பாணியில் திடீர்த் திருப்பத்தை நாடகத்தில் ஏற்படுத்தியிருந்தமை, அதற்கு மேலும் சுவையூட்டியது. மத்தியானச் சாப்பாட்டிற்கு ஏற்றவிதமாகக் கதாநாயகன் தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்வதாகக் கலைஞர் நாடகக்கதையை அமைத்திருந்தமையை நாடகக் கம்பனியினர் வெகுவாகப் பாராட்டினர். ஆனால், உண்மையான நாடக ரசிகர்கள், கலைஞர் தமது நாடகக்கதையில் ஏற்படுத்திய திடீர் முடிவினால் ஏமாற்றம் அடைந்தனர். கதாநாயகன் உலகத் தமிழருக்காக 'உண்ணாவிரதம்' இருந்தவேளையில், துணை நடிகர்கள் சிறு தின்பண்டங்களைக் கொறித்துக்கொண்டிருந்த காட்சியும் நாடகத்தில் இணைக்கப்பட்டிருந்தது. கதாநாயகன் மட்டுமே உலகத் தமிழருக்காகத் தியாகம் செய்யத் தகுந்தவன், மற்றவர்கள் வெறும் பார்வையாளர்கள் மட்டுமே என்ற உணர்வை நாடக ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்துமுகமாக இக்காட்சி அமைந்திருந்தது. இந்த வகையில் நாடக நெறியாளரான கலைஞரின் நெறியாள்கை சிறப்பாக அமைந்திருந்தது. கதாநாயகனுக்கு மாத்திரமே முக்கியத்துவம் வழங்கி, நாடகத்தை நெறிப்படுத்தியிருந்தார், கலைஞர்.

சில மணித்தியாலங்களை மட்டுமே கொண்ட இந்த நாடகத்தை உலக நாடக ரசிகர்கள் கண்டு இன்புற்றமை குறிப்பிடத்தக்கது. நாடகத்தின் தொடக்கத்தில் கதாநாயகனின் தியாகத்தை நினைத்து ஏங்கிய ரசிகர்கள், நாடக முடிவு கதாநாயகனுக்கு மகிழ்ச்சியையும், தமக்குச் சோர்வையும் அளிப்பதாகக் கருதினர். ஆனால், கதாநாயகனாகப் பாத்திரமேற்று நடித்த கலைஞரின் நடிப்பாற்றலை மெச்சினர்.

மொத்தத்தில் கலைஞரின் "உண்ணாவிரதம்" என்ற இந்நாடகத்தின் கதையமைப்பு, நடிப்பு, நெறியாள்கை, சாட்சியமைப்பு, தயாரிப்பு போன்ற அனைத்துமே சிறப்பாக அமைந்திருந்தன. குறுகிய நேரத்தில் நாடகம் முடிவடைய வேண்டும் என்ற நேரக்கட்டுப்பாட்டில் நெறியாளரான கலைஞர் அதிக கவனம் செலுத்தியிருந்தார். கதை – வசனம், நடிப்பு, நெறியாள்கை, தயாரிப்பு ஆகிய அனைத்தையும் ஒருவரே ஏற்றிருந்தமையால், நாடகம் தொய்வின்றிக் கட்டுக்கோப்புடன் அமைந்திருந்தது. இந்நாடகம் அரங்கேறிய பின், தமிழக அரசியல்வாதியொருவரைப் பத்திரிகை நிருபர் ஒருவர் பேட்டி கண்டபோது, "உங்களுக்குப் பிடித்த நடிகர் யார்?" என்று கேட்டார். அதற்குப் பதிலளித்த அந்த அரசியல்வாதி, கலைஞர்தான் தமக்குப் பிடித்த நடிகர் என்று தெரிவித்தார். கலைஞரின் "உண்ணாவிரதம்" நாடகம் மேடையேற்றப் பட்டபோது நல்லவேளையாகப் "பண்டிதர்கள்" சிலர் பக்கத்தில் இருக்கவில்லை. இருந் திருந்தால், மத்தியானச் சாப்பாட்டிற்கு ஏற்றமுறையில் கலைஞர் தமது "உண்ணா விரதம்" நாட கத்தின் கதையை அமைத்திருந்த திறமையையும், அவரின் நடிப்பாற்றலையும் மெச்சிப் புதிய புதிய வியாக்கியானங்களை அவருக்கு முன்னாலேயே தெரிவித்து, அவரிடமிருந்து வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் பெற்றுப் பத்திரிகைகளில் அவற்றைப் பிரசுரிக்கச் செய்திருப்பார்கள். கலைஞரின் நாடகத்தால் அவர்களும் தங்களுக்குப் புகழ்தேட முயற்சித்திருப்பார்கள்.



## தேர்தல் திருவிழா

இந்தியத் தேர்தல் நடந்துமுடிந்துவிட்டது. "பழைய குருடி கதவைத் திறவடி" என்ற ரீதியில் ஆட்சி மாற்றம் எதுவும் இன்றி, தேர்தல் நிறைவேறியிருக்கிறது. உலகத் தமிழர்களைப் பொறுத்தவரை, பெரிய மாற்றங்கள் ஏதாவது இடம்பெறும் என எதிர்பார்க்கமுடியாது. வழமைபோல இரண்டு உதவாக்கரைகள் இந்தியாவில் இருந்து வெளிநாடு ஒன்றுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருப்பார்கள். அவர்களால் உலகத் தமிழர்களுக்கு எந்தப் பயனும் இல்லை.

தமிழ்நாட்டில் வழமை போல "உலகத் தமிழர் தலைவர்" அம்மை – அப்பன் வழிபாடு நிகழ்த்திக் கொண்டிப்பார். அண்மையில் கூட அன்னை தமிழ்நாட்டுக்கு வருகை தந்தபோது, தியாகத்தின் திருவிளக்கு, சொக்கத்தங்கம் என்றெல்லாம் தலைவர் புகழ்மாலை சூட்டினார். உலகத் தமிழர்களின் துன்பங்களைக் கண்ணெடுத்தும் பார்க்காத, பார்க்க முயலாத, கருத்திலே கொள்ளாத அன்னையைத் "தமிழர் தலைவர்" இவ்வாறெல்லாம் புகழ்ந்திருக்கிறார்.

இப்போதெல்லாம் "உலகத் தமிழர் தலைவர்" பராசக்தியில் எழுதிய வசனங்களே அவரைப் பார்த்துச் சிரிக்கின்றன. "வானத்தை முட்டும் கோபுரங்கள், மானத்தை இழந்த மனிதர்கள். உயர்ந்த மாளிகைகள், தாழ்ந்த உள்ளங்கள்... வந்தவரை வாழவைக்கும் தங்கத் தமிழ்நாடே, நீ சொந்தநாட்டுக்காரனைச் சுரண்ட எப்போது கற்றுக்கொண்டாய்? சிங்கத் திருநாடே, நீ சிலந்திக்கூடாய் எப்போது மாறினாய்? என்பது போன்ற வசனங்கள், அவர் தமக்குத் தாமே எழுதியவை போன்று காணப்படுகின்றன.

தேர்தலில் "உலகத் தமிழர் தலைவரின்" கட்சியினர் படுதோல்வி அடைவர் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவர் ஒருவாறு தமது நடிப்பின் மூலமும், அதிகார துர்ப்பிரயோகத்தின் மூலமும், பணபலத்தின் மூலமும் தம்மைத் தக்கவைத்துக்கொண்டுள்ளார். ஆயினும், அவரது செல்வாக்கு தமிழ் நாட்டில் சரிந்து வருவதையும் அவதானிக்க முடிகிறது.

அவரது அன்பர்களும், நண்பர்களுமான மூளையும், இதயமும் இல்லாத தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர் சிலர் தோல்வி அடைந்துள்ளனர். தங்கபாலு, இளங்கோவன், மணிசங்கர் ஐயர் போன்றோர் தேர்தலில் மண் கௌவியுள்ளனர். தங்கபாலுவுக்கு மூளையும், இதயமும் இல்லாவிட்டாலும், வாய் மட்டும் நீளம். அவர் தோல்வியடைந்தது உலகத் தமிழர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது. உலகத் தமிழர் தொடர்பாக உளறிக் கொட்டும் சிதம்பரம், மூவாயிரம் வாக்கு வித்தியாசத்தில் தப்பிப் பிழைத்திருக்கிறார். காலப்போக்கில் காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் இருந்த சுவடு தெரியாமல் அழியப்போவது நிச்சயம். அதனை இந்தத் தேர்தல் உணர்த்தி நிற்கிறது. உலகத் தமிழர்களுக்காக ஓயாது குரல் கொடுத்துவந்தவர்கள் தேர்தலில் தோல்வியடைந்தமை, உலக ரீதியிலான ஒரு சோகம் ஆகும்.

## சினிமா விமர்சனம்




### கடவுளைக் கண்டேன்


இவ்வருட ஆரம்பமே தமிழ்த்திரையுலகுக்கு உற்சாகம் தருவதாக அமைந்துள்ளமைக்குக் காரணம் பாலாவின் இயக்கத்திலும், ஆர்யா – பூஜா நடிப்பிலும் வெளிவந்திருக்கும் 'நான் கடவுள்' திரைப்படம். எப்பொழுதுமே வித்தியாசமான திரைப்படங்களைத் தமிழ் திரையுலகுக்குத் தந்து கொண்டிருக்கும் பாலாவின் 'நான் கடவுள்' திரைப்படம் காசியையும், கங்கையையும், அகோரிகளையும் தத்ரூபமாகத் தரிசிக்க வைத்தாலும், இத்திரைப்படம் மூலம் பாலா சமூகத்திற்கு என்ன சொல்ல வருகிறார் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது.

தினக்குரலில் வெளியான ஞானசேகரனின் இந்திய யாத்திரைக் கட்டுரையில் கண்ட காசியையும், கங்கையையும் 'நான் கடவுள்' திரைப்படத்தில் பாலா நேரிலேயே சாட்சிப் படுத்தியிருப்பதன் மூலம் தமிழ்த்திரை உலகிற்கு ஒரு புதிய களத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

தமிழ்ப்படங்களின் வழக்கமான மசாலாத் தனங்களில் இருந்து முற்றிலுமாக வேறுபட்டு எம்மை புதியதோர் உலகில் இரண்டரை மணிநேரம் சஞ்சரிக்க வைத்து, மனதிலே ஆயிரம் புரிதலின்மைகளையும், கேள்விகளையும் எழவைத்தமையே இப்படத்தின் வெற்றி என்று கூறலாம். ஆர்யா, பூஜா ஆகியோரின் அற்புத நடிப்பு, உயிரோட்டமான இசைஞானியின் இசை, தத்ரூபமான ஒலி, ஒளிப்பதிவுகள், எடிற்றிங், அசத்தலான வசனங்கள், வித்தியாசமான இயக்கம் என பல பாராட்டு தல்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். எனினும், பலருக்கு இப்படம் புரியவில்லை என்பதையும் மறுப்பதற்கு இல்லை. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் போல இனி ஒரு நடிகன் பிறந்து வர முடியாது என்ற கூற்றை நிராகரித்து பிரமாண்டமாய் நடிப்பில் உயர்ந்து நிற்கிறார் ஆர்யா. ஆடைக்குறைப்பும், ஆடம்பர மேக்கப்புமாக அலைந்து திரியும் தமிழ்ச் சினிமா நடிகைகள் மத்தியில், ஏழைப் பிச்சைக்காரி வேடம் தாங்கி பிச்சைக்காரியாகவே வாழ்ந்து மடியும் பூஜாவை மனம் திறந்து பாராட்டாமல் இருக்க முடியாது.

கூட இருந்தால் குடும்பத்தவர்கள் இறந்து விடுவார்கள் என்று சோதிட வல்லுனர் கூறியதால் சிறுவனாக இருக்கும் நாயகன் காசியிலே கொண்டுசென்று விடப்படுகிறான். பதின் நான்கு வருடம் கடந்த பின்னர் மகனை காணச் செல்லும் தந்தையும், சகோதரியும் கங்கைக் கரைச் சுடு காட்டில் அவனைத் தேடிச் செல்கின்றனர்.


கதாநாயகனின் இயல்பினைப் பார்வையாளர்களுக்கு உணர்த்துமாப் போல முதற்காட்சியே அட்டகாசமாக அரங்கேறுகின்றது. காசியின் காவல் தெய்வங்கள் துஷ்டர்களைக் கண்டால் கால பைரவர்களாக மாறி அவர்களின் கணக்கைத் தீர்ப்பவர்களாக மாறிவிடுகிறார்கள். கதையின் நாயகனும் அவ்வாறான ஒருவனாக அறிமுகமாகிறான். துஷ்டனாக இனங்கண்ட ஒருவனை நாயகன் ருத்திரன் தெருத்தெருவாக, மணல் மேடு மேடாக இழுத்து புரட்டித் தாக்கி மயானத்தில் எரியும் பிணங்களின் ஊடாக விரட்டி அடித்து துவசம் செய்து கொல்கிறான். பின்னர் எம்பிக் குதித்து இறந்தவனின் மேல் பத்மாசனம் போட்டு அமர்ந்திருந்து யோக முத்திரை பதித்தபடி மோன தியானத்தில் ஆழ்ந்து போகும் அந்தக் காட்சி தமிழ்த் திரைப்படத்தில் வித்தியாசமான ஒரு காட்சி. பத்மாசனமிட்டு அமர்வதிலும், கஞ்சாவைக் குதப்பி எச்சில் வழிய அமர்ந்திருந்து போதை மிக்க கண்களுடன் சுலோகங்களைச் சொல்லும் போதும் ஆர்யாவின் நடிப்பு அனல் பறக்கிறது. மிகுந்த சிரமம் எடுத்து இதற்கு முன்னர் வேறுயாரும் தமிழில் நடித்ததில்லை என்றே தோன்றுகிறது. துஷ்டநிக்கிரகம் செய்யும் ஒரு கபாலியாகவே வாழ்ந்து காட்டிய ஆர்யாவுக்கு நடிப்பில் இம்முறை தேசிய விருது கிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.




எரியும் பிணங்களையும், கரையும் சாம்பல்களையும் கண்முன்னே காட்டி வாழ்வு பற்றிய பல கேள்விகளை எழுப்பும் இயக்குனர் பாலா, மீண்டும் இத்திரைப்படத்தில் சுடுகாட்டைத் தரிசனமாக்குகிறார்; வலது குறைந்தவர்களை, பிச்சைக்காரர்களை – அவர்களின் அவல வாழ்வை, அவர்களையும் சுரண்டிப் பிழைக்கும் வன்முறை வில்லன்களை எல்லாம் எம்முன் நிறுத்துகிறார். சில காட்சிகளில் மிகைப்பாட்டினால் சலிப்பு ஏற்பட்டாலும், இது யதார்த்தமானவை என்பதனால் மன்னிக்க முடிகிறது. குறிப்பாக பிச்சைக்காரர்களின் வீதி நாடகம்.

ஏழைப் பிச்சைக்காரியாக அறிமுகமாகும். பூஜா அவ்வப்போது பழைய சினிமாப் பாடல்களை பொருத்தமான இடத்தில் பாடி பிச்சையெடுக்கும் காட்சிகளிலும் இறுதிக்காட்சிலும் மனதைக் கரைக்கிறார். 'இதோ எந்தத் தெய்வம் முன்னாலே' என்ற சௌந்தரராஜன் பாடிய பாடலை பெண்குரலில் பாடி பிச்சை எடுக்கும் முதல் காட்சியிலே குருட்டுப் பிச்சைக்காரியான பூஜா தமது விழிகளின் ஊடாக மனதைத் தொட்டு விடுகிறார்.

காசியிலிருந்து ஊருக்கு அழைத்து வரப்படும் ஆர்யா தாய்மையையே உதறி எறிவது தமிழ்ப்படத்திற்கு புதிது. அவ்வாறே ருத்திரன் என்ற கதாநாயகனான 'கடவுள்' தமிழ்த் திரைப்பட உலகுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு வித எதிர்மறைப் படைப்பு. ரசிகர்களின் கதாநாயக உயர் துதிப்பாடுகளுக்கு இங்கு இடமில்லை. பெற்றவளையே தூய்மையென்னா என்ன வென்று தெரியுமா உனக்கு என்று கேட்பதும், பாசத்தில் துடிப்பவளை விரட்டியடிப்பதும் வித்தியாசமான கதாநாயக தரிசனங்கள். இதற்கு முன்னர் கொடிய வில்லன்களும் எதிர்மறையான கதாநாயகர்களும் கூட தாய்மையைப் போற்றுவதைப் பார்த்த எமக்கு இதைத் தாங்கக் கஷ்டமாக இருக்கிறது. தனக்குத் தானே கடவுள் என்று மகுடம் சூட்டிக் கொண்டு, தன்னைக் கடவுளாகப் பாவனை செய்து கொண்டு, அந்த அடிப்படையில் அழிப்பு





வேலைகளில் ஈடுபடுவதும், எப்போதும் போதைக்குள் மயங்கிப் போயிருப்பதும் ஒரு வித மனநோய்தான் என்று ஆறுதலடையலாம். கதாநாயகன் நல்லவனாகத்தான் இருக்க வேண்டுமா?

கதாநாயகன் வரும் காட்சிகளில் எல்லாம் சமஸ்கிருத சுலோக உச்சரிப்பும், மத சுலோகங்களும் நெருடலாய் ஒலித்தாலும், அதை நாயகன் உச்சரிக்கும் விதம் நடிப்பின் உச்சத்திற்கே ஆரியாவைக் கொண்டு செல்வதையும் மறுக்க முடியாது. நான் யார் என்று கேட்கும் போது, 'ஜெய் பகவான்' என்று 'நான் கடவுள்' என்று பொருள்படக் கூறும் இடத்திலும் ஆர்யா நடிப்பில் கடவுளாகிறார். அற்புதமான முகபாவங்கள், அங்க அசைவுகள் கஞ்சா போதையில் மிதக்கும் கண்கள் – அற்புதமான நடிப்பு!

கஞ்சா போதைக் கலாசாரத்தையும், கழுத்தறுப்புச் செய்யும் கொலைக் கலாசாரத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும், கதாநாயகன் சொல்லும் நியாயங்களில் அவர் ஏற்று அவர் மீது ஒன்ற வைக்கிறது. "நான் சாதாரண மனுசனில்லை; கடவுள்; வாழக் கூடாதவர்களுக்கு நான் கொடுக்கும் தண்டனை மரணம்; வாழமுடியாதவர்களுக்கு நான் கொடுக்கும் மரணம் வரம் என்று கதாநாயகனின் முழக்கத்தை ஏற்பது கஷ்டமாக இருக்கிறது. ஏழைகளை வைத்து சுகபோகம் அனுபவிப்பவர்களைக் குரூரமாகக் கொலை செய்யும் போது ஏற்படுகின்ற நிறைவு, குருட்டுப் பிச்சைக்காரியின் கழுத்தை அறுக்கும் போது ஏற்படவில்லை. எனினும் இக்காட்சியில் ஆர்யா, பூஜா ஆகியோரின் நடிப்பில் ஊறித் திளைத்து விடுகிறோம். 'இந்த ரணவேதனையில் இருந்து என்னைக் காப்பாற்றுங்கள்' என நாயகியின் கதறல் ஈழத் தமிழரின் இன்றைய அவலமாக ஒலிக்கிறது. உருத்திரனைப் போல் நான் கடவுள் என யார் வருவார்?

*– பிரகலாத ஆனந்த்*

# சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்

குறிஞ்சிநாடன்

### பேராசிரியர் செல்வராசாவின் மணிவிழாவும் மலர் வெளியீடும்

பேராசிரியர் செல்வராஜா அவர்களின் மணிவிழா கல்லடி உப்போடை சிவானந்தா தேசியப் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது. விழாவுக்கு மணிவிழா சபைத்தலைவர் கா. நடராஜா அவர்கள் தலை தாங்கினார். மேற்படி விழாவில் மௌலவி ஏ.எம். இப்றாஹிம், சுவாமி அஜராத்மானந்தா ஆகியோர் ஆசியுரை வழங்கினர். வரவேற்பு நடனத்தை திருமதி சுபத்ரா கிருபாகரனின் மாணவிகள் ஆடினர். 'கல்விச் செல்வம்' சிறப்பு மலரினை வெல்லவூர்க் கோபாலும் விழாத்தலைவர் கா. நடராஜாவும் மணிவிழா நாயகருக்கு வழங்கினர். வெளியீட்டுரையை திரு. கோபால் அவர்கள் நிகழ்த்தினார். கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராஜா, கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ். சந்திரசேகரன், கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி செல்வி. எஸ். பொன்னையா, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தண்டாயுதபாணி ஆகியோர் கலந்து கொண்டு மணிவிழா நாயகனின் கல்விச் செயற்பாடுகள் பற்றி விதந்துரைத்தனர்.

### இதிகாசத்தை வென்றவன் இலக்கியச் சொற்பொழிவு

இதிகாசத்தை வென்றவன் என்ற தலைப்பில் கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் ஓர் இலக்கியச் சொற்பொழிவு இடம் பெற்றது. நிகழ்த்தியவர் கொழும்பு றோயல் கல்லூரி மாணவர் ஆவார். மேற்படி நிகழ்வுக்கு 'ஞானம்' சஞ்சிகை ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன் தலைமை வகித்தார். அவர் தனது தலைமை உரையில் இதிகாசங்கள், மனிதன் எப்படி வாழவேண்டும். எப்படி வாழக்கூடாது என்ற தத்துவங்களையும் தர்மங்களையும், நீதி நெறிமுறைகளையும் எடுத்துக் கூறுகின்றன. அவைகளை எவன் கடைப்பிடிக்கிறானோ அவனது வாழ்வு சிறப்படையும் என்று கூறினார். சொற்பொழிவாளர் இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் எடுத்துக் கொண்டு அதிலுள்ள பாத்திரங்களின் நிறைகுறைகளை விளக்கினார். இராமாயணத்தில் மிகப் பெரும் வீரனாக சித்தரிக்கப்படும் இராமன் வாலியை மறைந்திருந்து கொன்றதும், மெய்மான் எது பொய்மான் எது என்று அறியமுடியாமற் போனதும் அவனது வீரத்தைக் குறைத்து விட்டது. வாலி சிறந்த வீரன் என்று சொல்ல முடியாது ஏனெனில் தம்பி மனைவியை கவர்ந்த குற்றத்தைச் செய்தான். இராவணன் முக்கோடி வாழ் நாள், முயன்ற பெருந்தவம், வலிமை எல்லாம் சீதையை கவர்ந்தமையால் தரம் குறைந்தவனானான். பாரதத்தில் துரியோதனன் மண்ணாசை கொண்டு துரௌபதையைத் துகிலுரியச் செய்த பாவத்தைக் கொண்டவன், துரோணர் அபிமன்யு மீது பின்னால் நின்று அம்பு விடுமாறு கூறி போர் நெறி பிறழ்ந்தார். பீஷ்மர் ஒப்பற்ற வீரர் அம்பிகையை கவர்ந்து அவளுக்கு வாழ்வு கொடுக்காத பாவத்தைச் செய்தார். அர்ச்சுனன் சிகண்டியை முன்னிருத்தி பீஷ்மரைக் கொன்றான்; ஏகலைவன் பெருவிரலை குருதட்சணையாகப் பெறச் செய்தான். கர்ணன் கொடையாளியாகவும் வில்லாளியாகவும் இருந்தும் அதர்மத்திற்கு துணை நின்றான், அபிமன்யு அநியாயமாக கொலைப்பட காரணமானான். ஆகவே அவனும் சிறந்த வீரன் அல்லன். சிறுவனாக இருந்தும் போர்க்களத்தில் வீரத்தைக் காட்டி பகைவரை துவம்சம் செய்து புறமுதுகு கொண்டோடச் செய்த அபிமன்யுவே இதிகாசத்தை வென்ற வீரனாகத் திகழ்கிறான்' என்று முடித்தார். மிகச் சிறப்பான பேட்சைக் கேட்டு சபையோர் வாழ்த்தினர்.

### கவி இன்பம் சொற்பொழிவு

கவி இன்பம் என்னும் தலைப்பில் அருமையான சொற்பொழிவு ஒன்றை கவிஞர் திரு. சோ. பத்மநாதன் அவர்கள் வழங்கினார். மேற்படி நிகழ்வு கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் திரு. இராஜகுலேந்திரா தலைமையில் இடம்பெற்றது. திரு. பத்மநாதன் அவர்கள் பலாலி ஆசிரிய கலாசாலை அதிபராக இருந்தவர். பல கவிதை நூல்களை வெளியிட்டவர். தென்னிலங்கை சிங்களக் கவிஞர்களின் கவிதைகளை மொழி பெயர்த்தவர். சில நாடகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்.

கவிதையைப் பற்றிய இலக்கணம் காலத்திற்குக் காலம் பல்வேறு அறிஞர்களால் விபரிக்கப்பட்டுள்ளது என்று ஐரோப்பிய அமெரிக்க அறிஞர்களின் கருத்துக்களை சுவைபடக் கூறினார். கட்டற்று எழும் உணர்ச்சிகளின் வெளிப்பாடாக எழும் கவிதைகள் உணர்ச்சிப் பிரவாகமாக வெளிவரும் என்றார். 'உள்ளத் தெழுவது கவிதை' என்பதை தொட்டுக் காட்டினார். ஓவியம் இருபரிமாணங்களைக் கொண்டது. சிற்பம் மூன்று பரிமாணங்களைக் கொண்டது. ஆனால் கவிதை பலபரிமாணங்களைக் கொண்டது. மொழியை ஊடகமாகக் கொண்டது. ஓசையின் வேர்களாக வேதகால ரிஷிகளையும் கூறலாம். அவர்களே மந்திரச் சொற்களை ஓசையாக்கி உணர்த்தினர். ஓசை நயம் இல்லாத கவிதை உப்பற்ற பண்டமாகும். ஆகவே கவிதைக்கு ஓசை முக்கியம் என்று கூறியதுடன் திரு. சச்சிதானந்தன் அவர்களுடைய யாழ்ப்பாண மாம்பழம் கவிதையையும் திரு. உத்திரமூர்த்தி, பாரதியார் போன்றோரின் கவிதைகளையும் உதாரணமாகக் காட்டியதுடன், பிரபஞ்சம் முழுவதும் ஓசையால் நிறைந்துள்ளது. ஆகவே ஓசைநயம் கவிதைகளில் ஆட்சி செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். இறுதியில் கவிதையானது ஓசை கொண்டதாக

உருவகம் கொண்டதாக, படிமம் கொண்டதாக, குறியீடு கொண்டதாக அமைய வேண்டும் என்றதுடன் கவிதை மனதுக்கு இன்பமும் புத்துணர்ச்சியும் கொடுத்து கிளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

சபையோர் குறிப்புரையில் திரு. குறிஞ்சிநாடன், திரு. சண்முகவேல், பன்மொழிப்புலவர் திரு. த. கனகரத்தினம் ஆகியோருடன் இன்னும் பலரும் சோ.ப. அவர்களின் சொற்பொழிவை விதந்து உரையாற்றினர்.

## பேராசிரியர் முனைவர் சு. வித்தியானந்தன் நினைவு நாள் பேருரை

கால் நூற்றாண்டுக்கு மேலாக பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக – பேராசிரியராக – தமிழ்த்துறைத் தலைவராகப் பணிபுரிந்த, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகப் பணியாற்றி அமரரான திரு. சு. வித்தியானந்தன் அவர்களின் பிறந்த நாள் பேருரை கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் 08.05.2009 அன்று மாலை 6.00 மணிக்கு இடம் பெற்றது.

திரு. பாலகிருஷ்ணன் தம்பதிகள், பேராசிரியர் சபா. ஜெயராஜா, பேராசிரியர், சோ. சந்திரசேகரன், பன்மொழிப்புலவர் த. கனகரத்தினம், திரு. சிவநேசச்செல்வன், திரு. சிவசண்முகமூர்த்தி, ஜின்னா ஷெரிபுத்தீன் போன்றோர் மங்கல விளக்கேற்றினர். தமிழ்த்தாய் வாழ்த்தை சிவசண்முகமூர்த்தி பாடினார்.

வரவேற்புரையை திரு. மதுசூதனன் நிகழ்த்தினார். மேற்படி நிகழ்வுக்கு தலைமை தாங்கிய பேராசிரியர். சோ. சந்திரசேகரம் பின்வருமாறு கூறினார். தமிழுக்கும், சைவத்திற்கும், தமிழ்ச் சமூகத்திற்கும் அரும்பெரும் சேவையை அமரர் சு. வித்தியானந்தன் வழங்கினார். பேராதனை சர்வகலாசாலை இறுக்கமான கட்டமைப்பைக் கொண்டதாக இருந்தபோது அதனை உடைத்து தமிழ்ப்பண்பாடும் கலாசாரமும் வளரக் காரணமாக இருந்தார். மலேசியா, பிரான்ஸ், மதுரை ஆகிய இடங்களில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நடக்க தனிநாயகம் அடிகளார் காரணமாக இருந்தார். உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடக்க பெரும் பொறுப்பை திரு. வித்தியானந்தன் அவர்கள் ஏற்றிருந்தார். சமூகத்துடன் நல்ல தொடர்பை பேணியவர் பேராசிரியர்.

வித்தியின் பார்வையும் பதிவும் என்ற நூலை கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுக் குழுவினர் வெளியிட்டனர். 'சேமமடு' பொத்தகசாலை மேற்படி நூலை அழகாக அச்சில் கொணர்ந்திருந்தது. தமிழில் பேசுவதை அவமானமாகக் கருதிய காலகட்டத்தில் பேராசிரியர் தமிழை சிறப்புப் பாடமாக கற்று தமிழ் ஆராய்ச்சி செய்து புகழ் பெற்றார். வடமோடி தென் மோடி நாடகங்களை அரங்கேற்றி கலைவளர உதவினார்.

புலமை உரையை பேராசிரியர் பாலகிருஷ்ணன் நிகழ்த்தினார். பேராசிரியர் நித்தியானந்தன் ஆசிரியர் மாணவர் உறவை வளர்த்தவர். தமிழ் பற்று கொண்டவர். மட்டக்களப்பு நாடகங்களையும் கூத்துக்களையும் பேராதனையில் மேடையேற்றியவர். 1974 யாழ்ப்பாணத்தில் அரசை விரோதித்து உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்தினார். சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், அறிஞர் என்றார்.

அவரது பத்துக் கட்டுரைகள் கொண்ட 'வித்தியின் பார்வையும் பதிவும்' என்ற நூலின் முதற்பிரதியை திரு. தியாகலிங்கம் பெற்றுக் கொண்டார். பேராசிரியடரிடம் படித்தோரும் மற்றோரும் மண்டபம் நிறைத்திருந்தனர்.

## சமரபாகு சீனா – உதயகுமாரின் கவிதை நூல்கள் வெளியீட்டு விழா

வளர்ந்து வரும் எழுத்தாளர் சமரபாகுசீனா – உதயகுமாரின் 'வெற்றியுடன்', 'உடைந்தநினைவுகள்' ஆகிய இரு கவிதைநூல்களின் வெளியீட்டுவிழா கடந்த 10.04.2009 இது யா/ கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையில் இடம் பெற்றது. இவ்விழாவிற்கு ஆசிரியர் தி. சுபாகரன் தலைமை வகித்தார். யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் எம். நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராகவும் வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த. தவேந்திரராஜா, கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை அதிபர் பா. வெற்றிவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

இவ்விழாவில் யா. பல்கலைக்கழகச் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. த. கலாமணி வாழ்த்துரையை வழங்க, யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. அநாதரட்சகன் நூல்களை வெளியிட்டு வைத்தார். நூல்களின் மதிப்பீட்டுரைகளை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இரா. இராஜேஸ் கண்ணனும் ஆசிரியர்களான தே. துஷ்யந்தன், ம.பா. மகாலிங்கசிவம் ஆகியோரும் வழங்கினர். நூலாசிரியர் ஏற்புரை நிகழ்த்தினார்.

தகவல் : ம. பா. மகாலிங்கசிவம்

## கல்முனை கலை இலக்கிய நண்பர்களின் கலை நிகழ்வுகளும் பரிசளிப்பு விழாவும் – 2009

மேற்படி விழா கல்முனை உவெஸ்வி உயரதரப் பாடசாலை கவிஞர் ஜீவா ஜீவரத்தினம் அரங்கில் 02.05.2009 அன்று சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகியது. திருமதி. க. லோகிதராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்குப் பிரதம அதிதிகளாக அருட்சகோதரர் மத்தியூ, இரா. அன்புமணி நாகலிங்கம், மு. சடாட்சரன் ஆகியோர் கலந்து கொண்டனர். மங்கல விளக்கேற்றல், மறைந்த கலைஞர்களுக்கு அஞ்சலி, தமிழ்த்தாய் வணக்கம், வரவேற்புரை, தலைமையுரை, அதிதிகள் உரை, நினைவுரைகள், பரிசில்கள் வழங்கல், பரதநாட்டியம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்று விழா இனிதே நிறைவுற்றது.

## அமரர் அங்கையன் கயிலாசநாதனின் படைப்புகள் பற்றிய இலக்கியக் கருத்தரங்கு

மேற்படி கருத்தரங்கு 16.05.2009 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் திருமதி பத்மா சோமகாந்தன் தலைமையில் நடைபெற்றது. தமிழ் வாழ்த்து, வரவேற்புரை, தலைமையுரை ஆகியவற்றைத் தொடர்ந்து அங்கையன் கயிலாசநாதனின் கவிதைகள் பற்றிய விமர்சனத்தை மேமன்கவி நிகழ்த்தினார். அங்கையன் கயிலாசநாதனின் நாவல்கள் பற்றி மு. தயாபரன் கருத்துரை வழங்கினார். அங்கையன் கைலாசநாதன் இயற்றிய மெல்லிசைப் பாடல்கள் அடங்கிய இறுவெட்டினை திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் வெளியிட்டு வைத்தார். அங்கையன் கைலாசநாதனின் 'புனைகதை இலக்கியம்' பற்றி ஆய்வு செய்த திருமதி

குணசாந்தி இராஜரூபன் விழாவில் பாராட்டைப் பெற்றதோடு அங்கையனின் படைப்புகள் பற்றிய ஓர் அறிமுக உரையை ஆற்றினார். நன்றியுரையை இராஜலட்சுமி கயிலாசநாதன் ஆற்றினார்.

## ஒரே மேடையில் நான்கு நூல்கள் வெளியீடு புரவலர் புத்தகப் பூங்காவின் சாதனை.

இதமான மாலை நேரம் 24.05.2009 ஞாயிற்றுக்கிழமை. கொழும்புத் தமிழ்ச் சங்க, சங்கரப்பிள்ளை மண்டபம் ஜனத்திரளால் ஆக்கிரமிக்கப்படுகிறது. நுழை வாயிலில் வைத்தே ஒவ்வொருவருக்கும் குளிர்பானம் கொடுத்து அனுப்புகிறார்கள். புதுமையான வரவேற்பு.

திருமதி. வசந்தி தயாபரன் தமிழ் வாழ்த்து இசைக்கிறார். புரவலர் புத்தகப் பூங்கா நூல் வெளியீட்டு விழா ஆரம்பமாகிறது. புரவலர் ஹாசிம் உமர், மூத்த எழுத்தாளரும் வீரகேசரி நிறுவனத்தில் நான்கு தசாப்தங்களாக பணியாற்றிவருபவருமான திருமதி அன்னலட்சுமி இராசதுரை, நூலாசிரியர்களான கவிஞர் பொன். பூபாலன், எம்.ஐ.எம். தாஹிர், ஷமீலா இஸ்மத், வெளிமடை றபீக், புரவலர் புத்தகப் பூங்கா அமைப்புக்குழுச் செயலாளர் கலாபூஷணம் கலைச்செல்வன், ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் தி. ஞானசேகரன், நவமணி ஆசிரியர் ஜனாப் அமீன், கொழுந்து ஆசிரியர் அந்தனி ஜீவா ஆகியோர் மேடையை அலங்கரிக்கின்றனர்.

கிழக்கிலங்கை பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி செ. யோகராஜா அவர்கள் விழாத்தலைமை ஏற்று கம்பீரமாக அமர்ந்திருக்கிறார். சமூக ஜோதி எம்.ஏ. றபீக் அறிவிப்பாளராக விழாவை ஆற்றுப்படுத்தினார்.

எத்தனையோ எழுத்தாளர்கள் கவிஞர்கள் தங்கள் ஆங்கங்களை எழுத்துருவில் புத்தகமாக்க முடியாமல் தவிக்கிறார்கள். கடந்த காலங்களில் வீரகேசரி நிறுவனம், மீரா பதிப்பகம், உதயம், மல்லிகை, ஞானம் போன்றவை பல எழுத்தாளர்களின் ஆக்கங்கள் நூல்வடிவில் வர உதவி இருக்கின்றன.

வறிய எழுத்தாளர்களுக்கு, உதவவும் வாழ்நாளிலேயே அவர்களது எழுத்துக்களை புத்தகமாக பார்க்கும் வண்ணம் புரவலர் ஹாசிம் உமர் வள்ளலாக இருந்து உதவுவது பெருந் தொண்டாகும் என தலைமையுரையில் தலைவர் குறிப்பிட்டார். புத்தகங்களாக்கும்போது தரத்தையும் கவனித்து நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும் இருக்கும் எழுத்தாளர்களின் ஆக்கமும் இடம்பெற உதவ வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார்.

கலாபூஷணம் கலைச்செல்வன் சிறப்புரையாற்றும் போது புரவலர் புத்தகப் பூங்காவின் செயற்பாடுகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். ஒரு எழுத்தாளர் தனது படைப்பை இதுவரை புத்தகமாகக் கொண்டு வர முடியாத நிலையில் இருக்கும்போது மட்டுமே புத்தகப் பூங்கா படைப்பாளரிடமிருந்து எழுத்துப் பிரதிகளைப் பெற்று புத்தகமாகப் போட்டு உதவுகிறது என்றும் படைப்பாளிகளின் ஒத்துழைப்பு வேண்டப்படுவதாகவும் கூறி, புரவலர் அவர்களின் பணியை வாழ்த்தினார்.

புத்தகங்களுக்குப் பதிப்புரை வழங்கிய ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரன், 'புதிய படைப்பாளிகள் அனுப்பும் கையெழுத்துப் பிரதிகளை கவனமாகப் பரிசீலனை செய்து தரமானவைகளையே புத்தகமாக வெளியிடுகிறோம்' என்றார்.

புதினப் பத்திரிகைகளில் புரவலர் பற்றி வெளிவந்த புதுமையான செய்திகளைத் தொகுத்து வைத்துள்ள, ஜனாப் றஹிபா பாருக் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி புரவலர் அவர்கள் 25000/= ரூபாய் வழங்கி அவரது முயற்சியைப் பாராட்டினார்.

மலையக கலை இலக்கிய ஒன்றியத்தின் சார்பில், புரவலர் அவர்களுடைய பணியைப்பாராட்டி அந்தனி ஜீவா, நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கினார்.

எம்.ஐ.எம். தாஹிர் எழுதிய 'பச்சைப்பாவாடை' சிறுகதைத்தொகுதியும், ஷமீலா இஸ்மத் எழுதிய 'இளமை என்னும் பூங்காற்று' சிறுகதைத்தொகுதியும், வெளிமடை றபீக் எழுதிய 'மேகவாழ்வு' கவிதைத் தொகுதியும், கவிஞர். பொன். பூபாலனின் 'இதயமுள்ள பாரதி' கவிதைத்தொகுதியும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

நவமணி ஆசிரியர் ஜனாப் அமீன், வீரகேசரி திருமதி அன்னலட்சுமி இராசதுரை, தினகரன் லோரன்ஸ் செல்வநாயகம், சமூகத் தொண்டர் முத்தப்பச் செட்டியார் போன்றோர் முதற் பிரதிகளைப் பெற்று படைப்பாளிகளை ஊக்குவித்தனர்.

எழுத்தாளர்கள் ஏற்புரை நிகழ்த்தி தமது உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தினார்.

நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவேறியது.

## துளிர்விட முடியா துவளுது அமைதி

குளப்பிட்டி. க. அருமைநாயகம்

*பறவைபோல் வானில் பறக்கக் கற்றான்*
*பரவையில் பாரைபோல் நீந்தப் பயின்றான்*
*தரையில் மனிதன் மனிதனா யில்லாமையால்*
*துருப்படியுது வாழ்வு துயரில் தோய்ந்து*

*துடிக்கும் இதயத்தை முடித்து இருத்தவும்*
*பிடியாப் பெயர்களை துயரில் பொருத்தவும்*
*நடிப்பும் நடப்பும் நமனாய் மாறிட*
*முடிவில் சோகத்துள் மூழ்கின்றார் பலபேர்*

*மொழியால் நிறத்தால் மதத்தால் மோதல்கள்*
*மலிந்து போவதால் நிம்மதி யழியுது*
*இழிவுச் செயல்கள் செழித்து வளர்வதால்*
*துளிர்விட முடியா துவளுது அமைதி.*



**'மூன்றாம் பாலின் முகம்' தமிழில் முதல் புதினம்...?**

அரவாணிகள் என்றொரு மக்கள் கூட்டம் இருப்பதையே நாம் நினைத்துப் பார்ப்பதில்லை''

''அடப்பாவி! அங்கே தொட்டு இங்கே தொட்டு இப்ப இவுகளையும் நிமிண்டிப் பார்க்கப் போரீயா? கன்றாவி''

''என்ன சொன்னீங்க? கன்றாவியா? உதைக்கனும் ஐயா உங்களையெல்லாம். சாதி சமயம் மொழின்னு ஆயிரத்தெட்டு கதை அளந்து மனித சமூகத்தை கூறுபோடுகிறீர்கள். அதன் ஒரு பகுதியினரை பத்தி சிந்திப்பதும், அவர்கள் மனத்தாங்கலை இலக்கியமாக்குவதுமான முயற்சிகள் நம் நாட்டில் இல்லியே என்று கண்கலங்குவது உங்களுக்கு கன்றாவியா தோணுதா?

''இந்தியாவிலே இவுகளைப் பத்தி நிறையவே எழுதுராங்க, பேசுராங்க, கருத்தரங்கெல்லாம் நடத்துராங்க அதுசரிதான். நம்ம எழுத்தாளர்கள் சமாச்சாரமே வேறு. அவுங்களுக்கு இது பத்தி எழுதவும் யோசிக்கவும் ஏது நேரம். நம்ம சப்ஜெட்டு வேறெயே''

''இப்புடி மொட்டையா சொன்னாப்போல, நீரு வெவரம் தெரிஞ்ச மனுஷராயிடுவீரா. இந்த அரவாணிகள் சமூகம் பத்தி மொதல்ல பொஸ்தகம் போட்டதே நம்ம நாட்டுக்காரார்தான்.

''அடிசக்கை. என்னமோ துக்கமா சொன்னியலே பாத்தீங்களா. நம்ம ஆளுங்க நம்ம ஆளுங்கதான்.

''உம்கும், இந்த வெத்துப் பீச்சலுக்கு கொறவு இல்லே. 'மூன்றாம் பாலின் முகம்' அரவாணிகள் பத்தின நாவல்; பிரியா பாபு எழுதியிருக்கிறார். இவர் அந்த சமூகத்தைச் சேர்ந்தவர். கொழும்பில் பிறந்தவர். முசிறி கிராமத்தின் பூர்வீகக் குடி. 1974இல் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் பாரதத்திற்கு குடி பெயர்ந்தவர். பள்ளிக்காலத்திலே தன் பால் வேறுபாட்டால் அடைந்த துன்பங்கள் அனந்தம். தெய்வத்திற்கு சமமான ஆசிரிய குல பெரியவர்களே பிஞ்சிலே பதம் பார்த்து விட்டார்கள் என்று கதறும் நெஞ்சமுடன் சொல்கிறார். பன்னிரெண்டுவரை கல்வி கற்று 1998இல் அறுவை சிகிச்சை மூலம் பெண்ணானார். இன்று அரவாணிகள் சமூகத்திற்காக, சமூக உயர்விற்காக கடுமையாக உழைத்து வருகிறார்.

'மூன்றாம் பாலின் முகம்' இவர் எழுதிய புதினம் ரமேஷ் பதின் மூன்று வயது பையன். தான் ஒரு பெண் என்பதை அவன் உணர்வதிலிருந்து கதை ஆரம்பமாகிறது. ரமேஷின் தாய் பார்வதி. ஒரு நாள் அம்மா வெளியிலிருந்து வருகிறாள். அப்போது வீட்டிற்குள்ளிருந்து ஒரு பெண்ணின் பாடும் குரல் கேட்கிறது.

''நம்ம வீட்டுலே ஏது பெண்பிள்ளே?' என்ற கேள்வியுடன் ஜன்னலால் எட்டிப்பார்க்கிறாள்.

அங்கே ஒரு காட்சி. மகன் ரமேஷ் அம்மாவின் ஜாக்கெட்டையும், சாறியையும் உடுத்திக் கொண்டு, கவர்ச்சியாக மேக்கப்போட்டுக் கொண்டு கண்ணாடிமுன் அமர்ந்து தன்னை மறந்து பெண்குரலில் பாடிக் கொண்டிருக்கிறான். திகைப்புடன் வெலவெலத்துப்போகிறாள்.

''ஐயோ சாமி இதென்ன கொடுமை''

இப்படியாக ஒரு துயரமான கதையின் சம்பவங்கள் அடுக்கடுக்கான அலைகளாகின்றன.

'மூன்றாம் பாலின் முகம்' அரவாணிகள் பற்றிய தமிழில் வெளிவரும் முதல் நாவல். அதை நம்மவர்தான் எழுதியிருக்கிறார்.

''அடிசக்கை!'' பட்டாசு கொளுத்துவோம்'' ''அடேயங்கப்பா! இந்த பீத்தல் ஆரவாரிப்புக்கு குறைச்சல் இல்லை''

**நீர்வையின் 'நிமிர்வு' விழாவின் நிழலாட்டம்**

10.05.2009 ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 4.00 மணி.

''எங்கேயப்பா இந்த ஓட்டம் ஓடுரீங்க?''

''இலக்கியக் கூட்டத்திற்கு!''

''என்ன சப்ஜெக்ட்?''

''நூல் வெளியீட்டு விழா''

''ஐயோ சாமி ஆளைவிடுங்க''

''ஏன்? ஏன்? என்ன விசயம்? முந்தியெல்லாம் விழுந்தடிச்சுக் கொண்டு வருவீங்க. முன்வரிசையிலே குந்துவீங்க. இப்ப என்ன நடந்துட்டுது.''

''அப்பப்பா அனுபவம்தான். இப்ப நூல் வெளியீடுகளுக்கு போனா பெரிய ஆபத்து, அழைப்பிதழ் அனுப்புராங்களோ இல்லையோ தலையை கண்டுட்டா ஓர் அடைமொழியோடு பெயர் சொல்லி மேடைக்கு கூப்பிடுராங்க. ஒரு புத்தகத்தை தலையிலே அடிச்சிடுராங்க. இருநூறோ, முன்னூறோ காலி, சுகர்காரன் பிரவுண் இடியப்பம் தான் ராத்திரிச் சாப்பாடு. மனுஷி பொத்தி பொத்தி வைச்சு குடுத்தனுப்புன காசு பறந்திடும். அப்புறம் ரெண்டு மூன்று நாளைக்கு திண்டாட்டம்தான்.

''ஹி! ஹி! ஹி!

''உம் உங்களுக்கு சிரிப்புத்தான். ரிட்டையர்காரர் எங்கபாடு தானே திண்டாட்டம்''

''சரி சரி புத்தகம் வாங்குற கவலையை விடுங்க. இது எழுத்தாளர் நீர்வை பொன்னையன்ட 'நிமிர்வு' சிறுகதை

தொகுப்பு பற்றிய கருத்தரங்கு. புத்தகத்தை படிச்சவங்க நாலுவார்த்தை சொல்லுவாங்க. அது அப்பிடி, இது இப்பிடின்னு அடிச்சு பேசுவாங்க, சிவனேன்னு கேட்டிட்டு வரவேண்டியது தானே..

''ஹி ஹி ஹி!''

''என்ன சிரிப்பு?''

''புத்தக விற்பனையோட லட்டு, நெஸ்கபே இப்படி ஏதாவது சப்ளை பண்ணுவாங்களா?''

''கிழிஞ்சுது போ. அதுதான் இலக்கிய கூட்டங்களிலே அடிக்கடி காணமுடியுதா? ஆளுக்கொரு புஸ்தகத்தை குடுத்து, வாசிங்க, கருத்தைச் சொல்லுங்க என்று சொல்லிட்டார் நீர்வை. எட்லீஸ் ஒரு 'ரீ' யாவது குடுக்காமலா விடுவாரு. வாங்கய்யா வாங்க''

''நேரம் போய்விட்டதே! என்று பதட்டம்.'' WERC மண்டபத்தை நோக்கி விழுந்தடித்துக் கொண்டு ஓட்டமா ஓட்டம்.

மண்டபம் களைதட்டிக்கிடக்கிறது. எழுத்தாளர்களும், ஆர்வலர்களும் ஆசனங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்கள்.

டாக்டர் முருகானந்தமும், செல்வி திருச்சந்திரனும் மேடையில் இருந்தார்கள். பவளவிழா எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் இடையிலே வந்து அவர்களுக்கிடையில் குந்திக் கொண்டார்.

டாக்டரின் விமர்சனம் ஒன்று நூலில் முகவுரையாக இருந்தது. அதையே தலைமையுரையாகவும் நிகழ்த்தினார். டாக்டர் டாக்டர்தான். அதற்காக முகவுரையிலுமா அறுவை சிகிச்சை.

''த்சோ! த்சோ!'' என்றார். லட்டுக்கும் நெஸ்கப்பேக்கும் ஆசைப்பட்டு ஒடிவந்தவர்.

'முன்னுரை நான் வாசிப்பதில்லை. அது ஆக்கிரமித்து தன் வழியில் என்னை இட்டுச்சென்றுவிடும்' இது ராஜரட்னம் மாஸ்டரின் கர்ஜனை.

அட அது முகவுரையாக இருந்தால் எங்கே இழுத்துக்கிட்டுப் போவப் போவது. விமர்சனம் தான் கடிவாளம் போட்டு இழுத்துக்கிட்டுப் போவும். முகவுரைன்னா ரெண்டு மாலை, ஒரு சொற்படி வாழை என்கிற மாதிரி கதை எழுதுனவர் பத்தி நாலு விசயம் சொல்லிட்டு 'கப்சிப்'ன்னு அடக்கமா வாயை பொத்திக்கனும் தானே.

''என்ன இப்புடி தலையிலே குட்டுரமாதிரி சொல்றீங்க, முகவுரை பத்தி ஒருத்தர் தூக்கலாக பேசினார் கேட்டீங்களா?''

''என்ன சொன்னார்?''

''இப்புடி ஒரு முகவுரையா? அற்புதம் இது எத்தனையோ வருஷம் வாழப்போவுது''

''அடிசக்கை மனுஷன் கதைகளை படிச்சிருக்க மாட்டாரோ?''

''நீர்வை சமூக நோக்கத்துடன் எழுதுபவர். இலக்கியம் சமூக மாற்றத்திற்கான ஆயுதம் என்ற இலட்சியத்தில் இறுகிப்போய் எழுதி வருபவர்.''

''அப்படித்தான் ரொம்பப்பேர் புகழ்ந்து பேசினாங்களே'

''நீர்வைக்கு பொன்னாடை, புகழாடை வேண்டாம், அவர் படைப்புக்கள் பற்றி பேசுங்கள்' என்ற செல்வி ஆரம்பத்திலே சொன்னார். அது மட்டுமில்லாமல் 'வெறி' 'பலி ஆடு' ரெண்டையும் பிடித்து சுவைத்து கொஞ்சம் தோலுரித்தும் காட்டினார்.

''சா! நல்ல கதைகள் பற்றிய சிறந்த கருத்தோட்டம்'

''என்ன பண்ரது நமக்கு துரதிர்ஷ்டம், விழுந்து விழுந்து படித்ததில் நம்மை விழுங்கிக் கொண்டதும் 'வெறி' 'பலி ஆடு' ரெண்டும்தான். கொஞ்சம் பேசலாம் என்று குறிப்பெடுத்து வந்திருந்தால் என்று செல்வி முந்திக் கொண்டார். நல்ல குறிப்புகள் தந்தார். ஆரோக்கியமான தகவல்கள்.

பேராசிரியர் சபா ஜெயராசா, தெ. மதுசூதனன், மு. பொன்னம்பலம், முத்துலிங்கம், ராஜரட்ணம் மாஸ்டர், கலாநிதி ரவீந்திரன், சி. வன்னியகுலம், தெளிவத்தை ஜோசப், தயாபரன் மேலும் பெயர் தெரியாத பலர் என்று ஒரு பட்டாளமே நல்ல சிறுகதைகள் என்ற கருத்தோட்டத்தின் பின்னால் அணிவகுத்து சர்ச்சைக்கும் நமது புனைகதை வளர்ச்சிக்கும் தேவையான உள்ளார்த்தங்களை அலசித்தள்ளினார்கள். அவற்றை இந்த சின்ன பத்தியில் பதிவு செய்ய முடியாது. புத்தகம் தான் போடவேணும்.

கதை சொல்லும் பாணி சிறப்பானது. சொற் சுருக்கம், பொருட் பெருக்கமாக அமைந்திருக்கிறது. அருமை அருமை புதிய பாணி அருமை என்று எல்லோரும் புகழ்ந்து தள்ளினார்கள். அழகியல் புதிய வடிவில் இருக்கிறது என்று பாராட்டினார்கள்.

நிமிர்வு கதை நீண்டுவிட்டது. வாசிப்பதே தலையிடியாக இருந்தது என்றவாறு இராஜகுலேந்திரா ரொம்பவும் அங்கலாய்த்துக் கொண்டார். சிறுகதை என்றால் சிறியதாக இருக்க வேண்டும், சின்ன சின்ன சொற்களாக அமைதல் வேண்டும் என்று தலையிலடித்துக்கொண்டார். இல்லை என்றால் வாசிப்பது கஷ்டமாம். வாசிக்க வேண்டும் என்பதற்காக அவசர அவசரமாக வாசிக்கின்றபோதுதான் இந்த சங்கடப்பாம்பு தலைதூக்கி நடனமாடும். எழுதப்பட்ட சிறுகதையின் அழகியலை உள்வாங்கலோடு வாசிக்கின்றபோது இந்த பாம்பு நடனம் அடங்கிப் போகும். ''ஏனப்பா! இந்த அந்தரம். அமைதியாக வாசிக்கலாமே''

நீண்ட காலமாக எழுதிவருபவர் நீர்வை. அவருடைய சமூக நோக்கும், இலக்கிய பிரக்ஞையும், கருத்தியல் நிலைபாடும் வெளிச்சமானது. அத்தகைய ஒரு படைப்பாளியின் ஆக்கங்கள் குறித்த ஆழமான திறனாய்வு முக்கியமானது. அவை சமகால பிரச்சினைகளை எவ்வாறு அலசுகின்றன. ஆக்கங்களின் அழகியல் எவ்வாறு அமைகின்றன என்ற ஆய்வு எமது இளம் தலைமுறைக்கும் சிறுகதையின் நவீன பக்குவத்திற்கும் பெரிதும் வழிவகுக்கும். சமூக முரண்பாடுகளை, வர்க்க குணாம்சங்களை படைப்பாளி முன்பாய்ந்து ஆரவாரத்தோடு கெக்கலிட்டுச் சொல்லாமல் 'பூவிற்குள் ஒளிந்திருக்கும் கனிக்கூட்டம் அதிசயம் என்பதுபோல, முட்டைக்குள் மறைந்திருக்கும் குஞ்சின் கரு போல பாத்திரங்களின் யதார்த்த தன்மையில் சங்கமித்து உரையாடல் மண்மணத்தோடு பிரவகிக்கும் போது சமூக பாத்திரங்களின் வர்க்க குணாம்சங்கள் துல்லியமாக மினுமினுப்பு காட்டுகின்றன. சிறுகதை பக்குவமான முதிர்ச்சியுடன் சிறப்பு பெறுகின்றது.

அத்தகைய முற்றிய கதிராக வெறி, பலி ஆடு போன்ற கதைகளைத் தந்து நீர்வை அழகியலில் முதிர்வை எட்டிப் பிடிக்க முனைகிறார். இந்திய எழுத்தாளர் பெருமாள் முருகனின் 'மேடு' என்ற சிறுகதை தலித்தியம் சார்ந்த கதை. இரு பெண்களின் சாதாரண உரையாடல் மூலம் சாதியத்திமிரை அற்புதமாக வெளிக்கொணர்கின்றது' என்று நாம் கதையை ஆரம்பித்த போது டாக்டர், செல்வியின் காதில் கிசுகிசுக்க அவர் சிரித்துக் கொண்டு கைக்கடிகாரத்தை சுட்டிக் காட்டினார். கப்சிப் என்று நாற்காலியில் விழுந்துவிட்டோம்.

'அப்பாடா! மனுஷன் முடிச்சிட்டானே!' என்ற நிம்மதியில் செல்வி பெருமூச்சு விடுவது தெரிந்தது.

கடைசியாக நீர்வை சொன்னார். "நான் சமூக நோக்குடன் எழுதி வருகிறேன். எனது இலட்சியம் சமூக மாற்றம்தான். இத்தகையதொரு கருத்தரங்கை நான் நடத்துவதன் காரணம் எனது குறைபாடுகளை அறியவே. புகழுரைகளை நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நான் எதிர் பார்த்த கருத்துகளோ எனக்கு கிடைக்கவில்லை" இப்படி அமைதியாக அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய உணர்வு நல்லது. அது நமது இலக்கியத்தையும் கருத்தியல் நிலைப்பாட்டையும் செழுமைப்படுத்தும் ஆனால் என்ன செய்ய ரெண்டு மூன்று நிமிடங்களில் எதைத்தான் விலாவரியாக பேசுவது. ரெண்டு செக்கன் தான் ஏதோ கொட்டினோம். அதற்குள் டாக்டர் ஏதோ குசுகுசுக்க செல்வி கைக்கடிகாரத்தைக் காட்டினார். அம்மாடி ரெண்டு வரியில் விசயத்தை முடித்து எல்லோராலும் திருவள்ளுவர் ஆகிவிடமுடியுமா. அதனால்தான் நீர்வையின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லையோ என்னவோ? ஆனால் பலர் பேச்சையும் கிண்டி கிளறிப்பார்த்தால் சுவையான சமாச்சாரங்கள் இருந்ததை பிடுங்கி எடுக்கலாம். "முழுமையான கருத்துக்களை வெளிப்படுத்த ரெண்டு மூன்று நிமிடங்கள் யானை பசிக்கு சோளப்பொரிதான் என்ன நான் சொல்வது" என்று சில வம்பளப்புக்கள் அங்கலாய்த்துக்கொண்டன.

---


திட்டமிட்டுத் தமிழ்பேசும் இனத்தை மாய்க்கத்
தொடருகின்ற பணிகளைநாம் கண்டுங் காணா
வெட்கமற்ற மனிதர்களாய் ஏன்வாழ் கின்றோம்
வரலாற்றை மறந்தோம்நம் பூர்வீ கத்தின்
கட்டமைப்பை மாற்றுகின்றார் சொந்த மண்ணைக்
காவுகொள்ளக் குடியேற்றம் என்ற பேரில்
எட்டாத்தொலைப் பேர்களையும் எம்ம வர்தம்
இனவிகிதம் சாய்க்கவெனக் குவிக்கின் றாரே

வெற்றிலையும் சுண்ணாம்பும் பாக்கும் போல
வாழ்ந்திருந்தோம் தாம்பூலக் கலப்பை யொப்ப
அற்பநலம் கருதியதால் வேறு வேறாய்
ஆனோம்நாம் நமைநாமே அழித்துங் கொண்டோம்
முற்பிறந்தோர் வாழ்ந்தவழி மறந்த தாலும்
மாற்றாரின் சூழ்ச்சிவெற்றி கொண்ட தாலும்
உற்றதென்ப தறிவோம்நாம் இனியென் றாலும்
ஒன்றுபட்டுத் தமிழ்மண்ணை அழிவில் காப்போம்


அரசியலில் சுயநன்மை நோக்காய்க் கொண்டு
அடுத்தவீட்டுக் காரனெமைப் பகடைக் காயாய்
உருட்டுகிறான் வென்றபின்னே திரும்பிப் பாரான்
உலகறிந்த உண்மையிது கால்நூற் றாண்டு
மருங்கிருந்துந் துயர்கண்டு வாழா துற்றோன்
மகுடிக்குள் மயங்காதே நம்முள் நாமோர்
ஒருங்கிணைந்த பந்தத்தை வளர்ப்போம் சேர்ந்தால்
ஒன்றிணைந்த இருப்புவடம் போல்நா மாவோம்

மொழிநம்மை ஒட்டுகின்ற வச்சி ரப்பால்
மனங்கொண்டால் முன்னிகழ்ந்த பழிக ளெல்லாம்
அழிந்தொழிய வழிசெய்யும் தமிழால் நீழ்கை
அணைப்பெடுத்தால் வெற்றியுண்டு மனிதம் ஓங்கும்
இழந்தமண்முன் இழந்தவைதான் இனியென் றாலும்
இருப்பதனைக் காப்பதெனில் இனவே றற்று
விழித்தெழுவோம் குரல்கொடுப்போம் அநீதி கொல்வோம்
வாழ்புலத்தின் உரிமைதனை உறுதி செய்வோம்.

வடபுலமும் கிழக்கும்நம் சொந்தப் பூமி
வரலாற்றுச் சான்றுண்டு வேண்டு மென்றே
அடாவடிகள் செய்கின்றார் துவேஷத் தீயை
அயராது பரப்புபவர் அவர்தமக்கும்
உடமையெங்கள் மண்ணென்றே உளறு கின்றார்
ஒன்றுபட்டால் உறுதிகொண்டால் நமது மண்ணைத்
தொடவிடாது காத்திடலாம் பூர்வீ கத்தைத்
தக்கவைக்கும் கடமைதனின் வாகை கூடும்



குறிஞ்சிநாடன்






நூல் : உடைந்த நினைவுகள்
ஆசிரியர் : 'சமரபாகு' சீனா உதயகுமார்
வெளியீடு : 'மதுரா', அல்வாய் மேற்கு அல்வாய்
விலை : ரூபாய் 200/=

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பணிபுரியும் திரு. சீனா உதயகுமார். இளமையிலிருந்தே கவி படைக்கும் வல்லமை பெற்றவராகத் திகழ்ந்துள்ளார். ஏற்கனவே சில கவிதை நூல்களை வெளியிட்டவர். 'உடைந்த நினைவுகள்' என்ற இந்தக் கவிதை நூலில் ''நெஞ்சுக்குள் நீ'', ''அழகிய தீ'' என்னும் இரு நீண்ட காதல் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. தனக்கென ஒரு வடிவத்தை ஆக்கிக் கொண்டு இப்படைப்பினைத் தந்துள்ளார். கவிதை வரிகள் எளிமையாக உள்ளன. சொற்களே வரிகளாக அமைந்துள்ளமையால் கையில் எடுத்தால் படித்து முடித்துவிட்டு வைக்கவே தோன்றும். இரண்டு காதல் கவிதைகளும் வெற்றி பெறாத காதலாக அமைந்து இதயத்தில் ஆழமான – ஆறாத மனப் புண்ணை தேக்க வைத்துள்ளன.

இந்நூலுக்கு ஆசியுரையை பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ. வரதீஸ்வரன் வழங்கியுள்ளார் அணிந்துரையை திரு. நவநீதன் ஆசிரியர் வழங்கியுள்ளார். இவரது கவிதை வேர்கள் இன்னும் ஆழ ஊடுருவி அகலக்கிளைபரப்பி ஓங்கி உயர்ந்த விருட்சமாகப் பொலிவு பெறும் என்பது திண்ணம் என்று கூறியுள்ளார். இவரது கவிதைகள் தினமுரசு, உதயன், தினக்குரல், சுடரொளி, தினகரன் வலம்புரி, சங்கநாதம், ஞானம், மல்லிகை போன்ற இதழ்களில் இடம் பெற்றுள்ளன. தமிழ் நாட்டு கவிஞர்களான பா. விஜய், மு. மேத்தா, வைரமுத்து போன்றோரின் ஆசிகளைப் பெற்றவர் இந்நூலாசிரியர். காதல் மயக்கத்தில் ஊறும் மொழிகள் கூட பொன் மொழி யாகலாம். போற்றுதற்குரியதாகலாம். இந்த நூலிலும் அப்படியான உரையாடல் – சொற்றொடர் மனதைத் தொடுவதை உணரக் கூடியதாகவுள்ளது.

1. என் சுகங்கள்
   என் சோகங்கள்
   அனைத்தும் பகிர்ந்து கொள்ள
   நீ
   ஒருத்தி மட்டும்

2. காதலர் சாகலாம்
   காதல் சாவதில்லை.

காதல் பற்றிய நுண்மையான உணர்வினை அழகான சித்திரமாகத் தந்துள்ளார் கவிஞர்.

தானாகக் கனியும்
மாங்கனி போன்றது
காதல்

மேற்படி கவிகள் கலாபூர்வமாக அமைவதைக் காணலாம்.


காதல் மோகத்தில் திளைத்து மயங்கிக் களித்த உள்ளம் மேகலாவிற்கு கனடா மாப்பிள்ளை என்றதும் தொல்காப்பியன் நிலை

முக்கனிச் சாற்றில்
மூழ்கித் திளைத்த
என் நினைவுகள்
கொடும் தீயில்
துவளும் நிலையாய்
துவண்டு போனேன்.

என்பது இதய வேதனையை வெளிப்படுத்துகிறது. வடக்கில் நடைபெறும் துர்ப்பாக்கிய நிலையும் கவிதையில் இழையோடுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

வேதனைகள்
கொடுமை கொண்ட
சோதனைகள்
இங்கு
எல்லோருக்கும்
பொதுவுடமையாகின்றன.

என்ற நிதர்சனத்தையும் நாம் மறுப்பதற்கில்லை. ஆர்வத்தைத் தூண்டும் கவிதைகளாக அமைந்து மனதுக்கு நிறைவைத் தருகின்றன.



நூல் : வெற்றியுடன் - கவிதைத்தொகுதி
ஆசிரியர் : சீனா உதயகுமார்
வெளியீடு : கண்ணன் பதிப்பகம் - கொற்றாவத்தை வல்வெட்டித்துறை
விலை : குறிப்பிடப்படவில்லை.

சீனா. உதயகுமார் அவர்கள் 'சமரபாகு' என்ற புனைப் பெயருடன் பல இதழ்களில் எழுதிவருபவர். சமூகப்பார்வை கொண்டவர். அநியாயங்களையும் அக்கிரமங்களையும் கண்டு கொதித்து எழுபவர்; எழுதுபவர். சமூகத்தின் மேம்பாட்டையும் வளர்ச்சியையும் விரும்புபவர்; அதற்காகக் கனவு காண்பவர். அவரது உள்ளக் குமுறல்கள் இத்தொகுதியில் எகிறித் திமிறி எழுந்து நிற்பதையும் தீமையைச் சாடுவதையும் காணக் கூடியதாகவுள்ளன. இவரது ஆக்கங்கள் பல புனை பெயர்களில் பாமதி, பா. விஜய்குமார்,

ராம்சே, லோனி என்று விரிந்து செல்கின்றன. உதயன், வலம்புரி, சங்குநாதம், தினக்குரல், சுடரொளி, மித்திரன், தினமுரசு, ஞானம், மல்லிகை, நீங்களும் எழுதலாம் இப்படி பல இதழ்களில் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

"வெற்றியுடன்..." என்ற இக்கையடக்கப்புத்தகம் 54 கவிதைகளை உள்ளடக்கியது. நூற்றிப் பன்னிரண்டு பக்கங்களைக் கொண்டது. கவிதைகளின் உள்ளடக்கத்தை காட்டும் படங்கள் உள்ளன. கவிதைகள் எளிமையாக யாரும் வாசித்து விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றன. கவிதைகள் நம்பிக்கையை ஊட்டுவதாகவும், சமூகப் பிரச்சனையை பேசுவதாகவும், போரின் கொடுமையால் ஏற்பட்ட அனர்த்தத்தை விளக்குவதாகவும், சமாதானத்தை விரும்புவதாகவும், விதவைகளின் கோரத்தைக் கூறுவதாகவும் அமைந்துள்ளமையை வாசகர்கள் உணரலாம்.

நூலைப்பற்றி பா. விஜய் இவ்வாறு பேசுகிறார். 'சில கவிதைகள் வாசித்தவுடன் நினைவலைகளில் தேன் தூவும்; சில கவிதைகள் எவ்வளவு தான் வாசித்தாலும் புரியாத புதிராய் புன்னகை பூக்கும்; சில கவிதைகள் காற்றலையில் மிதக்கும் பாடல்களைப் போல வாழ்வியலோடு கலக்கும்; நண்பர் உதயகுமாரின் கவிதைகள் மூன்றாவது வகையைச் சார்ந்தது என்று பாராட்டுகிறார்.

அழகான – தெளிவான – அறிவான அணிந்துரையொன்றை கவிஞர். சோ. பத்மநாதன் வழங்கியுள்ளார். 'வெறும் அறிவுரைகள் கவிதையாகா' என்றதுடன் தமிழ்வாணன் உதயமூர்த்தி என்போரை உதயகுமாரின் கவனத்திற்கு கொண்டுவந்தமை கவிஞர் வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கும். "உளர் அப்படித்தான்" என்ற கவிதை எலும்பு இல்லாத நாக்கு வளைந்து வளைந்து பேசி நல்லவர்களையும் தீயவர்களாக்கி விடுகிறது என்பதில் உண்மை இல்லாமல் இல்லை என்பதை உணர்த்துகிறது. காதலைப் பேசும் கவிதைகள் கூடுதல் இடம் பெற்றுள்ளதாகத் தோன்றுகிறது. தூக்கம் வந்தவனுக்கு தலையணையும், காதல் வந்தவனுக்கு அழகும் "தேவையில்லை' என்று கூறும் கவிதை உண்மையை விலாசமிட்டுக் காட்டுகிறது.

புதுமைப் பெண் என்ற கவிதை பின்வருமாறு பேசுகிறது.


துன்பம் வரும் நேரம்
சிரி என்றால் சிலநேரம்
சிரிக்கலாம்
அவள்
எத்தனை பேருக்கென்று
சிரித்திருக்கிறாள்.

நெஞ்சை சுட்டெரிக்கும் வரிகள்.

ஈழத்திருநாடு என்ற கவிதை கூறும் உண்மையைக் காணலாம்.

நீண்ட நாட்கள்
வாழ்க
என்று வாழ்த்திய
இந்து மதக் குருக்கள்
செத்துப் போனார்
ஷெல் பட்டு

இக்கவிதைத் தொகுதியில் சில குறியீட்டுக் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. கவிதைச் சுவைஞர்களுக்கு இது நல்ல தெரிவாக அமையும் என்று கருதுகிறேன்.




*நூல் : திராட்சை ரசம். கவிதை நூல்*
*ஆசிரியர் : உ. நிசார்*
*வெளியீடு : பானு பதிப்பகம் - மாவனல்லை*
*விலை : ரூபாய் 125/=*

எழுத்தாளர் உ. நிசார் அவர்கள் இலக்கிய உலகிற்கு புதியவர் அல்லர். ஏற்கனவே பல படைப்புக்களைத் தந்து பலரது பாராட்டு மொழிகளைப் பெற்றவர். கனவுப் பூக்கள், ஓயாத அலைகள், நட்சத்திரப் பூக்கள், 'வெண்ணிலா', 'மலரும் மொட்டுக்கள்', 'சிறகு விரி' என்பன போன்றவை வெளிவந்து இலக்கிய உலகுக்கு அணி செய்தவையாகும். இப்போது 'திராட்சை ரசம்' என்ற 'ஹைக்கூ' கவிதை நூலை நம்முன் தவழவிட்டுள்ளார் ஐம்பத்தியிரண்டு பக்கங்களில் நூற்று நாற்பது கவிதை மணிகளை உள்ளடக்கியுள்ளார்.

இந்நூலுக்கு முன்னுரை எழுதிய பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பின்வருமாறு முன்மொழிகிறார். உ. நிசார் சிங்கள மொழிமூலம் கல்வி கற்றவர் தமிழ் மொழியை சுயமாகக் கற்றுத் தேர்ந்தவர். திராட்சை ரசம் கவிதைத் தொகுதி அவரது கவித்துவ ஈடுபாட்டைக் காட்டும் ஒரு முயற்சியாக அமைந்துள்ளது. அவரது கவித்துவ ஆற்றலை வெளிக்காட்டும் பல கவிதைகள் இந்தத் தொகுதியில் உள்ளன. கவிஞனுக்கு இருக்க வேண்டிய சொற்செட்டு கருத்தாழம், சமூக நோக்கு சமூக விமர்சனம் போன்றவை இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள கவிதைகளில் படிந்துள்ளன. அழகான ஓவியங்களும் இணைந்து கவிதைகளுக்கு மேலும் மெருகேற்றுகின்றன. இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள கவிதைகள் 'ஹைக்கூ' சாயலில் இடம் பெற்றுள்ளன. காலப் போக்கில் 'ஹைக்கூவின்' கவிதை வளம் கவிஞரின் கைகளுக்கு ஒத்திசைந்து வரும் என்று எதிர்பார்க்கலாம் என்று தமிழ்த்துறைத்தலைவர் கூறியுள்ளார்.

அழகான அட்டைப்படம். இருமுகங்களுக்கு இடையே சாடியில் திராட்சைப் பழக் கொத்து.

சில கவிதைகள்.

கூட்டுப்புழு கனவு
நனவாகிறது
வண்ணத்துப் பூச்சி

பறிக்கும் போதும்
சிரிக்கின்றன
பூக்கள்

எண்ணெய் முடிய
எரிகிறது திரி
ஆசை

ஒளிவெள்ளத்தில்
உடல் கரைகிறது
மெழுகுவர்த்தி

உளிதரும் வலியைத்
தாங்குகிறது கல்
சிலையொன்று

# வாசகர் பேசுகிறார்

கார்த்திகா பாலசுந்தரம் ஞானம் இலக்கியப் பண்ணையில் அறிமுகமாகி தனது உணர்ச்சி பூர்வமான எழுத்துக்கள் வாயிலாக பல பரிசில்களையும் தட்டிக் கொண்டவர். சென்ற தடவை 'பூபாளராகங்கள்' சிறுகதைப் போட்டியிலும் பரிசு பெற்று தினக்குரல் பத்திரிகையின் முழுப்பக்கத்திலும் அவரது சிறுகதை இடம் பிடித்த போது அவர் பற்றிய எனது நல்லெண்ணம் ஒரு படி மேல் போயிருந்தது. ஆனால் நன்றாக கதை சொல்லக் கூடிய வளர்ந்து வரும் ஒரு பெண் எழுத்தாளரின் விரல் விட்டு எண்ணக் கூடிய சிறுகதைகளை தொடர்ந்து வாசிக்கும் போது எனது மனதில் ஒரு நெருடல் ஏற்பட்டுக் கொண்டே வந்தது...

எந்த ஒரு வளர்ந்து வரும் எழுத்தாளரும் தரமான நிறைய நூல்களை வாசிப்பவராகவும் சமூகத்தோடு நெருங்கி உறவாடி மக்களின் துன்ப துயரங்களை விலாவாரியாக தெரிந்து கொள்பவராகவும் இருக்க வேண்டும். பல்வேறு களங்களில் வேறுபட்ட பிரச்சனைகளை மையமாகக் கொண்டு கதைகளை நகர்த்துவதன் வாயிலாக கதாசிரியர் தனது பரந்த அறிவையும் ஆளுமையையும் வாசகர்களுக்கு உணர்த்த வேண்டும்.

கார்த்திகா பாலசுந்தரம் சிறுகதைக்கு மிக மிக அவசியமான விவேகம் வெளிப்பட கதை சொல்பவராக இருக்கின்ற போதிலும் அவர் விடுகின்ற பெரிய தவறு 'குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவது' ஆகும்!

அவரது களம் வடமராட்சி, வல்லை, புத்தூர், இருபாலை, முத்திரைச் சந்தி எனவும் கதைக்கான கரு தற்போதைய அசாதாரண சூழலில் இராணுவத்தால் பெண்கள் எவ்வாறு துயர் அடைகின்றார்கள் என்பதாகவும் மட்டுமே அமைந்துள்ளது!

பூலோக மயப்பட்ட இன்றைய சூழலில் எழுத்தாளர்கள் வாசகர்கள் புதுப் புதுக் களங்களினூடு அறிவுசார் பிரச்சனைகளையும் தீர்வுகளையும் வெளிக்கொணர கடமைப்பட்டுள்ள கால கட்டத்தில் கார்த்திகா பாலசுந்தரம் மட்டுமன்றி வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்கள் அனைவருமே தமது தரமான படைப்புக்கள் வாயிலாக ஈழத்து இலக்கியத்துக்கு புத்துணர்வு ஊட்ட முன்வர வேண்டும் என்பதே எனது ஆதங்கம்.

**திருமலை. வீ. என். சந்திரகாந்தி**

***

ஞானம் வைகாசி இதழை வாசித்தேன். தமிழ் மக்கள் படும் சொல்லொணாத் துன்பங்கள் பற்றி ஆசிரியர் தலையங்கம் மூலமும் ''அடக்கி ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுப்பதை மாக்சியம் மறுத்து நின்கின்றதா'' என்ற தலைப்பிலான கட்டுரை மூலமும் தெளிவுபடுத்தியமை மிகவும் நல்ல விடயம். இது பற்றிய எனது எண்ணங்களையும் இவ்விடத்தில் பதிவு செய்து கொள்வது பொருத்தமாக இருக்குமென எண்ணுகிறேன். ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை எவ்வாறு வென்றெடுக்கலாம் என்பதை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து நுல்களை எழுதியவர் ஜெர்மனிய யூதரான கார்ள் மாக்ஸ் என்பவர். இவர் உருவாக்கிய கொள்கைகள் தான் இன்று மாக்சிஸம் என்று அழைக்கப்படுகின்றது. ரஷ்யாவில் 'சார்' என்ற கொடுங்கோல் அரசினால் வதைக்கப்பட்ட மக்கள் ஒன்றுதிரண்டு வெகுண்டெழுந்து லெனின் என்ற மகாபுருஷரின் வழிகாட்டுதலுடன் புரட்சி செய்து கம்யூனிஸ ஆட்சியை நிறுவினார்கள். தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டை உருவாக்கி அதனைத் தமது அரசமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கிய பெருமையும் ரஷ்ய கம்யூனிஸ்டுகளையே சாரும். ஆனால் சர்வதேச முதலாளித்துவ சதிகாரணமாக சோவியத் நாட்டில் கம்யூனிஸம் தவிடு பொடியாக்கப்பட்ட பின்னர் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடும் ஆதரிக்க யாருமின்றி அம்போ என்று ஆகிவிட்டது. இந் நிகழ்ச்சி இன விடுதலை போராட்டங்களுக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்திவிட்டது.

சீனத்து மாசேதுங் மக்கள் புரட்சிக்குத் தலைமை ஏற்று 1949ம் ஆண்டில் சீனாவில் கம்யூனிஸ ஆட்சியை நிறுவினார். ஆனால் அவரின் மரணத்தின் பின்பு ஆட்சிபீடம் ஏறியவர்கள் படிப்படியாக கம்யூனிஸத்தைக் கைவிட்டு வருகின்றார்கள். பல்வேறு நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியினரும் கம்யூனிசத்தையும் இனவாதத்தையும் கலந்து மக்களைக் குழப்பியடித்து வருகின்றனர். மக்களைக் குழப்புவதுதானே அரசியல் வாதிகளின் வேலை. எது எப்படி இருந்தபோதிலும் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் உக்கிரமடைந்த நேரத்தில் இலங்கையில் உள்ள தமிழர்களே வாயடைத்துப் போயிருக்க இந்தியாவின் கம்யூனிஸ்ட் கட்சியினரும் திராவிடக்கட்சிகளும் தான் எமக்கு அபயக் கரம் நீட்டிய ஆபத்பாந்தவர்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. ஆனால் யார் என்ன சொல்லியும் போர் நிற்க வில்லைத்தானே. இன்றைய யதார்த்த நிலைவரப்படி எனது எண்ணம் என்னவென்றால் கம்யூனிஸ்ட் நாடுகளோ அல்லது அமெரிக்காவின் தலைமையிலான முதலாளித்துவ நாடுகளோ எமது உரிமைகளைத் தங்கத் தாம்பளத்தில் வைத்துத் தந்துவிடமாட்டார்கள். நாம்தான் நமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். இலங்கையில் இருப்பது மூன்றே மூன்று இனங்கள்தான். இந்த மூன்று இனங்களும் திறந்த மனதுடன் உட்கார்ந்து பேசி நிலையான

தீர்வையும் சமாதானத்தையும் உருவாக்கவேண்டும். அறுபது வருடங்களை வீணாக்கி விட்டோம். மென்மேலும் தாமதிப்பது மென்மேலும் அழிவுகளையே கொண்டு வரும்.

**கா. தவபாலன், கண்டி**

***

ஞானம் ஆசிரியர் அவர்கட்கு...!

ஞானத்தின் மெருகு இதழுக்கு இதழ் கூடிவருவது மகிழ்ச்சி அளிக்கிறது. மே 2009 இதழில் சின்னராஜா விமலன் எழுதிய "ஈழநாடு சிறுகதைகள் குறித்த விளிம்புநிலை அவதான நோக்கும் சில கருத்துநிலை முரண்பாடுகளும்" கட்டுரை சிறப்பாக இருந்தது. இன்றைய காலப்பகுதியில் விமர்சனம் என்றாலே வெறும் ரசிகமணித்தன்மை வாய்ந்த நிலையிலேயே அணுகப்படுகின்றது. இதற்கு மாறாக ஈழநாடு சிறுகதைகள் தொடர்பாக கட்டுரையாளர் தெரிவித்த கருத்து முரண்பாடுகள் நியாய பூர்வமானதாகவும், வித்தியாசமான வாசிப்பனுபவமாகவும் அமைந்தன. மூத்த எழுத்தாளரான செங்கை ஆழியானின் தொகுப்பில் வெளிவந்த நூல் என்பதால் அதை விமர்சிப்பதில் தெளிந்த பார்வையுடனும் மிகுந்த எச்சரிக்கையுடனும் வார்த்தைகள் வரம்பு மீறாமல் எழுதியுள்ளார். படைப்பாளி பற்றி நோக்காது படைப்பை மட்டும் கருத்திற் கொண்டு நூலை விமர்சித்த பாங்கு, துணிச்சல் பாராட்டத்தக்கது.

இந்தக் கட்டுரை மட்டுமல்ல மார்ச் 2009 ஞானம் இதழில் சின்னராஜா விமலன் எழுதிய... "சிறுகதை தொகுப்புக்களின் உருவாக்கமும் முனைப்புப் பெற வேண்டிய விடயங்களும், ஒரு பகிர்வுநிலை உசாவல்" கட்டுரையில் அவரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் எல்லாவற்றிலும் உடன்பட முடியாது போனாலும் அவை சிந்திக்கவேண்டிய விடயங்களே. குறிப்பாக சு.வேயின் படைப்பு பற்றி ஓரிடத்தில் கூறும் பொழுது "ஒரு படைப்பைக்கொண்டு அதன் காலத்தை சரியாக கணிப்பிட முடியாதபொழுது இலக்கியம் காலத்தைப் பிரதி பலிக்கும் கண்ணாடியாக விளங்குகின்றது என்ற கூற்றின் உண்மைத்தன்மை கேள்விக்குரிய தாக்கப்படுவதாகவே எனக்குப்படுகின்றது" என்ற கட்டுரையாளரின் கேள்வி அருமை. இது "இலக்கியம் காலத்தைப் பிரதி பலிக்கும் கண்ணாடியாக விளங்குகின்றது" என்ற கூற்றை பின்நவீனத்துவ வீதியில் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய அவசியத்தை மீளவும் வலியுறுத்தி நிற்கிறது.

அண்மைக்காலமாக சின்னராஜா விமலன் ஞானம் மற்றும் ஜீவநதி இதழ்களில் எழுதிவரும் விமர்சனப்பாங்கில் அமைந்த கட்டுரைகள் ஈழத்திலக்கிய உலகின் கவனிப்புக்குரிய ஒருவராக அவரை இனங்காட்டியுள்ளன. இளந்தலைமுறையினரில் இன்று பலரும் கவிதை, சிறுகதை போன்ற ஆக்க இலக்கியங்களை படைப்பதிலேயே ஆர்வமாய் உள்ளனர். விமர்சனத்துறை பற்றி அநேகமாக கவலை கொள்வதில்லை. எனவே இளந்தலைமுறை எழுத்தாளரான சின்னராஜா விமலன் போன்றவர்கள் ஈழத்து விமர்சனத்துறையில் பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியவர்களுக்குப் பின்னால் நிலவும் தேக்கநிலையை போக்கி தொடர்ந்தும் விமர்சனப்பாங்கான கட்டுரைகளை விசாலித்த பார்வையுடன் எழுத வேண்டும்.

**வே. தர்மராசா, கொழும்பு**

***

## சாகித்தியப் பரிசு

குறிஞ்சித் தென்னவன் கவிதை நூலுக்கு சாகித்தியப் பரிசு வழங்கப்பட்ட விவகாரம் கிளறப்பட்டதும் நல்லதுக்குத்தான். அதனால் தானே சாகித்திய மண்டலத்தில் புதைத்து கிடக்கும் பல ஊழல்கள் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டன.

அதை இன்னும் கொஞ்சம் கிளறினால், இன்னும் பல எலும்புக்கூடுகள் வெளி வரக்கூடும்!

### சாகித்தியரத்தினா விருது

இலங்கையில் சாகித்தியரத்தினா விருது யார் யாருக்கு வழங்கப்பட்டது. என்பதை யாராவது சொன்னால் எழுத்தாளர்களுக்கு நல்லது. சாகித்திய மண்டலத்தில் உள்ளவர்கள் சொல்லக்கடமைப்பட்டவர்கள். அவர்களுக்கு அதைச் சொல்வதில் சங்கடம் இருந்தால், அதை தெரிந்தவர்கள் வேறு யாராவது சொல்லலாம்:

1. சாகித்தியரத்தினா விருது யார் யாருக்கு வழங்கப்பட்டது?
   அவர்களது இலக்கியச் சாதனைகள் என்னென்ன?
2. அவர்களைத் தெரிவு செய்தவர்கள் யார் யார்?

   தெரிவு செய்தவர்களது இலக்கியத் தகுதிகள் என்னென்ன?

இவற்றை தெரியப்படுத்தினால், ஏனைய எழுத்தாளர்களும் அந்த விருதைப் பெறும் வழிவகைகளை அறிந்து, அதைப் பெறுவதற்குத் தீவிரமாக உழைப்பர்!

### எனது இலக்கியச் சாதனைகள்

எமது இலக்கியச் சாதனைகளைத் தான் உங்களுக்குத் தெரியுமே! தெரியா விட்டால், எனது நூல்களைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். 500 நாடகங்கள், எல்லா வகை இலக்கியங்களையும் கொண்ட 24 நூல்கள். மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான 10 நவீன நாடகங்களைக் கொண்ட இமயம் நூலுக்கு மட்டும் சாகித்தியப் பரிசு தந்தார்கள்.

## எனது லட்சியங்கள்

இப்பொழுது இரண்டு லட்சியங்களுக்காகத் தீவிரமாக உழைத்து வருகிறேன்.

1. இலங்கைத்தமிழ் பேசும் பிள்ளைகள் தமிழ் மொழி கற்பதற்காக அரசாங்கத்தினால் வெளியிடப்படும் பாடநூல்களில், நவீன நாடகங்களையும் நவீன இலக்கியங்களையும் இடம் பெறச் செய்தல்.

2. பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படும் நாட்டுக் கூத்துக்களை அகற்றிவிட்டு, அவற்றிற்கும் பதிலாக அங்கே நவீன நாடகங்களைக் கற்பிக்கச் செய்தல்.

இவற்றில் முன்னையதில் ஓரளவு வெற்றி பெற்று விட்டேன். பின்னைய லட்சியத்தை இனிமேல்தான் அடைய வேண்டும்.

எனக்கு சாகித்தியப் பரிசு ஒரு தூசி! இந்த இரண்டு லட்சியங்களையும் அடைவேனானால், இலங்கையில் நாடகமும் தமிழ்மொழியும், கற்பிப்பதற்கு புதிய வழி காட்டினேன் என்று மகிழ்வேன்!

**கலாபூஷணம் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை**

***

ஏப்ரல் 2009 ஞானம் இதழில் கலாநிதி துரை மனோகரனின் எழுதத் தூண்டும் எண்ணங்கள் பகுதியில் மறக்கமுடியாத நகைச்சுவை நடிகர் என்று நாகேஷைப் பற்றி குறிப்பிடுகையில் நெஞ்சில் ஓர் ஆலயம் திரைப்பட பெயர் பட்டியலில் தாய் நாகேஷ் என்று குறிப்பிடப்பட்டிருப்பதாக ஞாபகம் என்று எழுதியுள்ளார். நாகேஷ் நடித்த நாடகம் ஒன்றில் தாய் என்ற கதாபாத்திரத்தில் சிறப்பாக நடித்தார். தாய் என்ற பட்டப் பெயர் சில காலம் அவருடன் ஒட்டிக்கொண்டது. தாய் நாகேஷ் நகைச்சுவைத் திலகம் போன்ற பட்டப்பெயர்கள் அவருக்கு இருந்தாலும் நாகேஷ் என்ற மூன்றெழுத்தைக் கேட்டதும் கவலை மறந்துவிடும்.

பாராட்டத்தகுந்த இசையமைப்பாளர் என்று ஏ.ஆர். ரஹ்மானை பற்றி குறிப்பிடுகையில் எம்.எஸ். விஸ்வநாதன், இளையராஜா ஆகியோரின் இசைக்குழுவில் ஏ.ஆர். ரஹ்மான் பணியாற்றியதாக குறிப்பிட்டுள்ளார். ஏ.ஆர். ரஹ்மானின் தந்தை ஆர்.கே. சேகரின் இசைக்குழுவில் இளையராஜா சிலகாலம் பணியாற்றினார். தனக்கு சந்தர்ப்பம் தந்த சேகருக்கு நன்றி தெரிவுக்குமுகமாக இளையராஜாவின் இசைக்குழுவில் பணியாற்ற ஏ.ஆர். ரஹ்மானுக்கு சந்தர்ப்பம் வழங்கினார்.

வி. ஜீவகுமாரன் எழுதிய கிராமத்துப்பெரிய வீட்டுக்காரி எனும் சிறுகதை நெஞ்சை உலுக்கியது. மிக அருமையான நடையில் கதையை எழுதியுள்ளார்.

**அன்புடன்**
**சூரன். ஏ. ரவிவர்மா**

***

## குறையும் நிறைவும்

''ஞானம்'' சஞ்சிகை ஏனைய இடத்திலுள்ளோரைவிட இரண்டு கிழமைகள் தாமதித்தே யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களின் கைகளில் கிடைக்கின்றது. சிலவேளைகளில் மட்டும் விதிவிலக்காக அமைவதுண்டு. மாற்று ஒழுங்கு ஏதாவது செய்தால் நன்று மார்ச் 2009 இதழில் கருத்தியல் ரீதியாக இரண்டு குற்றங்களை நான் குறிப்பிட நினைத்து பின் பேசாமல் விட்டுவிட்டேன்.

ஒன்று:– வேல் அமுதனின் ''மிருகம்'' என்ற குறுங்கதையில் ''O/L பாஸ் பண்ணாத கரிமுண்டத்திற்கு அழகிய Second class upper clectronic எஞ்சினியரை மணம் முடித்து வைக்க முடியுமா'' என்பது. இத்தவறை மே இதழில் ச. முருகானந்தன் சுட்டிகாட்டியுள்ளமை திருப்தியைத் தருகிறது. சம்பவம் உண்மையெனத் தெரிகிறது. ஆனால் இதை ஆசிரியர் சொல்ல வந்த தேவையென்ன? ஆசிரியர் எங்கே நிற்கிறார்? அது முக்கியமானது. ஒரு கதாபத்திரத்தினூடாக அந்தக் கருத்து வெளிப்பட்டிருந்தாலுங் கூட ஏற்றுக்கொள்ள முடியாத கெட்ட குணாம்சங்களை கொண்ட ஒரு பாத்திரமாகச் சித்தரிக்கப்பட்டவரூடாக வெளிப்பட்டிருந்தால் மன்னிக்கப்படலாம். அப்படியில்லாதபோது ஆக்கியோனும் ஏற்றுக்கொண்ட கருத்தாகவே படுகிறது. இது கண்டிக்கப்படவேண்டியதுதான்.

இரண்டு:– கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் ''பேருக்கு அலைகின்ற பேர்'' என்ற கவிதையில் ''தோட்டி அரியணைக்கு ஆசையுறின் ஆரிடம் போய்ச்சொல்ல'' என்ற வரி மூலம் கவிஞர் என்ன சொல்ல வருகிறார்? தோட்டி ஒருவன் ஆட்சிபீடமேற நினைக்கக்கூடாது என்ற படுபிற்போக்குத்தனமான கருத்தை முன்வைக்க ஒரு பழம்பெருங்கவிஞர் எப்படித் துணிந்தார் என நான் ஆச்சரியப்படுகிறேன்.

அடுத்து ஏப்பிரல் 2009 இதழில் ''ஒரு கிராமத்து பெரிய வீட்டுக்காரி'' என்ற நல்லதொரு சிறுகதையைத் தந்த டென்மார்க் வி. ஜீவகுமாரனுக்கு மீண்டும் எனது பாராட்டுக்கள். இப்படியான நல்ல கதைகள் ஞானத்திற்கு மேலும் மெருகூட்டும்.

மே 2009 இதழில் த. ஜெயசீலனின் ''மீண்டெழல்'' என்ற கவிதையை வாசித்தபோது இளைய தலைமுறையினர் ''ள'' ''ழ'' வித்தியாசங்களைச் சரியாக பயன்படுத்துவதில்லை என்ற கருத்து எனக்குள் வலிமை பெறுகிறது.

''இளகி'' என்பதற்குப் பதிலாக ''இழகி'' என்றும் ''வழமை'' என்பதற்கு பதிலாக ''வளமை'' என்றும் எழுதப்பட்டுள்ளது. பெரிய கட்டுரை, அல்லது ஒரு கதையில் இப்படிப் பிழைகள் எந்த பக்கத்திலிருந்து ஏற்பட்டதாயினும் மன்னிக்கப்படலாம். ஒரு

சிறிய கவிதையில் இப்படியெல்லாம் பிழைகள் ஏற்பட்டதற்கு ''ஞானம்'' ஆசிரியரும் பொறுப்பேற்க வேண்டிய நிலைக்கு உள்ளாகிறார்.

கார்த்திகா பாலசுந்தரத்தின் ''தீட்டு'' சிறுகதை பஸ் பயணங்களின்போது இப்படியான நாட்களில் பெண்ணினம் அனுபவிக்கும் கஷ்டங்களை – அவருடைய நல்ல தமிழில் ''உத்தரிப்புகளை'' மிக யதார்த்தமாக கூறியிருக்கின்றார். தாட்சாயணியும் ஒரு கதையில் இவ்வனுபவங்களை பகிர்ந்தமையை வாசித்ததாக ஞாபகம். ஆனால் அது வேறு களம். வீட்டில் சுவாமியறைக்குள் போகாதவள் கோயிலுக்குள்ளேயே போக வேண்டிய நிர்ப்பந்தம். பொதுவான சாபக்கேடு. எனினும் கதாசிரியர் ஒரு பாத்திரமாக நில்லாது விலகி நின்று கதை சொல்லியாக மட்டும் நிற்கும்போது பேச்சுத்தமிழைப் பாவிப்பது எந்தளவுக்குச் சரியானது என்பதில் எனக்குச் சந்தேகம் உள்ளது. யாராவது தெளிவுப்படுத்தினால் நன்று. அது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலுங்கூட கார்த்திகாவின் பெரும்பாலான கதைகளில் கதைசொல்லும் உத்தி உரைச்சித்திரப் போக்கில் இவ்வாறே அமைவது ஒருவித சலிப்பை ஏற்படுத்துவதைக் குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை.

**கொற்றை பி. கிருஷ்ணானந்தன்**

*(கவிஞர் த. ஜெயசீலனின் கவிதையில் எழுத்துப்பிழைகள் இருக்கவில்லை. அவர் சரியாகத்தான் கவிதையை எழுதியிருந்தார். கணனியில் பிரதி பண்ணும்போது ஏற்பட்ட தவறு சரவை பார்க்கும் கண்களுக்குத் தட்டுப்படாமல் போய்விட்டது., வருந்துகிறோம். – ஆசிரியர்)*

***

கதையின் கரு நல்லதாக அமையுமிடத்து கதையை இலகுவாக நகர்த்தி விடமுடியும் என்பது என் அனுபவம்.

அவ்வகையில் ஒரு கருக்கான தேடலின் முடிவில் அதுவே ஒரு நல்ல கதையைப் பிரசவிக்கும் என்பதற்கு கற்பு என்ற விடயத்தில் புதுமைப் பித்தனின் ''பொன்னகரம்'', ஜெயகாந்தனின் ''அக்னிப் பிரவேசம்'', நீர்கொழும்பில் இருந்து புலம்பெயர்ந்து சென்ற கனகலதா சிங்கப்பூரில் இருந்து எழுதிய ''நாளை ஒரு விடுதலை'' என்பவற்றைக் குறிப்பிடலாம். இங்கு கருவின் ஆதிக்கம் கதையை வழிநடத்த உதவியாக இருந்ததை கூர்ந்து வாசிக்கும் எவரும் கண்டு கொள்ளலாம்.

அவ்வகையில் ஒரு பெண்ணால் மட்டும் உணர்ந்து வேதனையை அனுபவிக்க கூடிய கருப்பொருளைத் தேடி எடுத்த கார்த்திகா பாலசுந்தரத்துக்கு வாழ்த்துக்கள். கதையோட்டத்தில் இன்னும் விறுவிறுப்பையும் சில அழுத்தங்களையும் பிரயோகித்திருந்தால் முதல் மூன்று இடத்துள் வந்திருக்க முடியும்.

**– வி. ஜீவகுமாரன், டென்மார்க்**

# 'ஞானம்' சந்தா விபரம்

**உள்நாடு**

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | : | **ரூபா 50/=** |
| ஆண்டுச் சந்தா | : | **ரூபா 600/=** |
| ஆறு ஆண்டுச்சந்தா | : | **ரூபா 3000/=** |
| ஆயுள் சந்தா | : | **ரூபா 20000/=** |

சந்தா காசோலை மூலமாகவோ, மணியோடர் மூலமாகவோ அனுப்பலாம். மணியோடர் *வெள்ளவத்தை*தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

**இலகுவாக மேலதிகச் செலவின்றி சந்தா அனுப்பும் வழி :-** உங்கள் பகுதியில் உள்ள ஹட்டன் நஷனல் வங்கியில் **T. Gnanasekaran, Hatton National Bank - Wellawatte** நடைமுறைக் கணக்கு இலக்கம் – 009010309024 என்ற கணக்கில் வைப்பு செய்து வங்கி ரசீதை எமக்கு அனுப்புதல் வேண்டும்.

**வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்ப : Swift Code : HBLILKLX**

***அனுப்ப வேண்டிய பெயர்/ முகவரி :***

**T. Gnanasekaran**
**Gnanam Branch Office**
3-B, 46 th Lane, Wellawatte.

**ஞானம் விளம்பர விகிதம்**

| | | |
|---|---|---|
| பின் அட்டை | : | **ரூபா 10000/=** |
| முன் உள் அட்டை | : | **ரூபா 8000/=** |
| பின் உள் அட்டை | : | **ரூபா 8000/=** |
| உள் முழுப்பக்கம் | : | **ரூபா 5000/=** |
| உள் அரைப்பக்கம் | : | **ரூபா 3000/=** |

| *வெளிநாடு* | ஓராண்டு | இரண்டு ஆண்டு | மூன்று ஆண்டு |
|---|---|---|---|
| **Australia (AU$)** | **35** | **70** | **100** |
| **Europe (•)** | **25** | **50** | **70** |
| **India (Indian Rs.)** | **500** | **950** | **1400** |
| **Malaysia (RM)** | **50** | **95** | **140** |
| **Canada ($)** | **35** | **70** | **100** |
| **UK (£)** | **15** | **30** | **40** |
| **Other (US $)** | **25** | **50** | **70** |

மூன்று சந்தாதாரர்களைச் சேர்த்துத் தருபவர்களுக்கு ஒரு வருடம் 'ஞானம்' இனாமாக அனுப்பப்படும்.